# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் மூன்றாண்டு அறிக்கை

# 2021-2023

## சுற்றாடல் மற்றும் செயலாற்றல் கணக்காய்வு

உள்ளடக்கம்


| | | | பக்க இலக்கம் |
|---|---|---|---|
| 1. | நிறைவேற்றுப் பொழிப்பு | | 3 |
| 2. | சுற்றாடல் மற்றும் செயலாற்றல் கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்கள் | | |
| | 2.1 | கப்பல்களின் மூலம் இடம்பெறுகின்ற கடல் மாசடதலை தடுப்பதற்காக் நடைமுறைப்படுத்தப்படுகின்ற மார்போல் உடன்பாடு இலங்கையில் அமுல்படுத்துதின் செயன் முன்னேற்றம் | 5 |
| | 2.2 | இலங்கையில் கழிவுநீர் முகாமைத்துவத்தின் வினைத்திறனை மதிப்பிடுதல் | 11 |
| | 2.3 | இலங்கையின் கடற்கரை மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்கள் பாதுகாப்பு | 32 |
| | 2.4 | இலங்கையில் நிலக்கீழ் நீர் முகாமையின் சட்டப்பூர்வ பொறிமுறை மற்றும் அதன் செயல்பாட்டின் மதிப்பீடு. | 44 |
| | 2.5 | அம்பாந்தோட்டை, அநுராதபுரம், வவுனியா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் கணிய வளங்கள் (கருங்கல்) அகழ்விற்காக அரசின் காணியை குத்தகைக்கு வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் அரசிறை அறவிடல் தொடர்பான செயலாற்றல் அறிக்கை | 57 |
| | 2.6 | சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல் | 61 |
| | 2.7 | உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பாதுகாப்பான அரிசித் தொகையினைப பராமரித்தல் மற்றும் சேமிப்புப் பயன்பாட்டின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல் | 63 |
| | 2.8 | பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மரணச் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான மதிப்பீடு | 66 |
| | 2.9 | அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் உதவிகளின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல். | 82 |
| | 2.10 | காய்கறி வித்துககுஞ்களை உள்நாட்டில் உற்பத்தி செய்யும் செயன்முறையின் செயலாற்றல் மதிப்பீடு | 95 |
| | 2.11 | புதிய புதுப்பிக்கத்தக்க மின்சக்தி மூலங்களை அபிவிருத்தி செய்யும் செயற்பாட்டின் மதிப்பீடு. | 102 |
| | 2.12 | உள்ளுர் சந்தையில் தரமான உற்பத்திப் பொருட்களின் விற்பனை தொடர்பாக இலங்கை தரக் கட்டளை நிறுவகத்தின் வகிபங்கு | 106 |
| | 2.13 | உள்ளூராட்சி நிறுவனங்களை மேம்படுத்தும் துறைசார்ந்த செயற்திட்டங்களிலிருந்து (புரநெகும) எதிர்பார்த்த பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளும் செயன்முன்னேற்றத்தினை மதிப்பீடு செய்தல் | 112 |
| | 2.14 | ஒருங்கிணைந்த வீதி முதலீட்டு வேலைத்திட்டத்தின் கீழ் கிராமிய சமூகம் மற்றும் சமூக பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இடையில் வீதி நுழைவினை மேம்படுத்தும் செயலாற்றல் அறிக்கை | 116 |
| | 2.15 | மலைநாட்டு புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் மூலம் தோட்ட மக்களுக்கு | 125 |

| | | | |
|---|---|---|---|
| | | வீடமைப்பு வசதிகளை வழங்கும் செயற்திட்டத்தின் செயலாற்றல். | |
| | 2.16 | கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கான நுழைவுப் பாதைகளில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக உரிய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயலாற்றலை மதிப்பீடு | 138 |
| | 2.17 | அரச நிறுவனங்களிற்கான கட்டிடத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு | 150 |
| | 2.18 | அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள் | 160 |
| | 2.19 | இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தல் | 167 |
| | 2.20 | கொள்கலனுடைய நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு மீதான செயலாற்றல் கணக்காய்வு | 174 |
| | 2.21 | சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு | 176 |
| | 2.22 | லங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் தொகுதியை உச்ச இயலளவில் பயன்படுத்துதல் | 185 |
| | 2.23 | ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் செயலாற்றலை மதிபபீடு செய்தல் | 193 |
| | 2.24 | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தல்- இலங்கையில் வலுவான மற்றும் மீளத்தக்க தேசிய பொது சுகாதார முறைமை (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை 3.ஈ தொடர்பான) தகவல் கோருதல் | 196 |

# 1. நிறைவேற்று பொழிப்பு

## சுற்றாடல் கணக்காய்வு

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் பிரிவு 154(1) ஆம் பிரிவில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் சுற்றாடல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சுற்றாடல் பிரச்சினை அல்லது பொருளாதாரக் கொள்கைகள் அல்லது செயற்திட்டங்கள் உட்பட சுற்றாடல் பிரச்சினைகளை முகாமை செய்யும் போது அவற்றின் செயலாற்றல் தொடர்பாக பொறுப்பான நிறுவனங்கள் செயற்படுவது தொடர்பில் கவனம் செலுத்தி செயலாற்றல் இணக்கம் அல்லது நிதிக் கணக்காய்வு சுற்றாடல் கணக்காய்வு என குறிப்பிடப்படுகிறது.
கழிவுப் பொருட்கள், நீர், காற்று, பல்லுயிர் பெருக்கம், மண் அரிப்பு, நிலத்தடி நீர் குறைவு, நீர் மாசுபாடு, கடல் மற்றும் கடலோர மாசுபாடு, காடழிப்பு, காற்றின் தரம், கழிவுகள் மற்றும் அபாயகரமான கழிவுகள் போன்ற பிரச்சினைகள் இதன் கீழ கலந்துரையாடப்படுகின்றதுடன், செயலாற்றல் கணக்காய்வொன்றிற்கான உள்ள சட்ட ஏற்பாடுகள் உட்பட மற்றும் சர்வதேச கணக்காய்வு நியமங்களின் கீழ் (ISSAI) 5110, 5120, 5130 மற்றும் 5140 ஆகியவை அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

சுற்றாடல் கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான பரிந்துரைகளை கணக்காய்வினால் வழங்க்கபடுவதுடன், அவற்றை செயல்படுத்தும் பொறுப்பு முகாமைத்துவத்தின் உடையதாகும். 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் நான்கு சுற்றுச்சூழல் கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் முன் வைக்கப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கைகளில் மூலம் செய்யப்பட்ட பரிந்துரைகளில் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அமுல்ப்படுத்தாத அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் குறித்து இந்த மூன்றாண்டு அறிக்கையில் கவனம் செலுத்தப்பட்டுன்னது.

## செயலாற்றல் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரமும், 2018 இன் ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரமும் செயலாற்றல் கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது.

பாரம்பரிய நிதிக் கணக்காய்வு, அரச நிறுவனங்களை நிறுவுவதன் மூலம் எதிர்பார்க்கப்படும் நோக்கங்களை முழுமையாக அடையாததால், செயலாற்றல் கணக்காய்வு, ஒவ்வொரு நிறுவனத்தின் வளங்களும் சிக்கனமாகவும் செயற்திறனாகவுவும் பயன்படுத்தப்படுகின்றதா என்பதையும், அந்த நிறுவனம் அந் நிறுவனத்தின் விரும்பிய நோக்கங்களை அடைய வழிநடத்தப்பட்டுள்ளதா என்பதையும் ஆராய்கிறது.

அதன்படி, செயலாற்றல் கணக்காய்வில் நிறுவனம் INTOSAI ஆல் நாளதுவரையாக்கப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் ஒரு சுயாதீன கணக்காய்வை நடத்துகிறது, மேலும் கணக்காய்வில் நிறுவனத்தின் வளங்களை மிகவும் பொருத்தமான மற்றும் திறமையான முறையில் பயன்படுத்தி விரும்பிய நோக்கங்களை நோக்கி நிர்வாகம் நிறுவனத்தை வழிநடத்தியுள்ளதா என்பதை ஒரு சுயாதீன கணக்காய்வு மூலம் ஆராயப்படுகிறது.

செயலாற்றல் கணக்காய்வின் போது அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளை சரிசெய்வதற்கான பரிந்துரைகளை கணக்காய்வு வழங்குகிறது, மேலும் அவற்றை செயற்படுத்துவதற்கு நிர்வாகம் பொறுப்பாகும். 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் நடத்தப்பட்ட செயலாற்றல் கணக்காய்வு தொடர்பாக வெளியிடப்பட்ட 20 கணக்காய்வு அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும் இந்த மூன்றாண்டு அறிக்கை, 2024 திசெம்பர் 31 வரை செயல்படுத்தப்படாத அந்த அறிக்கைகளில் காண்பிக்கப்பட்ட அவதானிப்புகள் மற்றும் பரிந்துரைகள் மீது கவனம் செலுத்துகிறது.

,

## 2. சுற்றாடல் மற்றும் செயலாற்றல் கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 கப்பல்களின் மூலம் இடம்பெறுகின்ற கடல் மாசடதலை தடுப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படுகின்ற மார்போல் உடன்பாடு இலங்கையில் அமுல்படுத்தலின் செயன் முன்னேற்றம்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **அறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை** | **கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 1 | **இலங்கையில் மார்போல் உடன்பாட்டை அமல்படுத்துவதற்கான சட்டரீதியான நிலை** 1978 கூட்டமைப்பால் திருத்தப்பட்ட 1973 இன் கப்பல்களால் கடல் மாசடைதலைத் தடுப்பதற்கான சர்வதேச உடன்பாட்டினை (மார்போல்) இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படுவைதயும், இந்த உடன்பாட்டின் விதிகளை இலங்கையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்திங்குச் சமர்ப்பிக்கும் நோக்குடன 1997 ஜனவரி 10 ஆந் திகதி கப்பற்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சரால் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த விஞ்ஞாபனத்திற்காக 1997 பெப்ரவரி 06 ஆந் திகதியிட்ட அமை/09/ 97/0113/116/005 ஆம் இலக்க அமைச்சரைவை | 2021 | .கப்பல்களால் கடல் மாசடைதலைத் தடுப்பதற்கான மார்போல் உடன்பாட்டை இலங்கையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான உள்நாட்டுச் சட்டதிட்டங்களை இயற்றுவதற்கு விசேட முன்னுரிமை அளித்தல் மற்றும் இந்த சட்டங்களை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான நிறுவனங்களை குறிப்பாக இனங்கண்டு உடன்பாட்டை அமுல்படுத்தி பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | மார்போல் மாநாட்டில் மற்றும் மாநாட்டின் விதிகளை முழுமையாக அதிகாரசபையின் சட்டத்துடன் இணைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அதிகாரசபை சமர்ப்பித்ததுடன் அமைச்சரவை அதை அங்கீகரிக்கவில்லை. துறைமுகங்களுக்குப் பொறுப்பான அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்கள் தொடர்பாக செய்யப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில், இதற்காக பல தொடர்புடைய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன. மீண்டும் ஒரு அமைச்சரவைப் பத்திரத்தை சமர்ப்பிக்குமாறு அமைச்சகத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட | சட்டத்தின் ஆரம்ப வரைவு தயாரிக்கப் பட்டுள்ளது. அடுத்த வரைவு செயற்பாடுகளுக்காக குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது. |

தீர்மானத்தால் அந்த விஞ்ஞாபனத்திற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருநததுடன் அதன் போது மேற்படி விஞ்ஞாபனத்திலுள்ள பின்வரும் 02 பிரேரணைகளிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது.

i. 1978 கூட்டமைப்பால் திருத்தப்பட்ட 1973 இன் கப்பல்களால் கடல் மாசடைதலைத் தடுப்பதற்கான சர்வதேச உடன்பாட்டினை (மார்போல்) ஏற்றுக்கொள்ளல்.
ii. இந்த உடன்பாட்டின் விதிகளை இலங்கையில் அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்டங்களை இயற்றுவதற்காக சட்ட வரைஞர் திணைக்களத்தை பரிந்துரைத்தல்.

இது தொடர்பில் செயற்படக்கூடிய அமைச்சாக கப்பல்துறை, துறைமுகங்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சு குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறித்த அமைச்சரவை தீர்மானத்தின் படி, சட்ட வரைஞர் திணைக்களத்தால் பின்வரும் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தியிருந்ததுடன், அதன்படி கடல் மாசடைதல் தடுப்பு சட்டத்தை திருத்தும் பணிகள் 1997 முதல் 2008 வரை மேற் முதலில் தயாரிக்கப்பட்ட வரைவை மேலும் வரைவாக்குவதற்காக 7 பேர் கொண்ட குழு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், வரைவாக்கப்பட்ட முன்மொழிவனை அமைச்சரவையில் சமர்ப்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அமைச்சரவை விடய பொறுப்பு மற்றும் நிறுவனங்களின் ஒதுக்கீடு அரசாங்கக் கொள்கை முடிவுகளின் தீர்மானத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுதுடன், மேலும் அதற்காக இந்த அதிகாரசபையிடமிருந்து எந்தக் கருத்துகளோ அல்லது பரிந்துரைகளோ பெறப்படுவதில்லை. இருப்பினும், சட்டத்தின் விதிகளின் பிரகாரம், அந்தக் காலகட்டத்திலும் கடல் மாசுபாட்டைத் தடுக்க அதிகாரசபை நடவடிக்கை எடுத்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி, 2008 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க கடல் மாசடைதல் தடுப்புச் சட்டம் 2009 ஜனவரி 01 ஆம் திகதி முதல் புதிய சட்டமாக செயற்படுத்தப்பட்டது. அதன்போது மார்போல் உடன்பாட்டை முழுமையாக அமுல்படுத்துவதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 2 | சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) செயற்பாடுள்ள உறுப்பினராக செயல்படுதல். இந்த அமைப்பில் செயற்பாடுடைய உறுப்பினராக இருப்பதன் மூலம் பிராந்திய மற்றும் தேசிய ரீதியில் கப்பல் பயணங்களின் போது ஏற்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் சவால்கள் குறித்து சர்வதேச சர்வதேச அவதானத்திற்கு கொண்டுவர முடிவதுடன் அதற்காக பொதுவான உடன்பாடுகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலம் சர்வதேச நியதிச்சட்டங்கள் மற்றும் உடன்பாடுகளை தயாரிக்கையில் அதற்காக உள்நாட்டுப் பங்களிப்பை வழங்குவதற்கும் இந்த அமைப்பில உறுப்பினராக இருப்பது முக்கியமானதாகும். அதன்படி, இலங்கை இந்த அமைப்பில் உறுப்பினராக இருந்த போதிலும், | 2021 | இலங்கையை சர்வதேச கடல்சார் அமைப்பின் (IMO) செயற்பாடுடைய உறுப்பினராக்க நடவடிக்கை எடுத்தல்.කිරීම | இலங்கை சர்வதேச கடல்சார் அமைப்பில் உறுப்புரிமையைப் பெற்றுள்ளது, மேலும் இலங்கையில் அதன் மையப் புள்ளி (Focal point) துறைமுகங் கள் மற்றும் கப்பல் போக்குவரத்து அமைச்சின் கீழ் உள்ள வணிகக் கப்பல் போக்குவரத்து பணிப்பாளரின் செயலகமாகும். மேலும், கடல் மாசுபாட்டைத் தடுப்பதற்கும் கடல் சூழலைப் பாதுகாப்பதற்கும் சர்வதேச கடல்சார் அமைப்பில்இலங் கையின் உறுப்பினர் என்ற வகையில் அந்த அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்ப | சர்வதேச கடல்சார் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்ப டும் கப்பல் மூலம் மேற்கொள்ளப்படும் கடல்சார் சுற்றாடலை மாசுபடுவதை தடுப்பதற்குரிய நியதிகள் இந்த அதிகார சபை கூட்டணிகளை அடையாளம் கண்டு அவற்றில் உறுப்பினர் களைப் பெறுவதற்குச் செயல்பட்ட போதிலும், அந்த ஒப்பந்தங்கள் மற்றும் கூட்டணிகளின் விதிகளை உள்நாட்டுச் சட்டத்தில் இணைக்காமல் அது ஒரு தரப்பினராக மாற முடியாது. அதன் பிரகாரம், சம்பந்தப்பட்ட விதிகளுடன் சட்டத்தைத் திருத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் |

செயற்பாடுமிக்க பங்களிப்பை வழங்குவதன் மூலம் சேது சமுத்திரத்தில் கடல் மையமாக காணப்படுகின்ற இலங்கை எதிர்கொள ளும் பிரச்சினைகளையும், எதிர்காலத்தில் இலங்கையின் கப்பல் போக்குவரத்தில் முக்கிய பங்கு வகிக்க வேண்டியதன் அவசியத்தையும் ஒப்புக கொள்வதற்கு இது உதவும். எவ்வாறாயினும், சமீபகாலமாக இந்த அமைப்பில் செயற்பாடுடைய உறுப்பினராக பங்களிப்பதன் மூலம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் மற்றும் தேவையான அபிவிருத்திகளுக்கு இலங்கையின் பங்களிப்பு திருப்தியற்றது என அவதானிக்கப்பட்டது.

ட்டுள்ள சர்வதேச கடல்சார் அமைப்பு மற்றும் இலங்கையின் கடல்சார் தொழில்துறையின் வளர்ச்சிக்கும் கடல்சார் சூழலைப் பாதுகாப்பதற்கும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. இருப்பினும், சர்வதேச கடல்சார் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்ப ட்ட கப்பல்கள் மூலம் மேற்கொள்ளப்படு ம் கடல் மாசுபாட்டைத் தடுப்பதற்காக தொடர்புடைய மரபுகள் மற்றும் ஒப்பந்தங்கள் அடையாளம் காணப்பட்டு, உறுப்பினர் பெறுவதற்கு அவற்றின் விதிகள் உள்நாட்டுச் சட்டத்தில் இணைக்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் தொடர்புடைய விதிகளுடன் கூடிய சட்டத் திருத்தம் இன்னும் அமைச்சரவையின் அங்கீகாரம் இதுவரை கிடைக்கவில்லை எனபதுடன் மேலும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் மீண்டும் ஒருமுறை விவாதித்து அமைச்சரவையின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்து

கோரப்பட்ட போதிலும், அங்கீகாரம் பெறப்படவில்லை. மீண்டும் ஒருமுறை, தொடர்புடைய நிறுவனங்கள் கலந்துரையாடப்பட் டு அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக பெற்ற பிறகு .அதற்காக நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அங்கீகாரம் கிடைத்த பின் நடவடிக்கை எடுக்கப்படும். அவ்வாறே அனைத்து சர்வதேச சமுத்திர அமைப்புடன் கூடிய ஒருங்கிணைப்பினை உறவுகளை மேம்படுத்திக் கொள்வதற்காக நிறுவனத்தால் நடத்தப்படும் குழுக் கூட்டங்களில் கலந்து கொண்டது அந்த அமைப்பின் புதிய நடவடிக்கைகள் தொடர்பாக அறிவூட்டுதல் தொடர்பாக உறுதியாக செய்ய வேண்டும். எவ்வாறாயினும் அத்தகைய நடவடிக்கைகளுக்கு பணம் செலவழிக்கப்படுவதற்கு இருக்கும் சுற்றறிக்கைகளின் பிரகாரம் மேற்கொள்ள முடியாது. | |
| 3 | **ஒப்பந்த ரீதியான மீட்டெடுப்பாளராக செயல்படுதல். (Contractual Salvor)**<br><br>கப்பலொன்றுக்கு ஏற்படக்கூடிய திடீர் விபத்துக்களின் போது அக்கப்பலைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கையில் ஒப்பந்தரீதியான மீட்பாளராக கப்பலிற்கான Hull and Machinery Insurance | 2021 | ஒரு சட்டபூர்வமான பாதுகாவலாரக (Statutory Salvage) செயற்படு வதற்கான திறனைக் கருத்தில் கொண்டு, தேடல் மற்றும் மீட்புக்காக (Search and Rescue) இது போன்ற தொழில்களை அமைப்பதற்கான சாத்தியம் குறித்து கவனம் செலுத்துதல். | ஒரு சட்டபூர்வமான பாதுகாவலாரக (Statutory Salvage) செயற்படு வதற்கான திறனைக் கருத்தில் கொண்டு, தேடல் மற்றும் மீட்புக்காக (Search and Rescue) இது போன்ற தொழில்களை அமைப்பதற்கான | Salvage Convention மற்றும் Search and Rescue இந்த மரபுகள் பாதுகாப்பு மற்றும் பாதுகாவல் தொடர்பானவை, அவற்றை செயல்படுத்துவது வணிகக் கப்பல் செயலகத்தின் பொறுப்பாகும். அதன்படி, அந்த |

| | | | |
|---|---|---|---|
| இன் கீழ் மீட்பு நடவடிக்கைகளின் செலவை மீள அறவிடுவதற்கு முடிந்திருக்கும். ஆனால் இலங்கை மீட்டெடுப்பு உடன்பாட்டின் (Contractual Salvor) ஒரு தரப்பாக இருக்கவில்லை. ஒரு சட்டரீதியான மீட்பாளராக செயல்படுவதன் மூலம் ஆபத்து ஏற்பட்டால், அதிக செயல்திறன் மிக்கதாகவும், சுற்றுச்சூழல் நட்புடனும், இலங்கை தனது ஆரம்ப பணிகளை ஒரு சட்டரீதியான நடுவராக நிறைவேற்ற முடியும். வர்த்தக கப்பல் சட்டத்தின் விதிகளின் பிரகாரம் இலங்கை சட்டரீதியான நடுவராகச் செயல்படுவதற்கான எதிர்கால திட்டங்களில் ஏற்பாடுகளை உள்ளடக்குதல் ஒரு முதன்மை பணியாக காணப்பட்ட போதிலும், அத்தகைய தூர நோக்கில் செயற்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | சாத்தியம் குறித்து கவனம் செலுத்துதல். | மாநாடுகளில் ஒரு தரப்பாக மாறி அவற்றை செயல்படுத்த செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.2 இலங்கையில் கழிவுநீர் முகாமைத்துவத்தின் வினைத்திறனை மதிப்பிடுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | **சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல்** கணக்காய்வின் போது பௌதீக ரீதியாக பரிசோதிக்கப்பட்ட 17 வைத்தியசாலைகளில்,02 வைத்திய சாலைகள் திருகோணமலை மாவட்ட வைத்திய சாலைகள், பொலன்னருவ வைத்தியசாலைகளால் சுற்றடால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், கதிர்காமம் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மத்தேகொட வீடமைப்புத் திட்டத்துடன் தொடர்புடைய கழிவு நீர் சுத்திகரிப்பு | 2021 | 1.அனைத்து மருத்துவ மனைகள் மற்றும் அனைத்து கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங் களுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் | <u>சுகாதார அமைச்சு</u> பேராதனை போதனா வைத்தியசாலை, கண்டி போதனா வைத்தியசாலை, கத்தளாய் ஆதார வைத்தியசாலை, நுவரெலிய, மாவட்ட வைத்தியசாலை, திருகோணமலை மாவட்ட வைத்தியசாலை, மாத்தறை, மாவட்ட பொது வைத்தியசாலை, பதுளை பொது வைத்தியசாலை, மற்றும் திஸ்ஸமஹராம வைத்தியசாலைகளால் சுற்றடால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்ட வைத்தியசாலையின் கழிவுதொகுதி முறைமையில் சிக்கலொன்றினால் சுற்றடால் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொண்டிருக்கவில்லை | 31.12.2023 இல் உள்ளவாறு 362 அரச வைத்திய சாலைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களுக்கு புதிதாக விண்ணப்பித்துள்ள மேலும் 17 அரசு வைத்தியசாலைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. |

முறைகளுக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொண்டிருக்காமை மற்றும் அத்தகைய நிலையங்களால் சுற்றுச்சூழலுக்கு வெளியேற்றப் படும் கழிவு நீரினால் சுற்றுச் சூழலில் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் போதுமான பின்தொடர்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

குடிமக்களின் உடல் நலம் மற்றும் நல்வாழ ்வுக்காக அதிக பங்களிப்பை வழங்குகின்ற இலங்கையின் வைத்தியசாலை முறைமைக்கு அதிகூடிய பாதுகாப்பை

பொலன்னருவை மாவட் பொது வைத்தியசாலையில் சுற்றாடல் பாதுகாப்பு பத்திரம் கழிவு முறைமையின்

**<u>மத்திய சுற்றாடல் அதிகார சபை</u>**

1. அரச வைத்தியசாலைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் மற்றும் அட்டவணைப்படுத்தப் பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப் பத்திரம். பெறற்றுக் கொள்வதற்காக அரசு வைத்தியசாலைகளைப் பரிந்துரைக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சின் செயலாளருக்கு 2022.02.29 ஆம் திகதி aernv/epcm/04/03/06/890YD ஆம் இலக்க கடிதம்.

2. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் திட்டமிடப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தைப் பெறாத மற்றும்

வழங்குவதற்காகவும் அதன் மூலம் அவற்றை சர்வதேச தர நிலைக்கு கொண்டு வருவதற்காகவும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மத்திய சுற்றாடல் அதிகா ரசபையினதும் வைத்தியசாலை அதிகாரிகளினதும் கவனம் போதியளவில் இல்லாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

அத்தகைய அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கான தேவைகளைப் பூர்த்தி செய்யாத ராகம வைத்தியசாலை, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை மற்றும் அனுராதபுரம் போதனா வைத்தியசாலை ஆகியவற்றில் தலையிட்டு நடவடிக்கை எடுத்தல்.

i. அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை வழங்குவதில் தலையிடுதல்.

ii. சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் பெறாமல் வைத்தியசாலையை நடத்தியதற்காக சிலாபம் வைத்தியசாலைக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தல்.

iii. பேராதனை

போதனா வைத்தியசாலை மற்றும் கண்டி போதனா வைத்தியசாலைகளில் உருவாகும் கழிவுநீரை கண்டி மாநகர கழிவுநீர் முகாமைத்துவ முறைமைக்கு அனுப்புதல்.

iv. பொலன்னறுவை மாவட்ட வைத்தியசாலையில் மருத்துவக் கழிவு முகாமைத்துவயின் சிக்கலான நிலை மற்றும் மருத்துவக் கழிவுகளை எரிக்க நிறுவப்பட்ட எரியூட்டியின் செயல்திறன் குறித்து பொதுமக்கள் அளித்த முறைப்பாடு காரணமாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. 2024.06.25 ஆந் திகதி வெளிக கள ஆய்வு நடத்தப்பட்டது. வைத்தியசாலையால் உற்பத்தி செய்யப்படும் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைக்கு

அனுப்பப்படுகிறது. மாத்தறை பொது வைத்தியசாலை மற்றும் கந்தளாய் ஆதார வைத்தியசாலைக்கு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

v. கதிர்காமம் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீர் தொடர்பான பகுப்பாய்வு அறிக்கை கோரப்பட்டுள்ளது.

vi. பதுளை பொது வைத்தியசாலையின் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் தொடர்பான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாததால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் புதுப்பிக்கப்படவில்லை,அதன் பிரகாரம் அந்த நோக்கத்திற்காக தேவையான பரிந்துரைகள் மற்றும் வழிமுறைகளை வழங்க இந்த அதிகாரசபை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | நடவடிக்கை எடுத்துள்ளது. | |
| **2** | வைத்தியசாலை ஆய்வுகூடக் கழிவுநீரில் கிருமிநாசினிகள், ஆய்வுகூட நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள், உறிஞ்சக்கூடிய கரிமப் பொருள்களைக் கொண்ட எக்ஸ்ரே ஆண்டிமைக்ரோபியல் கலவைகள், பல் அமல்கம் அல்லது ஆய்வக இரசாயனங்கள், அசுத்தங்கள், கதிரியக்க மூலங்கள், இரசம் ஆகியவை நுழையக்கூடிய ஆபத்துக்கள் உள்ளன. எனவே, ஆய்வு கூடங்களால் உருவாக்கப்படும் கழிவுநீரை முன் சுத்திகரிப்புக்கு பரிந்துரைக்கப்பட்ட நிபந்தனைகளாக அடையாளம் காண வேண்டுமாயினும் அவ்வாறு செய்யப்பட்டிருக்காமை. | **2021** | 1.வைத்தியசாலை ஆய்வு கூடங்களால் வெளியேற்றப்படுகின்ற மருத்துவப் பொருட்கள் மற்றும இரசாயன திரவங்களை வெளியேற்றுவதற்கு முன் அவற்றை சுத்திகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்த பின்னர் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைக்கு இணைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | சுற்றுச்சூழல் பாதுகாப்பு உரிமம் மற்றும் திட்டமிடப்பட்ட மேலாண்மை உரிமத்தை வழங்கும் போது தொடர்புடைய நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுகிறதா என்பதை பரீட்சிப்பதாக மத்திய மத்திய சுற்றாடல் அதிகார சபை சரிபார்க்கும் என்று கூறியுள்ளது.<br><br>அமைச்சினால் வரிசை அமைச்சின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கான கழிவுநீர் முகாமை தொடர்பான வழிகாட்டுதல்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கவும் சம்பந்தப்பட்ட அமைச்சின் சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு பிரிவிற்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. | வைத்தியசாலை ஆய்வு கூடத்தின் கழிவு வகைகளை வெளியேற்றும் போது ஒவ்வொரு வகை கழிவுப் பொருட்களுக்காக அட்ட வணைப்படுத்தப்பட்ட கழிவுப் பொருள் முகாமைத்துவ அனுமதிப் பத்திரத்தினதும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தினதும் நிபந்தனைகளுக்கு இணங்க, வெளியேற்றும் நடைமுறைகளை பல வைத்தியசாலைகள் பின்பற்றத் தொடங்கியுள்ளன. |
| **3** | கழிவு நீர் | **2021** | 1.வைத்தியசாலைக | வைத்தியசாலைகளில் | கணக்காய்வு |

| | | | |
|---|---|---|---|
| முகாமைத்துவம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமானதாக உள்ளதுடன் வைத்தியசாலைகளின் அபிவிருத்திக்கு இணையாக ஏற்படுத்தப்பட வேண்டிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயலளவு அதிகரிப்புக்காக சரியானமான தரவுகளை பராமரிப்பதும் முக்கியமானதாக உள்ளது. அதன்படி, பொறுப்பான தரப்பினர் தற்போதைய கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயலளவுகளின் போதாமைகள் குறித்து கவனம் செலுத்தி அதற்குத் தேவையான நிதி மற்றும் பௌதீக வளத் திட்டங்களைத் தயாரித்து அவற்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டிய போதிலும், அவர்கள் | ளின் எதிர்கால அபிவிருத்திக்கு இணங்கும் வகையில் கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமையின் இயலளவை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | எதிர்கால மேம்பாடுகளில் இந்தப் பரிந்துரை தொடர்பில் கவனம் செலுத்தி தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும் தொடர்புடைய அங்கீகாரங்களைப் பெறவும், இது தொடர்பாக வைத்தியசாலைகளுக்குத் அறிவிக்கவும் அமைச்சின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது | பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதற்கேற்ப செயற்பட்டிருக்காமை . | | | | |
| 4 | **.கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்பாட்டின் தன்மை மற்றும் வெளிப்புற சூழலுக்கு கழிவுநீரை வெளியேற்றுவது.** கந்தளாய் வைத்தியசாலையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இயற்கை கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமைக்கு மலக் கழிவுநீரை இணைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இருப்பினும், சுத்திகரிப்பின் பின்னர் கோலிபார்ம் பாக்டீரியாக்களின் அளவை இயலளவு மட்டத்தில் வைத்திருப்பதற்கு தேவையான வழிமுறைகள் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. கழிப்பறைகளின் கழிவுகள் அனைத்தும் குழிகளிற்கு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் குழிகளின் | **2021** | 1. குறிப்பாக மருத்து வமனை கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பாக ஒரு தேசிய கொள்கையை பின்பற்றுதல். | வைத்தியசாலை வளாகத்திற்குள் கழிவுநீர் பாதுகாப்பற்ற முறையில் நிரம்பி வழிவதால் நோயாளிகள் மற்றும் வெளிப்புற தரப்பினருக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைக்க, மேதிகமான கழிவுநீர் மேலதிக பௌசர்கள் மூலம் அகற்றல் இடம்பெறுகிறது. தற்போது பொது சுத்திகரிப்பு அமைப்புடன் இணைக்கப்படாத ஒரே ஒரு அலகு மட்டுமே உள்ளது, மேலும் அது பொது சுத்திகரிப்பு அமைப்புடன் இணைக்கப்படும் வரை, அது கலி வழியாக அகற்றப்படும். **மத்திய சுற்றாடல் அதிகாரசபை** தற்போது, சுகாதார அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலாமைப்பு சபை ஆகியவை வைத்தியசாலைகள் உட்பட சுகாதார சேவைகளை வழங்கும் நிறுவனங்களால் உருவாக்கப்படும் அபாயகரமான கழிவுநீரை | கந்தளாய் வைத்தியசாலையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இணைக்கப்பட்டுள்ளது. **மத்திய சுற்றாடல் அதிகாரசபை** இவ்வழிகாட்டியை தயாரிப்பதற்கு உரிய சுகாதார அமைச்சு மற்றும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலாமைப்பு சபை ஆகியவை இணைந்து செயற்படுகின்றது. **சுகாதார அமைச்சு** எதிர்காலத்தில் கழிவுநீர் வெளியேற்றல் தொடர்பாக ஒரு தேசிய கொள்கையை பின்பற்றுவதற்கு ஆலோசனை வழங்கப்படும் . |

| | | | | |
|---|---|---|---|---|
| இயலளவு போதுமானதாக இல்லாததால் குழிகள் நிரம்பி வழிகின்றன. வைத்தியசாலையின் இரண்டு வார்டுகளில் இருந்து வெளியேறும் கழிவு நீர் எந்த சுத்திகரிப்பும் இல்லாமல் கால்வாய்கள் வழியாக வெளியேற்றப்படுகின்றமையும் அவதானிக்கப்பட்டது. | | | நிர்வகிப்பதற்கான வழிகாட்டுதல்களைத் தயாரித்து வருகின்றன, மேலும் மத்திய சுற்றாடல் அதிகார சபை இதில் ஒரு பங்குதாரராக பங்கேற்கிறது. | |
| **5. எச்சங்களை அகற்றுதல்**<br>2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (பாதுகாப்பு மற்றும் தரம்) பிரமாணங்களின் அட்டவணை 2.3 இனால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வாறு, கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களிலுள்ள எச்சங்கள் ஈரமான தன்மையில் (Wet) இருக்கையில் அவை நச்சுத் தன்மையுடன் காணப்படுவதுடன் சூழலுக்கு நட்பு ரீதியாக அகற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது.பி | **2021** | சுத்திகரிப்பின் பின்னர் எஞ்சுகின்ற சேறு மழை நீரில் கலப்பதைத் தவிர்ப்பதற்காக தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் சகதியினை பாதுகாப்பாகவும் முறையாகவும் அப்புறப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | **மத்திய சுற்றாடல் அதிகாரசபை**<br>சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் மற்றும் அட்டவணைப்படுத்தப்பட்ட கழிவு முகாமைத்துவ அனுமதிப்பத்திரம் சேற்றினை வெளியேற்றுவதற்கு உரிய நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது<br>**சுகாதார அமைச்சு**<br>இது தொடர்பாக தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை அமைச்சகத்தின் கீழ் உள்ள வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபைகளின் கீழ் உள்ள வைத்தியசாலைகளுக்கு வழங்குவதற்கு | வைத்தியசாலை /பொது கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளிலிருந்து உருவாகும் பெரும்பாலான சகதி உலர்த்தப்பட்டு உரமாகப் பயன்படுத்தப்படுகின்றன. |

ன்வரும் சந்தர்ப்பங்களில் சுற்றாடல் நட்பு மற்றும் சுகாதாரமற்ற முறையில் எச்சங்கள் அகற்றப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

i. பொலன்னருவ வைத்தியசாலையின் கழிவு நீர் சுத்திகரிப்பு செயன்முறைக்குப் பின்னர் எஞ்சுகின்ற எச்சங் களிற்காக (Sludge) நிர்மாணிக்கப்பட்டுள்ள உலர்த்தல் படுக்கைகள் (drying beds) மழை காலத்தில் வெள்ளத்தால் முழுமையாக நீரில் மூழ்கின்றமையும் மழை பெய்கையில் எச்சங்கள் நீருடன் கலந்து வடிகாலமைப்பின் ஊடாக கால் வாய்களுக்கு வந்தடைந்து நீர் நிலைகள் மாசடைவதற்கான சாத்தியம் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்

தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்த விடயத்துடன் தொடர்புடைய அமைச்சின் சுற்றுச்சூழல், தொழில்சார் சுகாதாரம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு, அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

கழிவுநீர் அமைப்பு 2024 இல் புதுப்பிக்கப்பட்டது. சுத்திகரிப்புக்குப் பிறகு மீதமுள்ள சேறு சேகரிக்கப்படும் உலர்த்தும் முற்றம், வெள்ளத்தால் ஏற்படும் சேதத்தைத் தடுக்கும் வகையில் தயாரிக்கப்பட்டது. இது மீதமுள்ள சேற்றை பாதுகாப்பாகவும் முறையாகவும் அகற்ற உதவுகிறது. 1975 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட இந்த அமைப்பில், சேற்றை அப்புறப்படுத்த 03 உலர்த்தும் படுக்கைகள் (Drying Bed) நிர்மாணிக்கப்பட்டுள்ளன , மேலும் அவற்றை உலர்த்த இயற்கை சூரிய ஒளி பயன்படுத்தப்படுகிறது. மழைநீர் விழுவதைத் தடுக்க உலர்த்தும் தளங்களுக்கு மழைநீர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டது.<br>ii. மாத்தறை பொது வைத்தியசாலைய ின் கழிவு நீர் சுத்திகரிப்பின் பின்னர் எஞ்சியுள்ள கழிவுகள் திறந்த வெளியில் வெளியேற்றப்படு கின்றன. | | | உறை அல்லது கூரை மேவுகை ஒன்று இல்லை, மேலும் அந்த மழைநீர் வடிகட்டிகள் மூலம் பிரதான கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகளில் மீண்டும் சேகரிக்கப்படுகிறது. சேற்றை உலர்த்தும் தளங்களுக்கு அகற்றுவதை மேலும் எளிதாக்க, கொங்கிரீட் சிலிண்டர்களைப் பயன்படுத்தி ஒரு குழாய் மார்ச் 2024 இல் கட்டப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது | |
| 6 | கதிர்காமம் வைத்தியசாலை ஊடாக வெளியேற்றப்படும் கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக ஒரு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயறபடவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. வைத்தியசாலையின் கழிவுநீரை நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் கீழ் செயற்படும் பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2020 யூன் | 1. | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு ச் சபையால் வழங்குவதற்கு திட்டமிடப்பட்டு ள்ள கழிவுநீர் குழாய் இணைப்புகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுத்தல். | கதிர்காமம் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை மூலம் செயற்படுத்தப்பம் வெளிப்புற கழிவுநீர் அமைப்பு செயல்பாட்டில் உள்ளதுடன், அந்த அமைப்புடன் மேலும் வைத்தியசாலையின் உள் கழிவுநீர் அமைப்பை இணைக்க மொனராகலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.<br><br>**தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை** | இதுவரை எந்தவொரு விண்ணப்பமும் பெறப்படாததால், கதிர்காமம் வைத்தியசாலை கழிவு நீர் அமைப்புடன் இணைக்கப ்படவில்லை என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 26 ஆந் திகதி வரையிலும் உரிய பணிகள் நிறைவடைந்திருக்கவில்லை. கதிர்காமம் வைத்தியசாலை வளாகத்தில் பல்வேறு இடங்களில் கழிவு நீர் வழிந்தோடுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன், வைத்தியசாலையால் உருவாக்கப்படும் கழிவுநீர் சுற்றுச் சூழலுக்கு சாதகமான முறையில் வெளியேற்றப்படாமையால் நிலத்தடி நீர் மற்றும் மேற்பரப்பு சூழலுக்கு ஆபத்து அதிகரித்துள்ளது. | | | புதிய கழிவுநீர் இணைப்பைப் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை சமர்ப்பிக்குமாறு வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக அமைச்சு மட்டத்தில் தேவையான நடவடிக்கைகளை எடுக்க மொனராகலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வைத்தியசாலையில் உள்ள பள்ளங்கள் நிரம்பி வழியும் பட்சத்தில் மொனராகலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கலி பவுசர் சேவை வைத்தியசாலைக்கு பெற்றுக் கொள்ளப்பட்டு செல்லப்பட்டு அகற்றப்படும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்கின்றேன். | |
| 7 | 2018 ஆகஸ்ட் 16 ஆந் திகதி செயற் படத் தொடங்கிய குருநாகல் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் சுமார் 43,000 | 2021 | 1. கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் இயலளவை உச்ச அளவில் பயன்படுத்துவத | இயலளவை முழுமையாக பயனைப் பெற்றுக் கொள்வதற்காக திட்டமிடப்பட்ட அனைத்து | ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித் தனி NPD அங்கீகாரம் பெற்றுக் கொள்வது தேவைப்படுவதால், நிதி ஏற்பாடுகளை செலவிட |

| | | | |
|---|---|---|---|
| பயனாளிகளை உள்ளடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதன்மூலம் எதிர்பார்க்கப்படும் சுத்திகரிப்பு இயலளவு ஒரு நாளைக்கு சுமார் 4500 கனமீட்டர் ஆவதுடன், இது கொழும்புக்கு வெளியே நிர்மாணிக்கப்பட்ட மிகப்பெரிய மலக் கழிவுச் செயற்திட்டமாகும். இங்கே கழிவு நீரை சுத்திகரிப்பதற்காக ஒரு உயிரியல் முறை பயன படுத்தப்படுவதுடன், காற்றோட்டத்தின் மூலம் நுண்ணுயிரிகளின் செயற்பாடுகள் சுத்திகரிக்கப்படுகின்றது.<br><br>இந்த சுத்திகரிப்பு நிலையத்தால் சுத்திகரிக்கப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட நீரின் அளவு ஒரு நாளைக்கு 4500 m3 ஆன போதிலும், 2020 ஜூன் 26 திகதியன்று உண்மையாக சுத்திகரிக்கப்பட்ட அளவு சுமார் 2600 m3 மாத்திரம் ஆகும். இந்த கழிவு நீர் | ற்கு நடவடிக்கை எடுத்தல். | இணைப்புகளையும் வழங்குதல் இயலளைவ மேம்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளதாக என்று தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையால் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முடியாதமையால் இதுவரை அச்செயற் திட்டம் செயல்படுத்தப்படவில்லை. இருப்பினும், 2020 மற்றும் 2024 இக்கு இடையில் 302 கழிவுநீர் இணைப்புகள் வழங்கப்பட்டன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுத்திகரிப்பு நிலையத்தின் முகாமைத்துவத்திற்காக மாதத்திற்கு ரூபா 5 மில்லியன் செலவிடப்படுவதுடன், அதன் இயலளவு முழுமையாக பயன்படுத்தப்படாமல் இருப்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| **08** | **முறைமை செயலற்றிருத்தல்**<br>i வெள்ளவத்தை மற்றும மாதம்பிட்டிய கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமைகள் இரண்டும் செயலற்ற நிலையில் இருக்கின்றமையால், எந்தவொரு சுத்திகரிப்பும் இல்லாமல் கழிவுநீர் கடலில் வெளியேற்றப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இவ்வாறு மலக்கழிவுகளும கழிவு நீரும் நேரடியாக கடலில் வெளியேற்றப்படுகின்றமையால் கடல் மாசுறுவதுடன் காணப்படும் தரம் சீர்குலைவதனால் கடற்சூழல் மற்றும் ஆரோக்கிய ரீதியாக பாதகமான தாக்கம் ஏற்படுவதுடன் அது | **2021** | 1. கழிவுநீர் சுத்திகரிப்பு முறைமைகளில் தற்போது செயலற்ற நிலையில் உள்ள உபகரணங்களை சரி செய்து, சுத்திகரிப்பு முறைமையை திறம்பட பராமரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | இந்த அவதானிப்புகள் தொடர்பாக, மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபை மற்றும் கொழும்பு மாநகர சபையின் அரசாங்க கணக்காய்வுப் பிரிவு ஆகியவை கணக்காய்வுப அவதானிப்புகள் தொடர்பாக பின்வரும் தகவல்களை வழங்கின. வெள்ளவத்தை மற்றும் மாதம்பிட்டிய பம்பியறை நிலையங்களில் முதன்மை சுத்திகரிப்பு செயல்முறை செயற்பாடு இடம்பெறவில்லை. மேற்கூறிய இரண்டு பம்பிங் நிலையங்கள் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புக்கான சுற்றுச்சூழல் பாதுகாப்பு அனுமதிகள் குறித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் செய்யப்பட்ட விசாரணைகளுக்கு | 2024 நவம்பர் 30 வரையில் போதுமான இந்த இரு பம்பியறைகளிலும் ஆரம்ப சுத்திகரிப்பு வேலைகள் இடம்பெறவில்லை. |

சுற்றுலாத் துறையினையும் மோசமாக பாதிக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

**ii கொழும்பு நகரத்தின் கழிவுநீர் முகாமைத்துவம்**

கழிவகற்றல் நிலையங்கள் தொடர்பான அவதானிப்புகளின் படி, கணக்காய்வு சந்தர்ப்பத்தில் மாளிகாவத்த மற்றும் பொறல்ல கழிவகற்றல் நிலையங்கள் செயலற்ற நிலையில் இருந்தன. பொல்வத்த, வெள்ளவத்தை, S8 பீட்டர்சன் லேன், மாதம்பிட்டி, ஹெட்டியாவத்த, ஸ்டேஸ் வீதி, காக்கை தீவு, அகில்லெஸ் சதுக்கம், வோக்ஸ்ஷால் தெரு மற்றும் மாளிகவத்த ஆகிய இடங்களில் உள்ள கழிவகற்றல் நிலையங்கள் உரியவாறு செயல்படாதிருந்தை ம அவதானிக்கப்பட்டன. கழிவுநீர் அகற்றல் பதிலளிக்கும் விதமாக, 2024/03/13 தேதியிட்ட கடிதத்தில் முன்மொழியப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புத் திட்டங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும், எதிர்காலத்தில் அந்த சிகிச்சை முறைகளை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.. 2024 நவம்பர் 30 வரையில் போதுமான பதவியணியொன்று நியமிக்கப்படவில்லை, மேலும் கழிவுநீர் மற்றும் அபாயகரமான தொழில்துறை கழிவு மாதிரிகளின் வரையறுக்கப்பட்ட அளவுருக்கள் மாத்திரமே பரிசோதிக்கப்பட்டன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிலையங்கள் சரியாக செயல்படாததால திடக்கழிவுகளும் நேரடியாக கடலுக்குள் வெளியேற்றப்படுவது அவதானிக்கப்பட்டது. | | | | |
| **9** | **ஆய்வுகூட வசதிகள் இல்லாமை** மாதம்பிட்டிய கழிவகற்றல் நிலையத்தின் கீழ் செயற்படும் ஆய்வுகூடத்தில் வசதிகள் மற்றும் பதவியணியினர் போதுமானதாக இல்லாமையால் வெளியிடங்களிலிருந்து எடுத்து வரப்படுகின்ற கழிவு நீர் (கலிபவுசர்) அனைத்தும் சுத்திகரித்தலின் பின்னர் கடலுக்கு விடப்படுவதற்கு முன்னர் உரிய நியமங்களிற்கு அமைவாக உள்ளனவா என்பது பரிசீலனை ஒன்ற மேற் கொள்ளப் படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக மலக் கழிவுகள் | **2021** | கொழும்பு மாநகர சபையின் கழிவுநீர் அமைப்பு மூலம் கடலுக்குள் வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தை தொடர்ந்து சோதித்தல் மற்றும் அந்த நோக்கத்திற்காக தேவையான ஆய்வுகூட வசதிகள் மற்றும் பதவியணியினர் தேவைகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல். | 2024 நவம்பர் 30 வரையில் போதுமான பதவியணியொன்றை ஆட்சேர்ப்பதற்கு நியமிக்கப்படவில்லை, ஆதலால் கழிவு நீரை கடலுக்கு விடப்படுவதற்கு முன்னர் உரியமாதிரிப் பரிசோதனைகள் மாத்திரம் மேற்கொள்ளப்படுகின்றது. | பரிந்துரைகளைச் செயற்படுத்துதல் மேலும் இடம்பெறவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நேரடியாக கடலுக்கு விடப்படுவதற்கான சந்தர்ப்பம் காணப்படுகின்றது. | | | | |
| **10** | **கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளல்** கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபையால் 2019 திசம்பர் 31 இல் உள்ளவாறு 315 நிறுவனங்கள் நமது கழிவு நீரை கடலுக்குள் வெளியேற்றுவதாக கடல்சார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அதிகாரசபை இனங்கண்டிருந்த போதிலும், அவற்றில் 115 நிறுவனங்கள் அனுமதிப்பத்திரங்களை பெறாமலேயே கழிவு நீரை கடலுக்கு வெளியேற்றுகின்றன என்பதை அவதானிக்க முடிந்தது. கடல்சார் வலய முகாமைத்துவத்தின் முக்கிய நோக்கம் கடல் வளங்களை நிலைபேறான விதத்தில் | **2021** | அனுமதியின்றி கடலில் கழிவுநீரை வெளியேற்றும் தொழிற்சாலைகள் மீது கடல் மாசடைதல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல். | இந்த அதிகாரசபை சுத்திகரிக்கப்பட்ட கழிவுகளை கடலில் வெளியேற்றுவதற்கான அனுமதிகளை வழங்குகிறதுடன், மேலும் பெறப்பட்ட அனுமதிகளின் எண்ணிக்கை 2019 முதல் அதிகரித்துள்ளது. இந்த நோக்கத்திற்காக, அதிகாரசபையின் மாவட்ட அலுவலகங்கள் கடயோர மண்டலத்தில் அமைந்துள்ள ஹோட்டல்கள் மற்றும் தொழிற்சாலைகளை அவதானித்து அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பாக கணகானிக்கப்டுகின்றன. இருப்பினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, சுற்றுலா ஹோட்டல்கள் பெரும்பாலும் 2021 மற்றும் 2022 ஆம் | 2004 ஒக்டோபர் மாதம் 6 ஆந் திகதியில் உள்ளவாறு 200 ஹோட்டல்களுக்கு மாத்திரமே அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

முகாமைத்துவம் செய்வதன் மூலம் மக்களுக்கு பொருளாதார மற்றும் சமூக நலன்களை வழங்குவதாகக் காணப்பட்ட போதிலும், கழிவு நீரை கடலில் வெளியேற்று வதாக இனங்க ாணப்பட்ட மொத்த நிறுவனங்களில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை கடல் மாசடைதலை தடுப்பதற்கான சட்ட விதிகளை பின்பற்றாமையால் கடல் மாசடைதலை தடுப்பதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நிலைபேறான தன்மை அடையா துள்ளமை அவதானிக்கப்பட்டது. இருப்பினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட மந்தநிலை காரணமாக, சுற்றுலா ஹோட்டல்கள் பெரும்பாலும் 2021 ஆண்டுகளில் மூடப்பட்டன. தற்போது நிலைமை ஓரளவுக்கு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது, மேலும் அனுமதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எதிர்காலத்தில். இந்தக் காலகட்டத்தில், அனுமதிப் பத்திரங்களைப் பெறத் தவறியதற்காகவும், கடல் மாசுபாட்டிற்காகவும் ஹோட்டல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மூடப்பட்டன. தற்போது நிலைமை ஓரளவுக்கு இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளது, மேலும் அனுமதிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். எதிர்காலத்தில். இந்தக் காலகட்டத்தில், அனுமதிப் பத்திரங்களைப் பெறத் தவறியதற்காகவும், கடல் மாசுபாட்டிற்காகவும் ஹோட்டல்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது. | | | | |
| **11** | **சுத்திகரிக்கப்படாமல் அகற்றப்படுதல்** 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றுச்சூழல சட்டம் மற்றும் 2008 ஆம் ஆண்டின ் 35 ஆம் இலக்க கடல் மாசடைதல் தடுப்புச் சட்டத்தின் விதிகள் முழுமையாக மீறப்படுகின்றமையா | **2021** | 1. கழிவுநீர் அகற்றல் முதன்மையாக உள்நாட்டில் ஆறுகள் மற்றும் பிற கால்வாய் களுக்கு செலுத்தப்பட வேண்டும், குறிப்பாக கொழும்பு நகர் உள்ளிட்ட | கொழும்பு மாநகர சபைப் பகுதியில் சுற்றுச்சூழல் நிலைமையை மேம்படுத்துவதற்கான செயல் திட்டத்தைத் தயாரித்தல் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவம் தொடர்பாக கொழும்பு மாநகர சபைக்கு தேவையான | கொழும்பு மாநகர சபையால் தேவையான நிதி ஏற்பாடுகளைப் பெற்று பிரதான மலக் கழிவு முறைமையை அமைப்பதற்கு திட்டமிட்டு வருகின்றது. |

| | | |
|---|---|---|
| ல், கொழும்பு நகரில் உருவாக்கப்படுகின்ற ஏராளமான மலக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு வெளியேற்றப்படுவதுடன், இந்த சுத்திகரிக்கப்படாத மலக் கழிவுகள் கடற்கரையிலிருந்து ஒரு கிலோமீட்டருக்கு அப்பால் வெளியேற்றப்படுகின்ற போதிலும், கடலின் இயற்கைச செயற்பாடு மற்றும் அலைகளினால் இக்கழிவுகள் கரைக்கு எடுத்துவரப்படுவதனால் அவற்றிலுள்ள நோய்க் கிருமிகள் கடற்கரைக்குள் பிரவேசிக்கும் அபாயம் உள்ளது. இருப்பினும், கடல் நீரின் தூய்மையை சரிபார்த்து, கடல் நீரின் கலவை குறித்து தேவையான நடவடிக்கை எடுக்கத் தவறியதால், சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் மக்களின் வாழ்க்கையில் ஏற்படும் மோசமான | கடலோர நகரங்களில், முறையான நடைமுறைகள் இல்லாமல் கழிவுநீரை முறையற்ற வகையில் அகற்றும் போது கவனமாக இருக்க வேண்டும், மேலும் அத்தகைய நடவடிக்கைகள் சரியான தரத்திற்கு மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல் | ஒருங்கிணைப்பு ஆதரவை வழங்குதல். காலி முகத்திடல், களனி நதி முகத்துவாரம் மற்றும் பேரே ஏரியைச் சுற்றியுள்ள சுற்றுச்சூழல் நிலைமைகளை மேம்படுத்துவது தொடர்பான கடிதம் |

விளைவுகளை
அகற்றுவதற்கு
பொறுப்பு வாய்ந்த
நிறுவனங்கள்
தேவையான
நடவடிக்கைகளை
எடுத்திருக்க
வில்லை.

## 2.3 இலங்கையின் கடற்கரை மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்கள் பாதுகாப்பு

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | **கயோர பாதுகாப்புச் சட்டம் - சட்ட ஏற்பாடுகள்** 2011 இன் 49 ஆம் இலக்க கடற்கரைப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவச் சட்டத்தின் III இ பகுதியின் 22 (உ) பிரகாரம் 2018 மே 25 ஆம் திகதிய 2072/58 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் வர்த்தமானி அறிவித்தல் மூலம் 12 மாவட்டங்களில் 45 இடங்கள் இவ்வாறு விசேட முகாமைத்துவப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்த | **2021** | கடலோர பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி விசேட கடற்கரை முகாமைத்துவ பிரதேசங்களாக பிரேரிக்கப்பட்ட இடங்களை வெளியிடுதல் ஆலோசனை மன்றத்தின் பணிகளை சட்டத்தின் விதிகளின் பிரகாரம் மேற்கொள்ளல். | கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத் திட்டம் என்பன ஒரு ஒருங்கிணைந்த திட்டமாக உள்ளதுடன் அதன் மூலம் விசேட முகாமைப் பகுதிகள் அடையாளம் காணப்பட்ட போதிலும், தேவையான நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காததாலும்,மற்ற நிறுவனங் களால் அதற்காக வருடாந்த திட்டங்களைச் சேர்க்கத் தவறியமை மற்றும் நிதி ஒதுக்கீடு செய்யாமை காரணமாக .அவற்றை விசேட முகாமைப் பகுதிகளாக அறிவிக்க முடியவில்லை. | அடையாளம் காணப்பட்ட விசேட முகாமைத்துவ பகுதிகளை வெளியிடுவதற்கு முடியாமல் உள்ளது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ப்படுவதற்கு அடையாளம் காணப்பட்ட போதிலும், கணக்காய்வு திகதி வரை அந்தப் பிரதேசங்கள் விசேட முகாமைத்துவப் பிரதேசங்களாக அறிவிக்கப்படவில்லை. இதனால், அந்த பிரதேசங்களை பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 2. | **1940 இன் 09 ஆம் இலக்க தொல்லியல் சட்டம்**<br>i கரையோரப் பகுதியில் அமைந்துள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க அனைத்து இடங்களும் அடையாளம் காணப்பட்டு, அவற்றை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | **2021** | 1. கடலோர வலயங்களில் அமைந்துள்ள தொல்லியல் பொருட்களைப் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல். | நிலையப் பெயர்களாக பிரதேசப் பெயர்களாகச் உள்ளடக்கியமை அடையாளம் காணப்படாத நினைவுச் சின்னங்கள் சேர்க்கப்பட்டதால் சில இடங்களைப் பற்றிய துல்லியமான தகவல்களை வழங்குவது கடினமாக இருந்தது. இவற்றில், 68 இடங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள | கரையோர வள முகாமைத் திட்டத்தின் பிரகாரம் அடையாளம் காணப்பட்ட இடங்களில், 68 இடங்கள் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளன, மேலும் 86 இடங்கள் வர்த்தமானியில் வெளியிட முன்மொழியப்பட்டுள்ளன. 66 இடங்கள் பரீட்சிக்கப்பட உள்ளன, மேலும் 30 இடங்கள் அடையாளம் காணப்படாமல் உள்ளன. |

| | |
|---|---|
| ii. இலங்கை கரையோரப் பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்துவ திட்டத்தின் பிரகாரம் கரையோரப் பகுதிகளில் தொல்பொருள் , வரலாற்று, மத மற்றும் கலாச்சார மதிப்புமிக்க 259 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள போதும். இந்த இடங்களில், தொல்பொருளியல் திணைக்களத்தினால் 2020 நவம்பர் 30 ஆம் திகதி வரை தொல்பொருள் இடங்களாக அடையாளம் காணப்பட்டு, வர்த்தமானி பத்திரத்தின் ஊடாக வெளியிடப்பட்டிருக்கவில்லை. | ன, மேலும் 86 இடங்கள் வர்த்தமானியில் வெளியிட உத்தேசிக்கப்பட்டுள்ளன. 66 இடங்கள் பரீட்சிக்கப்பட உள்ளன, மேலும் 30 இடங்கள் அடையாளம் காணப்படாமல் உள்ளன. |
| iii. திருகோணமலை | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிராந்திய அலுவலகத்தின் மூலம் வழங்கிய பதில்களின் பிரகாரம், 05 தொல்பொருள் இடங்களின் எல்லைகள் வரையறுக்கப்படாமலோ அல்லது வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படாமலோ இருப்பதை அவதானிக்க முடிந்ததுடன் மேலும், சென்பிமலை தொல்பொருள் தளத்துக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு, எதிர்கால தொல்பொருள் களமாக வர்த்தமானியில் வெளியிட முன்மொழியப்பட்டுள்ளது. | | | | |
| **3** | **கடல் நீரின் தரத்திற்கு ஏற்ப வகைப்படுத்து வதற்கான நியமங்கள்**<br>I 1991 ஆம் ஆண்டு நெதர்லாந்து அரசாங்கத்திற்காக மத்திய சுற்றாடல் | **2021** | 1.கடல் நீரின் தர பரிசோதனைக்கான நியமங்களை வழங்குதல் மற்றும் அதன் பிரகாரம்க நடவடிக்கை எடுத்தல். | நீரின் தரத்திற்கான நியமங்கள் இன்னும் வெளியிடப்படாததால், கடல்சார் சுற்றாடல் பாதுகாப்பு அதிகாரசபை தற்போது ASEAN Marian Quality தரத் தரநிலைகளைப் பயன்படுத்துகிறது. | ஆண்டுதோறும் பல கடலோர குளியல் பகுதிகளில் நீரின் ிர் மதிப்பு உட்பட பல அளவுருக்களை தொடர்ந்து பரிசோதித்து, அந்த பெறுமதிகளை நிலையான அபிவிருத்தி பேரவையின் தரவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அதிகாரசபையால் முனமொழியப்பட்ட திட்டத்தில், மேற்கூறிய விடயம தொடர்பான 04 முக்கிய நிகழ்வுகளை உள்ளடக்கி கடல் நீரின தரம் தொடர்பான நியமங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆனால் கணக்காய்வுத் திகதி வரை நியமங்கள் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசித்தப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | | அமைப்பிற்கு உள்ளடக்கப்டுகின்றது. |
| **4** | **கடல் ஆமைகளின் பாதுகாப்பு**<br>பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.<br>i. தனியார் துறையால் நடத்தப்படும் 15 ஆமை பாதுகாப்பு நிலையங்கள் தெற்கு | 1.ஆமை பாதுகாப்பு நிலையங்களை பதிவு செய்வதற்கும் முறையாக ஒழுங்குபடுத்தவும் நடவடிக்கை எடுத்தல் | ஆமைகளைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்காக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம், விலங்கினங்கள் மற்றும் தாவர பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் விதிமுறைகளை வெளியிடு வதற்கு | ஆமை பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒழுங்கு படுத்துவதற்கு உரிய பிரமாணங்களின் இறுதி வரைவை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரிடம் சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

கடற்கரையை அண்மித்து தற்போது இயங்கி வருகின்றன. இந்த தனியார் ஆமை பாதுகாப்பு நிலையங்களின் செயல்பாட்டை மேலும் முறைப்படுத்தி ஒழுங்குபடுத்த வேண்டும், அந்த நிலையங்களை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்து, வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்கி ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்பாடுகளைத் தயாரித்து அவற்றின் கீழ் செயல்பட அனுமதி வழங்குவதன் மூலம் வனவிலங்கு மற்றும் தாவரங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் செயல்முறையைத் தொடங்கியுள்ளது. இருப்பினும், அவ் வரைவுகள் பல சந்தர்ப்பங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டியிருந்த போதும், அமைச்சின் நோக்கங்கள் விடயப் பரப்பு மாறியதாலும், கொள்கை வகுப்பாளர்களால் தகவல் தெரிவிக்க கூடுதலான நேரத்தை எடுத்தமையும் இந்தப் பணிக்காக எதிர்பாராத விதமாக நீண்ட நேரம் செலவிடப்பட்டுள்ளது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்ட விதிமுறைகளை வெளியிடுவதற்காக வனவிலங்கு அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளை அமைச்சரவை அங்கீகரித்திருந்த போதும், அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்டு 4 ஆண்டுகள் கடந்து விட்ட போதும், முன்மொழிவை செயல்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | | | | |
| **5** | **மீன்பிடி துறை முகங்களில் கழிவு முகாமைத் துவம் மீன்பிடி துறை முகங்களில் கழிவு முகாமைத்துவம்**<br><br>**(அ)திடக்கழிவு – திக்ஓவிட்ட**<br>i **பைபர் கழிவுகள்** | **2021** | மீன்பிடி துறைமுகங்களில் இருந்து படகுகள், இழைகள் மற்றும் பிற கழிவுகளை அகற்றுவதற்கான வழிமுறைகளைத் தயாரித்து அதன் பிரகாரம் நடவடிக்கை | மீன்பிடி துறைமுகங்களில் குவித்து வைக்கப்பட்டுள்ள கண்ணாடி இழைக் கழிவுகள் (பழைய கப்பல்கள்) மற்றும் அதன் பாகங்களை அகற்றி மீள் சுழற்சி செய்வதற்கான பல திட்டங்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன, ஆனால் | பைபர் கழிவுகள் முறையாக கைதவிர்ப்பு இடம் பெறுவதில்லை. |

| | | |
|---|---|---|
| **குவிதல்**<br>துறைமுகத்தில் அதிக அளவு சேர்ந்துள்ள கழிவுகள் பைபர் கழிவுகளை அதிக வெப்பத்தில் எரியூட்டுவதன (Incinirator) மூலம் மட்டுமே அகற்ற வேண்டும் என்பதால், இந்த கழிவுகளை துறைமுகத்தில் இருந்து அகற்றப்பட்ட போதும் அதன் பின்னர் அக்கழிவுகளை இறுதியாக அகற்றும் முறைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் பின்தொடர் நடவடிக்கைகள் எதுவும் இடம் பெற்றிருக்க வில்லை.<br>ii. **கைவிடப்பட்ட படகுகள்**<br>படகுகளை பழுதுபார்த்தல் இடைநிறுத்தப்பட்ட 06 படகுகள் தொடர்பாக முறையான | எடுத்தல் | எரியூட்டிகளை வாங்குவதற்கான மிக அதிக செலவு காரணமாக இதுவரை அது சாத்தியமாகவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>iii. **அகற்றப்பட்ட ரெஜிபோம்**<br><br>படகுகளிலுள்ள குளிர்சாதன அறைகளை சீரமைத்தல் காரணமாக பெருமளவில் உருவாகும் இந்த கழிவுகளை படகுகளின் உரிமையாளர்கள் துறைமுகத்திலிருந்து கட்டாயமாக அகற்றுதல் வேண்டிய போதிலும் எனவும் தெரியவந்துள்ளதுடன், அவர்கள் அதை எப்படி அப்புறப்படுத்துகிறார்கள் என்பது குறித்து எந்த பின்தொடர் நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | |
| **6** | மீன்பிடி துறை முகங்களில் இருந்து மணல் அகற்றப்படுவதால் கடலோர | மீன்பிடி துறைமுகங்கள் மூலம் மணல் அகற்றும் முறைகள் | மீன்பிடி துறைமுகங்களில் நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கும் | வழிகாட்டல்களைத் தயாரிப்பது நடைமுறைக்கு சாத்தியமற்றது என்று கூறி, மீன்பிடி |

| | | | |
|---|---|---|---|
| ஸ்திரத்தன்மைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு கரையோர துறைமுகங்கள் மற்றும் அதனுடன அண்மித்த உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை அவற்றுக்காக விசேடமாக நியமிக்கப்பட்ட இடம் அல்லது அருகிலுள்ள கடலோரப் பகுதிகளில் குறிப்பிடத்தக்களவு பாதிப்பை ஏற்படுத்தாமல் இருப்பின அந்தச் செயற்பாடுகளை பாதுகாக்கப்பட்ட பகுதியில் அனுமதிக்க முடிவதுடன், அந்தச் செயற்பாடுகள் அபிவிருத்திக்கான அனுமதிப் பத்திரத்தால் நிர்வகிக்கப்படும். மீன்பிடி துறைமுகங்களை அமைக்கும் போது கடற் கரையில் மணலை அகற்றுவது | குறித்த வழிகாட்டல்களைத் தயாரித்தல், அதற்கேற்ப செயல்படுதல் மற்றும் அவற்றை ஒழுங்கு படுத்துதல். | வகையில் நிரம்பும் மணல் படிவுகளை அகற்ற அனுமதி வழங்கப்படுகின்றதுடன், மேலும் அகற்றப்படும் மணல் முழுமையாக அருகிலுள்ள கடற்கரைகளுக்கு அல்லது எங்களால் நியமிக்கப்பட்ட கடற்கரைகளுக்கு விடுவிப்பதற்கு அறிவிக்கப்ப்டும்.<br>இருப்பினும், எழும் சிக்கல்கள் என்னவென்றால், துறைமுகத்திற்குள் நுழையும் மணலை அகற்றுவதற்கு தொடர்புடைய துறைமுகக் கூட்டுத்தாபனத்திடம் நிதி இல்லை, எனவே தோண்டியெடுக்கப்பட்ட மணலில் ஒரு பகுதியை விற்பனை செய்ய சம்பந்தப்பட்ட விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் பிற நிறுவனங்களுடன் கலந்துரையாடி முடிவு செய்யப்பட்டுள்ளது. வணிக ரீதியாகவும் பணம் திரட்டவும். பெறுகை முடிந்து. | துறைமுகத்தில் நடவடிக்கைகள் பாதிக்கப்படும் வகையில் குவிந்து கிடக்கும் மணலை அகழ்ந்து, அந்த மணலை அருகிலுள்ள கரையில் இடுவதற்கும், பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | எவ்வாறு என்பது குறித்த வழிகாட்டல்கள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை | | மணல் அகற்றப்படும் அளவு மற்றும் விற்பனையாகும் மணலின் அளவைப் பொறுத்து உரிய கட்டணங்களை வசூலித்து அங்கீகாரம் வழங்கப்படுகிறது | |
| **7** | கரையோரப் பகுதி என்பது ஒரு அபிவிருத்திப் பணிக்காக தடை செய்யப்பட்ட அல்லது குறிப்பிடத்தக்க அளவில் தடை செய்யப்பட்ட அத்துடன் கரையோரப் பகுதிக்குள் இருக்கும் புவியியல் பகுதி அல்லது நிலப்பகுதி என அறிமுகப்படுத்தப்படும். எவ்வாறாயினும் மொறட்டுவை பிராந்திய பொறியியல் அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் மாதம் 26 ஆந் திகதி வரை இந்தப் | 1. கரையோரப் பகுதிக்குள் இருக்கும் புவியியல் பகுதி அல்லது நிலப்பகுதி என அறிமுகப்படுத்தப்பட வேண்டும் | நிலப்பகுதியை சமநிலையை பராமரிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. கடற்கரை அணுகல் அறிவிக்கப்பட்டுள்ளது. . | சட்டவிரோத கட்டுமானங்கள் அடையாளம் காணப்பட்டு, விரைவில் உடைத்து அகற்றுவதற்கான கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன, மேலும் இதற்காக பொலிஸ் முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இருப்பினும், மக்கள் பிரதிநிதிகளின் அழுத்தம் காரணமாக, சில அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களை இடிக்க முடியவில்லை. எனவே, தற்போது அதற்கு இணையாக உள்ள அங்கீகரிக்கப்படாத நிர்மாணங்களை அகற்றுவது சிக்கலான விடயமொன்றாக உள்ளது |

பகுதிகளில் அனுமதியற்ற நிர்மாணங்கள் தொடர்பான 110 முறைப்பாடுகளை தொடர்பாக பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதும். அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. கரையோர நில எல்லையின் முறையாக பராமரிக்கப்படாமை காரணமாக மேற்கூறிய பிரகாரம் அனுமதியற்ற நிர்மாணங்கள் மேற்கொள்வதற்கு காரணமாக இருந்தமை அவதானிக்கப் பட்டது.

## 2.4 இலங்கையில் நிலக்கீழ் நீர் முகாமையின் சட்டப்பூர்வ பொறிமுறை மற்றும் அதன் செயறபாட்டின் மதிப்பீடு.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **அறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை** | **கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| **1** | **நிலத்தடி நீர் பாதுகாப்பு மற்றும் பாதுகாத்தல் தொடர்பான தேசிய கொள்கை**<br>இலங்கையில் நீர் வளங்களின் பாவனையின் முகாமைத்துவத்தை அவதானிக்கும் போது மேற்பரப்பு நீர் மற்றும் நீர்த் தேக்கங்கள் மட்டுமல்லாமல் நிலக் கீழ் நீர் ஆதாரங்களின் நிலைபேறான தன்மைக்காக ஆறுகள், நீரோடைகளைப் பாதுகாப்பது பிரதான தேவையொன்றாகும். 1992 ஆம் ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்பட்ட நீர் வளங்களின் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் இலங்கைக்கான நீர்க் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்த | **2022** | 1. இலங்கையின் மாகாணங்களின் பிரகாரம் நிலக்கீழ் நீர் மட்டங்களின் தன்மை மற்றும் தரத்தின் அடிப்படையில் நிலக்கீழ் நீர் கொள்கையை நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்.<br>. | 1 பிரதமர் அலுவலகத்தின் தலையீட்டின் மூலம், நிலத்தடி நீர் தொடர்பாக 2023 ஆம் ஆண்டு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்ட ”இலங்கையின் நீர் வளக் கொள்கை” மேலும் மீளாய்வில் சேர்க்கப்பட வேண்டிய நிலக்கீழ் நீர் பற்றிய பிரச்சினைகள் குறித்து தேவையான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.<br>2 நீர் வழங்கல் அமைச்சு மற்றும் தொடர்புடைய | 1. தேசிய நீர் வளக் கொள்கை தொடர்பாக எதிர் வரும் நடவடிக்கைகளை பிரதமர் அலுவலகத்தின் தலையீட்டின் மூலம், மேற்கொள்ளப்பட்டு வருகின்றது<br>2. தேசிய நீர்வளக் கொள்கைக்கு இணையாக நிலத்தடி நீர் கொள்கை உருவாக்கப்பட வேண்டும் என்பதால், எதிர்காலப் பணிகளுக்காக அமைச்சு தற்போது அதை மீளாய்வு செய்து வருகிறது.<br>3. பிரதேச செயலக மட்டத்தில், இதுவரை மூன்று இலட்சம் நிலத்தடி நீர் ஆதாரங்கள் பற்றிய தகவல்கள் பெறப்பட்டு, மேலும் பணிகள் |

வேண்டியதன் தேவை காட்டப்பட்டிருந்தது. எனினும் இவ்வாறான கொள்கையொன்றினால் எதிர் பார்க்கப்படுகின்ற நோக்கம் 2014 ஆம் ஆண்டு வரை நிறைவேற்றப்பட முடியாமல் போனதுடன் பல வருடங்களின் பின்னர் 2014 ஆம் ஆண்டில் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் மூலம் தேசிய கொள்கை வரைவுகள் உருவாக்கப்பட்டிருந்தது. அதில் நீர் வளச் மற்றும் நீர் நிலைப் பகுதிகளை பாதுகாத்தல் மற்றும் அவற்றிற்கு காப்புறுதியளித்தல் என்பவற்றுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே 2008 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நடாத்தப்பட்ட வேலைத்திட்டங்களில் நீர்க் கொள்கையொன்றை தயாரிப்பதன் முக்கியத்துவம் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இலங்கையில் மாகாணங்களின்

நிறுவனங்களின் தலைமையில் வரைவு செய்யப்பட்ட நிலத்தடி நீர் கொள்கையை உருவாக்குவதற்கான அடிப்படைகள் அடங்கிய அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு, மேலும் நடவடிக்கைக்காக அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3 இலங்கையில் நிலத்தடி நீர் விநியோக வலயங்களை குறிப்பிட்ட விஞ்ஞான அடிப்படையில் அடையாளம் கண்டு, நிலத்தடி நீர் வலையமைப்பு கொள்கையை உருவாக்கும் போது அதற்காக தேவையான நீர் ஆதாரங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதற்கா

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

4. நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவில் ஏற்படும் குறுகிய கால மற்றும் நீண்ட கால மாற்றங்களை ஆய்வு செய்வதற்காக கட்டுமானப் பணிகள் சீரான இடைவெளியில் மேற்கொள்ளப்படுகின்றன

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடிப்படையில் நிலக் கீழ் நீரின் அளவு மற்றும் தரம் என்பவற்றின் அடிப்படையிலான நிலக் கீழ் நீர்க் கொள்கையொன்று வகுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அக் காரணத்தால் நிலக் கீழ் நீர் முகாமைத்துவத்திற்கு உரிய திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் தயாரிக்கும் போது வேண்டுமென்றே அவற்றை செய்ய முடியாமல் போன காரணத்தினால் நிலக் கீழ் நீரை மேலும் எந்த முகாமைத்துவமும் இன்றி பயன்படுத்தும் பின்னனியொன்றை ஏற்படுத்தி இருந்தது. | | | க தேவையான செயற் திட்டங்களை செயல்படுத்துதல். உணர்திறன் நிலத்தடி நீர் வலயங்களில் நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவு (groundwater sensitive areas) தொடர்பான தகவல்களை சேகரிக்க செயற் திட்டங்களை செயல்படுத்துதல்.. | |
| 2. | **பொறுப்புக்களை பகிர்ந்தளித்தல் மற்றும் நிலக் கீழ் நீரின் உரித்து** 1987 இன் 42 இலக்க மாகாண சபைகள் சட்டம் இயற்றப்பட்டதன் பின்னர் நிலக் கீழ் நீர்ப் பிரதேச முகாமைத்துவத்திற்கான பொறுப்பு மாகாண சபைகளின் கீழ் கையளிக்கப்பட்டுள்ளதுடன் 13 ஆவது சீர் திருத்தத்தின் மூலம் | 2022 | 1.நிலக்கீழ் நீர் முகாமைக்கான திட்ட வட்டமான பொறுப்பை உறுதி செய்தல். | 1999 இன் 42 ஆம் இலக்க நீரியல் வழங்கல் (திருத்தச்) சட்டம் மற்றும் 2017 இன் 2010/23 ஆம் இலக்க வர்த்தமானியின் (பின்னிணைப்பு 1) பிரகாரம் நிலக்கீழ் நீர் முகாமத்துவம் தொடர்பான பொறுப்பு நீர் வளச் சபைக்கு கையளிக்கப்பட்டு | 1999 இன் 42 ஆம் இலக்க நீரியல் வளங்கள் (திருத்தச்) சட்டத்தில் உள்ள குறைபாடுகள் காரணமாக, தற்போது மேற்கொள்ளப்படும் ஒழுங்கு படுத்தல் நடவடிக்கைகள் சிக்கல் நிறைந்த சூழ்நிலை ஒன்று எழுந்துள்ளன. எனவே, இந்தச் சட்டம் திருத்தப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்திற்கு |

ஏனைய கனிய வளங்களுக்கான முகாமைத்துவப் பொறுப்பும் கையளிக்கப்பட்டிருந்தது. மேற்படி சட்டத்தின் 13 ஆவது சீர்திருத்தத்தின் மூலம் நிலக் கீழ் நீரின் முகாமைத்துவப் பொறுப்பு முறையாக கையளிக்கப்படாமல் இருந்ததுடன் ஏராளமான காணி உரிமையாளர்கள் தமக்குக் கீழுள்ள பெற்றுக் கொள்ளக் கூடிய நிலக் கீழ் நீரின் அளவைத் தீர்மானிப்பது அவர்கள் மூலமே மேற்கொள்வது அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் காணி உரிமையாளர்கள், முதலீட்டாளர்கள் பொது இடங்களில் நிலக் கீழ் நீரைப் பயன்படுத்துதல் வரையறையின்றி மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் அளவுகோல்களை அடிப்படையாகக் கொள்ளாமல் மேற்கொள்ளப்படுவதால் நிலக் கீழ் நீர் நுகர்வு தொடர்பாக எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய சூழல் தாக்கங்கள் தொடர்பான கவனமொன்றில்லாமல் பயன்படுத்துவதற்கு

ள்ளதுடன் காணப்படும் சட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க நிலக்கீழ் நீர் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்ற து.

சமர்ப்பிக்க நீர் வழங்கல் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இடமளிக்கப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| **3 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வளச் சபை திருத்தச் சட்டம் மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க நீர் வளச் சபை (திருத்தச்) சட்டத்தின் ஏற்பாடுகள்**<br><br>(அ) இதன் பிரகாரம் காடு வளர்ப்பை மேம்படுத்தல், மண் அடுக்கின் நிலைத் தன்மையைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் சட்டத்திலிருந்து விலகி நீர் வளச் சபையின் பிரதான செயற்பாடொன்றான நிலக் கீழ் நீரைப் பாதுகாத்தலை விட நிலக் கீழ் நீரை அபிவிருத்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பது அவதானிக்கப்பட்டது.(ஆ) வெவ்வேறு தேவைகளுக்காக நிலக் கீழ் நீரை எவ்வாறு, எந்த அளவிற்கு எடுக்கலாம் என்பதை தீர்மானித்தல் அத்துடன் மண்ணின் நீர் போசணையை பாதுகாத்து நிலக் கீழ் நீரை உறிஞ்சுவதற்கு ஏற்பாடொன்று செய்யப்படவில்லை என்பது | **1.** நிலக்கீழ் நீரின் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பின் அடிப்படையில் நோக்கங்களை ஏற்படுத்தி செயறபடுத்துகிறது | நிலத்தடி நீரின் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் நிலை பேறான முகாமைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக ஒரு நிறுவன கட்டமைப்பு (ORF) தயாரிக்கப்பட்டு, அதற்கேற்ப அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | நிலத்தடி நீரின் அபிவிருத்தி, பாதுகாப்பு மற்றும் நிலை பேறான முகாமைத்துவம் ஆகியவற்றின் அடிப்படையில் அந்த நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைவதற்காக உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருப்பினும், முகாமைத்துவ மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நடைமுறை சிக்கல்கள் எழுந்துள்ளன, மேலும் தற்போதைய சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாத சூழ்நிலை உள்ளது. எனவே, தேவையான திருத்தங்கள் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அவதானிக்கப்பட்டது<br><br>இக் காரணத்தினால் நிலக் கீழ் நீர் முகாமைத்துவம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு ஆற்றலைக் கொண்ட அண்மையில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட அரச நிறுவனமான நீர் வளச் சபை இது தொடர்பான எல்லாப் பொறுப்புக்களில் இருந்தும் விலகி இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் நிலக் கீழ் நீரை மேலும் தளர்வாகவும் பொறுப்பற்றதாகவும் பயன்படுத்த இடமளிக்கப்பட்டிருந்தது. | | | | |
| **4** | **நீர் வளச் சபையின் பங்களிப்பு**<br>2014 ஆம் ஆண்டு திசெம்பர் 22 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த இலக்கம் 1894/3 உடைய வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக இலங்கையில் நீர் மூலங்கள் அவற்றின் போசிப்புப் பிரதேசங்கள் மற்றும் நிலவுகையை பாதுகாத்தல் மற்றும் காப்புறுதியளித்தல் தொடர்பான தேசிய கொள்கை வெளியிடப்பட்டிருந்தது. | **2022** | **1.**நிலக்கீழ் நீர் முகாமைத்துவம் தொடர்பாக நீர்வள சபையின் பங்களிப்பு முக்கியமானது என்பதால் நிலக்கீழ் நீர் பாதுகாப்பிற்காக தெரிவிக்கப்பட்டுள்ள கவனத்தை செலுத்துதல். | 1. நிலக்கீழ் நீர் முகாமைத்துவம் பாதுகாப்பு தொடர்பா தீர்மானம் எடுப்பதற்காக உரிய நிலக்கீழ் நீரைப் பெற்றுக்கொள்ளும் மூலாதாரங்களின் தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.<br>2. உணர்திறன் வாய்ந்த நிலத்தடி நீர் | தற்போதுள்ள பதவியணியினரைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட பணிகளை முறையாக மேற்கொள்ள முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

இக் கொள்கையின் பிரகாரம் நிலக் கீழ் அல்லது நிலக் கீழ் நீர் ஆதாரங்கள் குடி நீர் செயற்திட்டம் மற்றும் அல்லது விவசாய நடவடிக்கைகளுக்காக பாவிக்கப்படுவது தொடர்பாக பிரதான பொறுப்புடைய நிறுவனமாக நீர் வளச் சபை பிரதானமாக இனங் காணப்பட்டு இருந்ததுடன் செயற்பாட்டுப் பொறிமுறையில் நிலக் கீழ் நீரைப் பாதுகாப்பதில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

வலயங்களில் நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவு தொடர்பான தகவல்களைச் சேகரித்தல் மற்றும் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மற்றும் உரிய முகாமைத்துவ நடவடிக்கை களுக்கான பரிந்துரைகளை வழங்கி நடவடிக்கை எடுத்தல்

3. நிலத்தடி நீர் முகாமை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதற்காக, 2017 ஆம் ஆண்டின் 2010/23 ஆம் இலக்க அசாதாரண வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதுடன், தற்போது காணப்படுகினற்ள சட்டத்தை வலுப்படுத்த

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பொருத்தமான திருத்தங்கள் செய்யப்பட்டு, ங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டு ள்ளன. | |
| **5** | **மழை வீழ்ச்சி வேறுபாடு** கடந்த 30 வருடங்களில் இலங்கையின் 09 மாகாணங்களுக்கான வருடாந்த மழைவீழ்ச்சி போக்கினை அவதானிக்கும் போது வடக்கு, வடமேல், ஊவா மற்றும் வடமத்திய ஆகிய 04 பிரதான மாகாணங்களின் மிகக் குறைந்த வருடாந்த மழையைப் பெறுகின்றன்றதுடன் 2009 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக குறைந்த மழைவீழ்ச்சி வடமேல் மாகாணத்திலும் 2018, 2019 ஆம் ஆண்டுகளில் குறைந்த மழை வீழ்ச்சி வட மத்திய மாகாணத்திலும் அவதானிக்கப்பட்டது. | **2022** | **1.**நிலக்கீழ் நீர் பாதுகாப்பு நடவடிக்கைகளை திட்டமிடுவதில் வடக்கு, வடமேல், ஊவா மற்றும் வடமத்திய மாகாணங்களுக்கு முன்னுரிமை அளித்தல். | 1. நிலத்தடி நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகிப்பதன் நோக்கத்திற்காக தற்போது , மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிலத்தடி நீர் வலையமைப்புகளின் உணர்திறன் பகுதிகளை உள்ளடக்கிய தானியங்கி மற்றும் கையேடு கண்காணிப்பு வலையமைப்பு (Automated and Manual Monitoring Network) மூலம் நீரின் தரம் மற்றம் போதுமானதன்மை தொடர்ான தகவல் | தகவல் சேகரிப்பு மூலம் முகாமைத்துவ ஆலோசனைகளை வழங்குவதற்கு தேவையான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அளவு பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.<br>2. மேலும், உலக வங்கி நிதியுதவியின் கீழ், வடமத்திய, வடமேற்கு மற்றும் வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் முறையே மல்வத்து ஓயா, தெதுரு ஓயா மற்றும் யாழ்ப்பாண புவியியல் பகுதிகளுக்கு நிலத்தடி நீர் முகாமைத்துவத் திட்டங்களைத் தயாரிப்பதற்கான ஒரு திட்டம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. | |
| 6 | **நிலக் கீழ் நீரின் இரசாயனப் பகுப்பாய்வை பெற்றுக் கொள்ளல்**<br>2014 திசெம்பர் 22 ஆம் திகதிய 1894/3 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் படி இலங்கையில் நீர் | **2022** | 1.நிலக்கீழ் நீரின் இரசாயனவியல் கலவையை மாற்றும் பல்வேறு மனித நடவடிக்கைகளின் பரிணாமம் இருப்பதால் நிலக்கீழ் நீரின் இரசாயன | 1. கல்பிட்டி தீபகற்பத்தில் மனித நடவடிக்கைகளால் பாதிப்புக்கு உட்பட்டுள்ள மற்றும் அவ்வாறு ,ல்லாதவற்றை பாதுகாக்கக்கூடி | இந்தப் பகுதியில் நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவை மதிப்பிடும் செயல்முறை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது, மேலும் பொருத்தமான சந்தர்ப்பங்களில் தொடர்புடைய நிறுவனங்களுக்குத் |

| | | | |
|---|---|---|---|
| மூலங்கள் அவற்றின் போசிப்புப் பிரதேசங்கள் மற்றும் நிலவுகையை பாதுகாத்தல் மற்றும் காப்புறுதியளித்தல் தொடர்பாக தேசிய கொள்கையின் 1.8 ஆம் பந்தியின் பிரகாரம் கல்பிட்டி குடாவில் காணப்படுகின்ற ஆழமற்ற நிலக்கீழ் நீர்த் தேக்கங்களின் கொள்ளளவு பெரும் எண்ணிக்கையிலான மக்கள் தொகையின் குடி நீர்த் தேவையை நிறைவேற்ற போதுமானதுடன், இரசாயனப் பசளை, விவசாய இரசாயனங்கள் மற்றும் பூச்சி கொள்ளிகள் மண்ணில் சேர்வதால் ஏற்படுகின்ற நிலக் கீழ் நீர் மாசு காரணமாக இந் நீரை மீண்டும் சுத்திகரிக்க முடியாத நிலைக்கு உட்பட்டிருந்தது. 2014/2015 ஆம் ஆண்டுகள் மற்றும் அதன் பின்னர் இப் பிரதேசங்களில் நிலக் கீழ் நீர் வளங்களின் இரசாயனப் பகுப்பாய்வுகள் ‘அணைக்கட்டு பாதுகாப்புத் திட்டம்’ இன் கீழ் 2019 வரை மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக | பகுப்பாய்வுகளைப் பெற்றுக்கொண்டு அதற்குரிய பரிந்துரைகளை செயல்படுத்துதல். | ய நீர்நிலைகளைக் கண்டறிந்து கண்காணிக்க ஒரு தானியங்கி மற்றும் கையேடு கண்காணிப்பு வலையமைப்பு நிறுவப்பட்டுள்ளது, இதன் மூலம் நிலத்தடி நீரில் ஏற்படும் பாதிப்புகள் அவதானிக்கப்பட்டு வருகின்றன. அணை பாதுகாப்பு திட்டம், அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் பொதுமக்கள் பயன்படுத்தும் நீர் ஆதாரங்களில் நீர் மாதிரி சோதனைகளை நடத்தி, அவற்றின் உள்ள தரம் மற்றும் தற்போதைய சூழ்நிலையில் பயன்படுத்தக் கூடிய மற்றும் பயன்படுத்த முடியாத நீர் மூலாதாரங்கள் குறித்த விழிப்புணர்வு திட்டங்களை செயல்படுத்தியுள் | தேவையான பரிந்துரைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. |

| | | | | |
|---|---|---|---|---|
| | இரசாயனப் பகுப்பாய்வொன்று நடாத்தப்பட்டு இந் நிலைமையைக் குறைப்பதற்காக 2015 ஆம் ஆண்டில் நீர் வளச் சபையின் மூலம் பரிந்துரையொன்று வழங்கப்பட்டிருந்தது. அதில் எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய நிலக் கீழ் நீர்த் தேவைக்கு சார்பாக அத் தேவையை நிறைவேற்றும் மாற்று வழிகளை இனங் காணல் மற்றும் அதற்காக தயாராதல் போதுமானதாக இல்லை என அவதானிக்கப்பட்டது. | | ளது. மேலும், தொடர்புடைய இரசாயனவியல் பகுப்பாய்வு பெறுபேறுகளின் அடிப்படையில், பாதுகாக்கப்பட வேண்டிய வலையமைப்பு மூலங்கள் மற்றும் பயன்படுத்தப்படும் முறைகள் குறித்து பரிந்துரைகள் வழங்கப்பட்டு உள்ளன. | |
| **7** | **நிலையான நிலக்கீழ் நீர் முகாமை**<br>சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனத்தினால் (IWMI) நிலையான நிலக்கீழ் நீர் முகாமைத்துவத்திற்காக பின்வரும் பரிந்துரைகளை இலங்கைக்கு செய்துள்ளது.<br><br>• அனைத்து நிலக்கீழ் நீர் கிணறுகளையும் பதிவு செய்தல். | **1.** அரச திணைக் களங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் பொதுக் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும் நீர்வள புவியியல், தொடர்பான தரவுக் கணிப்பீடு, அது தொடர்பான | 1. 1999 இன் 42 ஆம் இலக்க நீரியல் வழங்கல் (திருத்தச்) சட்டம் மற்றும் 2017 இன் 2010/23 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் நிலக்கீழ் நீர் முகாமத்துவம் மற்றும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப படுகின்றது. | இந்த விடயத்திற்குரிய நிறுவனத்தினால் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து வருகிறது, மேலும் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளுக்குத் தேவையான சட்ட கட்டமைப்பை நிறுவ தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. |

- உப்பு கலக்கும் வாய்ப்பு இருப்பதால் கடலோர நீர்நிலைகளை கவனமாக கண்காணித்தல்.
- நீர்நிலைகளில் விவசாய இரசாயன மாசுபடுவதைக் கண்காணித்தல் மற்றும் அதற்குச் சாத்தியமான திருத்தங்களை அடையாளம் காணுதல் மற்றும் குறிப்பாக நிலக்கீழ் நீர் குடிநீராகப் பயன்படுத்தப்படும் பகுதிகளில் மண் உப்புகளை அகற்றுதல
- நிலக்கீழ் நீர் புதுப்பிக்கத்தக்க பகுதிகளில் ஆரம்ப முகாமைத்துவம் மற்றும் நீர் பயன்பாட்டு முறைகள் குறித்த தந்திரோபாயங்கள் மற்றும் சமூக-பொருளாதார உறவுகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல்.
- பல்வேறு அரசு நிறுவனங்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்களை கூட்டிணைத்து ஆராய்ச்சி புள்ளிவிவர ஆய்வுத் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகளின் அடிப்படையில் அறிக்கைகளின் பகுப்பாய்வு மற்றும் நாட்டில் நிலக்கீழ் நீர் வளங்களைப் பாதுகாத்தல், பயன்படுத்துதல் மற்றும் அபிவிருத்திக்கு உரியதாக செயற்படுத்தப் படும் செயற்திட்டங்களை செயற்படுத்தல் தொடர்பாகவும் அச்செயற்திட்டங்களை பராமரிக்கும் இயலுமை பயன்பாடு மற்றும் பொருளாதார சாத்தியவளத்தை மதிப்பீடு செய்தல்.

நிலத்தடி நீரைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஆதாரங்கள் பற்றிய தகவல்களைப் பெறுதல், புவி நீரியல் ஆராய்ச்சி மூலம் பெறப்பட்ட தரவுகளைச் சேகரித்தல் போன்ற பாதுகாப்பு மற்றும்முகாமைக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2. உணர்திறன் வாய்ந்த நிலத்தடி நீர் மண்டலங்களில், நிலத்தடி நீரின் தரம் மற்றும் அளவு குறித்த தகவல்கள் சேகரிக்கப் பட்டு மதிப்பிடப்பட்டு, தொடர்புடைய

| | |
|---|---|
| மேம்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.<br>• நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் நீர் நிலையங்களின் இயலளவு, நீர்ப் பயன்பாடு மற்றும் சுற்றுச்சூழலுக்கு உள்ள ஆபத்து குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வை அதிகரிப்பதற்கான ஏற்பாடுகள். wmi.cgiar.org/publications/water policy briefs/PDF/wpb 14.pdf)<br>மேற்படி விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் மேலும் இடம்பெற வேணடுமென அவதானிக்கப்பட்டது. | முகாமைத்துவ செயல்முறைகளுக்கு பரிந்துரைகள் செய்யப்படுகின்றன.<br>நிலத்தடி நீரில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டங்கள் மற்றும் மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்து பிற அரச நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.. |

**2.5 அம்பாந்தோட்டை, அநுராதபுரம், வவுனியா மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் கணிய வளங்கள் (கருங்கல்) அகழ்விற்காக அரசின் காணியை குத்தகைக்கு வழங்குதல், நிர்வகித்தல் மற்றும் அரசிறை அறவிடல் தொடர்பான செயலாற்றல் அறிக்கை.**

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | கைத்தொழில் அகழ்வு அனுமதிப் பத்திரமொன்றை வழங்கும் போது காணியில் அகழ்விற்காக அனுமதி பெற்ற பிரதேசத்தின் அமைவிடத்தின் பிரகாரம் உப கோட்டின் பிரகாரம் எல்லையில் ஒவ்வொரு வளைவு இடங்களுக்கும் எல்லை தூண் இடுதல் பொருத்த வேண்டிய போதிலும் அவ்வாறு பொருத்தியிராத இடங்கள் அவதானிக்கப்பட்டன. | 2021 | 1. அரசிற்கு சொந்தமான காணியொன்று கருங்கல் வேலைத்தளமொன்றுக் காக குத்தகைக்கு வழங்கும் போது நில அளவை திட்டத்தில் (Survey Plan) குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் எல்லையில் ஒவ்வொரு வளைவு இடங்களுக்கும் எல்லை தூண் இடுதல் பொருத்தமானதுடன் அந்த இடத்தில் அமைவிடம் இலக்கம் கலன்று விடாமல் பொருத்தி வைத்தல் பொருத்தமான தெனவும். | எல்லை தூண் இடுவதற்காக அறிவுறுத்தப் பட்டுள்ளது | பரிந்துரையின் பிரகாரம் செயற்படுத்தப் பட்டி ருக்கவில்லை |
| 2. | உள்ளக பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரின் 2004 ஏப்ரல் 14 ஆந் திகதிய 04/சீஎஸ்/3/10/1/பொது இலக்க கடிதத்தின் | 2021 | 1இலத்திரனியல் தூர அளவீட்டு உபகரணமொன்று அல்லது ஏனைய தொழில்நுட்ப நடைமுறையொன்று பயன்படுத்தப்பட்டு | பரிந்துரைகளை செயற்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | விஞ்ஞான ரீதியிலான நடைமுறையொன்றை பின்பற்றுவதற்கு திட்டமிஜட்டு செயற்படுத்தப்பட் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் 01 கி.கி. டைனமைட்டினால் உடைக்க கூடிய கருங்கல் அளவு உற்பத்தி 2 ½ கியுப் என கணக்கிடப்படும் வகையில் வனக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டணங்களை அறவிடுவதற்காக ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் கருங்கல் அகழ்விற்காக பயன்படுத்தப்படும் வோட்டர் ஜெல் மற்றும் கல் வெடி மருந்து போன்றவை தொடர்பாக இதன் போது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | கருங்கள் படிவுகளை அகழக்கூடிய கருங்கல் அளவு மற்றும் பொருளாதார பெறுமதியை கணக்கிடல் விஞ்ஞான ரீதியான நடைமுறையொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும் வருடா வருடம் காலரீதியாக வழங்கப்படும் வெடிபொருட்களுக்கு ஒப்பாக கருங்கல் அகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதா அரசிறை அறவிடப்பட்டுள்ளதா என பரீட்சித்தல் பொருத்தமானதெனவும்<br>2. அரசிறை அறவிடும் போது, அகழப்பட்ட கருங்கல்லின் சந்தை விலை குறித்து துல்லியமான கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, காலப்போக்கில் அது மாறும்போது சரிசெய்தல் | கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது | டு வருகின்றது.<br>பரிந்துரை செயற்படுத்தப்பட்டி ருக்கவில்லை |
| **3** | அம்பாந்தோட்டை மாவட்டத்தின் IML/B/HO/115/LR/09 ஆம் இலக்க கைத்தொழில் அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் கீழ் 276389 ஆம் இலக்க வெடிபொருள் அனுமதிப் பத்திரம் பெற்றுக் | **2021** | 1. வெடி பொருட்கள் அனுமதியற்ற பாவனை மற்றும் வேலைத் தளங்களிற்காக மிகையான வெடிப்பொருட்களை வழங்குதல் மூலம் தேசிய பாதுகாப்பு தொடர்பாக அச்சுறுத்தலொன்று | இந்த நிலையப் பரிசோதனையின் போது மேற்கொள்ளப்பட்ட மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டுள்ள கருங்கல் அகழ்வு குறித்து புவிச்சரிதவியல் கணிய மற்றும் | 2019 செயலாற்றல் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட நிலுவைத் தொகை தொடர்பாக பிரச்சினை |

| | | | |
|---|---|---|---|
| கொள்ளப்பட்டிருந்த திஸ்ஸமஹாராம ஜூல்பள்ளகம கருங்கல் வேலைத்தளத்திற்காக 2007 ஆம் ஆண்டு முதல் 2019 செப்தம்பர் மாதம் வரை விநியோகிக்கப்பட்டிருந் த வெடிபொருட்கள் அளவின் பிரகாரம் 11,803 கியுப் அளவிலான கருங்கல் மாத்திரம் அகழப்பட வேண்டும். எவ்வாறாயினும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் உத்தியோகத்தர்கள் 2019 ஒக்தோபர் 16 ஆந் திகதி மேற்கொண்ட நிலையப் பரிசோதனையின் போது பெற்றுக்கொண்ட அளவீட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பிடலின் பிரகாரம் 17,514 கியுப் கருங்கல் அளவில் அகழப்பட்டிருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அகழப்பட்ட கருங்கல் கியுப் வழங்கப்பட்ட வெடிபொருட்கள் அடிப்படையிலும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் | இடம் பெறக்கூடுமாகையால் அது தொடர்பாக கவனம் செலுத்துதல் மற்றம் வெடிப் பொருட்கள் பயன்பாடு தொடர்பாக பொறுப்பான நிறுவனங்கள் ஒன்றிணைத்து காணப்படும் கண்காணிப்பு நடைமுறை யொன்று முகங்கொடுத்தல் பொருத்தமான தெனவும். | சுரங்கப் பணியகத்தினால் உரிய தெளிவுபடுத்தல் தகவல்களை வழங்காததால், அது தொடர்பாக புவிச்சரிதவியல் கணிய மற்றும் சுரங்கப் பணியகத்தின் பிராந்திய சுரங்கப் பொறியாளருக்கு இது தொடர்பான தகவல்களைக் கொண்ட ஒரு அறிக்கையை 2024.11.05 திகதிய கடிதத்தின் மூலம் அனுப்பப்பட்டுள்ளது . வேண்டும். | காரணமாக, 2020 ஆம் ஆண்டு முதல் கருங்கல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை, மேலும் இந்த கற் குழிகளில் தற்போது செயற்பாட்டு நிலைமையில் இல்லை. குறிப்பிடத்தக்க பிரதேசம் நீரால் நிரம்பியிருப்பதால் , மிகவும் ஆபத்தான இந்த கற் குழிகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்குமாறு புவியியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு 2024.08.22 திகதிய கடிதத்தின் மூலம் அறிவித்து அனுப்பி வைக்கப்பட்டுள்ள து. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்கிடலின் பிரகாரம் 5,711 கியுப் மேலதிகமாக அகழ்வு அவதானிக்கப்பட்டது. | | | | |
| **4** | .பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட அகழ்வு நடவடிக்கைகள் மேற் கொள்கின்ற மற்றும் விட்டு விடப்பட்டிருந்த கருங்கல் வேலைத் தளங்களில் பெரிய அளவிலான நீர் குழிகள் அமைந்திருந்ததுடன் மாடுகள் மற்றும் யானைகள் போன்ற மிருகங்கள் நீரைத் தேடி வரும் போது குழிக்குள் விழுவதற்குள்ள ஆபத்து மற்றும் அக்குழிகளில் நுளம்புகள் பெருகுவதன் மூலம் சுகாதார சிக்கல்கள் உருவாகும் சந்தர்ப்பமும் இருந்தன. | **2021** | 1. அரசிற்கு சொந்தமான காணிகளில் கணிய வளங்கள் அகழ்வு மேற்கொள்ளப்பட்டு தற்போது கைவிடப்பட்டு மற்றும் நீர் நிரப்பியுள்ள கருங்கல் படிவுகளை இனங்கண்டு அவற்றை சுற்றாடலுக்கும் வன விலங்குகளுக்கு சாதகமான வகையில் பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்துதல் பொருத்தமானதெனவும், | கலந்துரையாடல் மட்டத்தில் உள்ளது | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை |

## 2.6 சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்குக் கடன் நிவாரணம் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றல்

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **அறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை** | **கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 1 | 1. சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு கடன் நிவாரணம் பெற்றுக் கொடுக்கையில் 5 மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களின் அரிசி உரிமையாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களின் 228 அங்கத்தவர் களுக்கு ரூபா. 434.87 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கு விடுவிக்கப்பட்ட பணம் 06 மாதம் காலம் முடிவடைந்தவுடன் மாவட்டச் செயலாளர்களுக்கு மீளச் செலுத்துவதற்கு உரிய மாவட்டச் சங்கம் நடவடிக்கை எடுத்திருக்க வேண்டிய போதிலும், ரூபா 99.38 மில்லியன் அதாவது வழங்கப்பட்ட கடன் தொகையில் 23 சதவீதத்தை மாவட்டச் | 2021 | 1. முதலாவது கட்டத்தில் வழங்கப்பட்ட கடனை சுழற்சி நிதியாகப் பயன்படுத்தி நெல்லை அரிசியாக மாற்றும் செயற்பாட்டை வினைத்திறனாக நிறைவேற்றிய மற்றும் முன்னர் வழங்கப்பட்ட நிதியை மீண்டும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்த அங்கத்தவர்களுக்கு மட்டும் ஏனைய கட்டங்களில் கடன் தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் அதன் மூலம் வேலைத் திட்டத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்படும் கடன் தொகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் மற்றும் | இந்த செயற் திட்டம் தோல்வியடைந்த திட்டம் என்பதால், இந்தத் திட்டத்தை மேலும் செயல்படுத்துவதில்லை என்ற கொள்கை தீர்மானம் ஒன்றை எடுப்பதறகும், நிலுவையில் உள்ள நிதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது. | உணவு ஆணையாளரால் வழங்க தகவல்களின் அடிப்படையில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு மாகாண கூட்டுறவு சங்கங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், கடனை அறவிடுவதற்கு தேவையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| செயலாளர்களுக்கு குறித்த மாவட்டச் சங்கங்கள் திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன் 06 மாதங்கள் பூர்த்தியாகும் திகதியில் அதன் தாமத காலம் 05 நாட்கள் தொடக்கம் ஆகக் கூடியது 35 நாட்கள் ஆகும். | நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தெரிவ செய்யப்பட்ட குழுக்கள் தொடர்பாக தரவு முறையொன்றை பேணிச் செல்லல்<br><br>2. மாவட்டச் சங்கங்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் கடன் தொகை ஒப்பந்தக் கால இறுதியில் மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காத ஆலை உரிமையாளர்களுக்கு தேவையான சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் |

## 2.7 உணவு ஆணையாளர் திணைக்களத்தினால் பாதுகாப்பான அரிசித் தொகையினைப் பராமரித்தல் மற்றும் சேமிப்புப் பயன்பாட்டின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | விஞ்ஞான ரீதியான களஞ்சியசாலைகளில் பாதுகாக்கப்பட்ட அரிசித் தொகையினை பேணப்படுவதற்காக 2012 ஆம் ஆண்டு திட்ட அறிக்கை ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதனை முறையாக அங்கீகரித்தக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் . முன்னோடி களஞ்சியசாலைகளின் பாவனைக்காக ஒதுக்கீடு வழங்காமை காரணமாக 02 களஞ்சியசாலைகள் குறைபாவனையுடன் இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாது மேலும் விஞ்ஞான ரீதியிலான 04 களஞ்சியசாலைகள் புதுப்பிக்கப்பட்டிருந்தன | | .அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் 100,000 மெற்றிக் தொன் பாதுகாக்கப்பட்ட தொகையினை களஞ்சியப்படுத்தி வைப்பதற்காக சட்ட ரீதியிலான ஒதுக்கீட்டினை ஏற்படுத்திக் கொள்ளல். | அங்கீகரிக்கப்பட்ட திட்ட அறிக்கையை அடிப்படையாக கொண்டு பரீட்சார்த்த செயற்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான ஏற்பாடுகள் தாபிக்கப் பட்டிருக்கவில்லை |
| 2.. | 10 ஆம் இலக்க களஞ்சியசாலையின் கொள்ளளவு மெற்றிக்தொண் 5400 ஆக இருந்தபோதும் முனனோடி திட்டத்தின் சாத்தியத்தினை மதிப்பீடு செய்வதற்காக மொத்த கொள்ளளவினை பயன்படுத்தாமல் மொத்த கொள்ளளவின் நூற்றுக்கு 12 சதவீதம் மாத்திரம் அரிசி களஞ்சியப்பட்டிருந்தது .அதன் காரணமாக 01 கிலோகிராமிக்கான | | 1.விஞ்ஞான முறைமையின் பிரகாரம் தயார் செய்யப்பட்ட களஞ்சியங்களில் இணங்கக்கூடிய பொருட்களை மட்டுமே ககளஞ்சியங்களில் சேமித்து வைப்பது மற்றும் களஞ்சிய இயலளவை அதிகபட்சமாகப் | அச் சந்தர்ப்பத்தில் காணப்பட்ட சூழ்நிலையில், நெல் சந்தைப்படுத்தல் சபை அதன் முழு களஞ்சியங்களையும் அரிசியால் நிரப்ப சுமார் 5400 மெ.தொ நெல் தேவைப்பட்ட போதிலும், அந்த நிறுவனத்தால் பெறப்பட்ட நெல் பதிவு செய்யப்பட்டு | விஞ்ஞான ரீதியான முறைமைகளுக்கு இணங்கும் வகையில் மாத்திரம் களஞ்சியப்படுத்த முடியவ்லிலை களஞ்சியசாலைகள் புதுப்பித்தலுக்கு நிதி ஏற்பாடு |

| | | | | |
|---|---|---|---|---|
| | மின ˙சாரக்கட்டண கிரயம் உயர்ந்த பெறுமதியை எடுத்திருந்தது | பயன்படுத்துவதற்காக களஞ்சிய நவீனமயமாக்கலுக்கான ஏற்பாடுகளைச் செய்வது. | ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டதுடன் மேலும் அந்த ஆலை உரிமையாளர்களிடமிருந்து பெறப்பட்ட அரிசி இருப்பு மட்டுமே முன்னோடி திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது. அதன் அடிப்படையில், முன்னோடித் திட்டம் மேலும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இங்கு அதிக மின்சார நுகர்வு ஏற்படுவதற்கான காரணம், இயலளவில் 12 சதவீதம் மட்டுமே இந்த ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்பட்டது. இதன் விளைவாக, அலகு கிரயம் ˙ அதிகரித்துள்ளன. | வழங்கப்படவில்லை. |
| 3 | . 2015 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 வரையிலான மாதாந்தம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த களஞ்சிய வாடகை வருமானத்தோடு ஒப்பீடு செய்கையில் அறவிடப்பட்டிருந்த களஞ்சிய வாடகை வருமானம் பலவீனமான நிலையில் இருந்தது | 03 மாதங்கள் தாமதமாகி வரும் களஞ்சிய வாடகையை வைப்புச் செய்யப்பட்ட வாடகையிலிருந்து ஈடுசெய்யவும், களஞ்சியங்களைத் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்ளம் வகையில் பொருத்தமான ஒப்பந்தங்களை மேற்கொள்ளல் மேலும் நிலுவையில் | 53 அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் களஞ்சியங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், அந்த நிறுவனங்களுடனான ஒப்பந்தங்களின்படி குத்தகைக் கொடுப்பனவுகள் செய்யப்படும் என்றும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது | நிலுவை வாடகை அறவிடப்பட்டு வருகின்றது |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ள களஞ்சிய வாடகையை உடனடியாக வசூலிக்க ஒரு முறையான நடைமுறையை உருவாக்க வேண்டும். | | |
| 4. | 2007 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்திற்கு சொந்தமான 17 களஞ்சியசாலைகளை நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு நெற் களஞ்சியப்படுத்துவதற்காக வாடகை இன்றி வழங்கப்பட்டிருந்ததுடன் அவைகளில் 10 களஞ்சியசாலைகள் 2019 திசெம்பர் 31 திகதி வரையிலும் பயன்படுத்தப்பட்டு வநருகின்றன. இக்களஞ்சியசாலைகளில் உச்ச பயனினை பெற்றுக்கொள்வதற்கு செயற்படாது களஞ்சியசாலைகள் குறை பயன்பாட்டில் உள்ள களஞ்சியங்களை அரசுக்கு பயனளிக்கக் கூடிய வகையில் செயற்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | அரச நிறுவனங்களுக்கு வாடகை இல்லாமல் வழங்கப்பட்ட களஞ்சியசாலைகள் பயன்படுத்தப்படாது இருப்பின் அவையினை மீளப்பெறுவதற்கான நடவடிக்கை எடுத்தல். | வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்த 17 களஞ்சியசாலைகளில் 08 திணைக்களத்திற்கு பெறப்பட்டுள்ளன. | மீண்டும் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வில்லை |

## 2.8 பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள மரணச் சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பான மதிப்பீடு

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஜோன் வீரசிங்க மற்றும் பேபி என்ஸி அபேநாயக தம்பதிக்குரிய ஆதனங்களிலிருந்து ஒவ்வொரு வருடமும் கிடைக்கப் பெறும் வருமானத்தில் நிதியமொன்றை உருவாக்கி அநுராதபுரத்தின் ருவன்வெளிசாயயின் அபிவிருத்திக்காக அதன் சைத்திய முன்னேற்ற சங்கத்திற்கும்இந்தியாவின் மஹாபோதி கம்பனிக்கும் சமமாக பிரிந்து அனுப்பும் கடைசி விருப்ப பத்திரத்தில் நோக்கமாக குறிப்பிடப்பட்டிருந்த போதும். மாத்தறை கபடா வீதயில் புஞ்சிபதஹெவத்த ‘‘பீ’’ எழுத்தினை உடைய துண்டுகளாக பிரிக்கப்பட்ட 03 ஆம் இலக்கமுடைய 32 பேர்ச்சஸ் விசாலமான காணி மற்றம் கட்டிடம் 2013 ஆம் வருடம் வரை ஆக்கபூர்வமான வகையில் முகாமைத்துவம் செய்யப்பட்டிருக்கவில்லை. என்பதுடன் 2013 | 2021 | (அ) வெளி தரப்பினருக்கு மரணச் சொத்துக்களை குத்தகை அடிப்படையில் வழங்கும் சந்தர்ப்பங்களில் ஆதனங்களின் பாதுகாப்பையும் ஆதனங்களினால் சாதாரணமான வருமானமொன்றை பெற்றுக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக முறையான குத்தகை உடன்படிக்கைக்கு உட்படுதல் குத்தகையை வழங்க தவறிய ஆதனங்களை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுத | ஜோன் வீரசிங்க மற்றும் அபேநாயக தம்பதிக்குரிய மாத்தறை மாவட்ட நீதிமன்றத்தில் இலக்கம் 07, வல்பொல, 1 வது குறுக்கு வீதி, மாத்தறை என்ற முகவரியில் உள்ள சொத்திலிருந்து அனுமதியற்ற குடியிருப்பாளர்களை வெளியேற்றுவதற்காக 13736/LA என்ற இலக்கத்தைக் கொண்ட வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த வழக்கு 03.12.2024 ஆந் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட உள்ளது. மேலும் பிரதிவாதிகள் மீதான பிடிவிராந்திற்கு பதிலளிக்கவும் விசாரணை மேற்கொள்ளவும் உள்ளது. 2024.05.10. ஆந் திகதி இந்த ஆதனங்கள் பொது | எதிர்காலத்தில் சொத்துரிமை உறுதி செய்யப்பட்டவுடன் பரிந்துரைகள் செயல்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. |

| | | |
|---|---|---|
| பெப்ரவரி 05 ஆம் திதகி 312 ஆம் இலக்கமுடைய குத்தகை ஒப்பந்தத்தின் படி Y.T.K ஹரிஸ்சந்திர என்பவருக்கு மாதாந்தம் ரூபா 8,000 தொகைக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. உரிய குத்தகை ஒப்பந்த 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்திருந்தது. இந்த ஆதனத்தை விற்பனை செய்வதற்காக வழக்கு இலக்கம் 97/16 இன் கீழ் 2016 செப்தெம்பர் 29 ஆம் திகதி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திலே, மாவட்ட நீதிபதியின ் அனுமதியை பெற்றிருந்த போதிலும் ஆதனங்களை விற்று நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு பதிலாக முறையான குத்தகை ஒப்பந்தமொன்றுக்கு உட்படாமல் மேற்குறிப்பிட்ட குத்தகைகாரருக்கே மாதாந்தம் ரூபா 10,000 தொகைக்க குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | ல் வேண்டும். (ஆ)சட்டப்பூர்வ அனுமதிகள் பெறப்பட்டிருந்தால் மட்டுமே மரணச் சொத்துக்களைக் கையாள வேண்டும், மரணச் சொத்துக்களை மரணச் சொத்து உரிமையாளர்களின் நோக்கங்களுக்கு முரணான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தக்கூடாது, மேலும் சொத்துக்களுக்கு தீங்கு விளைவிக்காத வகையில் சொத்துக்களை நிர்வகிக்க வேண்டும். | நம்பிக்கையாளரின் பொறுப்பில எடுக்கப்பட்டதுடன், மேலும் 14.05.2024 அன்று அல்லது அதற்கு அண்மித்த நாளொன்றில் பிரதிவாதிகள் கதவை உடைத்து வலுக்கட்டாயமாக ஆதனத்திற்குள் நுழைந்தனர், இதன் விளைவாக மாத்தறை மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் . BR 2821/24. ஆம் இலக்க வழக்குத் தொடரப்பட்டது. அதன்படி, 2821/24 இலக்க வழக்கு 21.10.2024 ஆந் திகதி அழைக்கப்படுவதுடன், மேலும் அந்த நாளில் மேலும் அறிக்கைகள் கோரப்படும். |

| | | | |
|---|---|---|---|
| 2.. | வடமத்திய மாகாணத்தில அநுராதபுரம் மாவட்டவத்தில் அனுராதபுரம் நகரில் வசித்த 1998 பெப்ரவரி 22 | இந்த மரணச் சொத்திற்குரிய தொடர்பான 1/99/T ஆம் இலக்க வழக்கின் தீர்ப்பு | தற்போது, அனுமதி பெறுவதற்கு உட்பட்டு, ஒரு குத்தகை ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. |

ஆம் திகதி காலஞ்சென்ற ஆர்.எல்.எச் சந்திரசேகர என்பவரின் 1993 செப்தெம்பர் 09 ஆம் திகதிய கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் ஆதன நிர்வாகம் தொடர்பாக 2003 ஜுன் 04 ஆம் திகதி வரையறுக்கப்பட்ட ப்ரொபேட் அனுமதிப்பத்திரமொன்று பொது நம்பிக்கைப் பொறுப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்தது.

i.அனுமதிப்பத்திரம் பெறப்பட்டு 16 வருடங்கள் கடந்திருந்தாலும் இந்த மரணச் சொத்திற்குரிய காணியின் பிரமாணத்தை அறவிட்டு எல்லையை வேறாக்கி ஆதனத்தை பாதுகாத்துக் கொள்வதற்கும் கடைசி விருப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. இந்த மரணச் சொத்து தொடர்பான மரணச் சொத்து வழக்கொண்றின் காரணமாக இவ்வாறான தாமதம் நிலவியதாக திணைக்களத்தினால் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 30

பொது நம்பிக்கை யாளருக்கு சாதகமற்றதாக இருந்ததை அடுத்து, அனுராதபுரம் சிவில் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மேனமுறையீடு செய்யப்பட்டது. அந்த வழக்கில் எட்டப்பட்ட தீர்வின்படி, பொது நம்பிக்கையாளருக்கு 30 ஏக்கர் மேட்டு நிலமும வழங்கப்பட்டது. 5 ஏக்கர் நெற் காணியும் கிடைத்தது. வழக்கு நடந்த நேரத்தில், நெல் நிலம் ஒரு குத்தகைதாரருக்கு வழங்கப்பட்டது மற்றும் நிலையான விகிதத்தில் வாடகை செலுத்தப்பட்டது.

ஆம் திகதி உரிய வழக்கின் தீர்ப்பு 44 அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதன்படி நடவடிக்கை மேற்கொள்ளாமல் முறையீட்டை தாக்கல் செய்தன் காரணமாக நோக்கத்தை நிறைவேற்றவது மேலும் தாமதமடைந்திருந்தது.

ii. இந்த மரணச் சொத்திற்கு உரிய அனுராதபுரம் மாவட்டத்திலே நுவரகம்பலதே, நுவரகம்கோரலே, ரத்மலேதுலானே, பொதானேகமவில் அமைந்துள்ள லொட் இலக்கம் 1 மற்றும் 2 என குறிப்பிடப்பட்டுள்ள 18 ஏக்கர் 03 ரூட் 01 பேர்ச் விசாலமான காணி மற்றும் லொட் இலக்கம் 3 என குறிப்பிடப்பட்டுள்ள 17 ஏக்கர் 02 ரூட் 23 பேர்ச்சஸ் விசாலமான காணிக்காக பொது நம்பிக்கைப் பொறுப்பாளரினால் 2000 ஜுலை 4 ஆம் திகதி தற்காலிகமாக குத்தகையொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். இருப்பினும். ஆதன பாதுகாப்பு, விவசாய நடவடிக்கைகள், குத்தகை வருமானங்கள் மற்றும்

இந்தத் மரணச் சொத்தில் உள்ள நெற் காணி 2024/25 பெரும் போகத்தில் பயிர் செய்வதற்கான அரசாங்கத்தின் நிலையான விகிதங்களை

| | |
|---|---|
| குத்தகை நிபந்தனைகளுக்காக முறையான குத்தகை உடன்படிக்கை யொன்றிற்கு முற்படுவதற்கு 2020 ஜனவரியிலும் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில் லை. திட்டவட்டமாக பங்கு விவசாயினால் விதைத்த வயல் நிலங்களிண் ஏக்கர் எண்ணிக்கை எவ்வளவு உரிய போகத்தின் நெல்லுக்கான உத்தரவாக விலை எவ்வளவு: மற்றும் தென்னங் காணியில் விதைக்கும் அளவு மற்றும் விளைச்சல் எவ்வளவு அதன்படி பங்கு கிடைக்கும் எண்ணிக்கை சரியானதா என்பது பங்கு தொடர்பாக பொது நம்பிக்கையாளர் திணைக்களத்தினால் எச் சந்தர்ப்பத்திலும் மேற்பார்வை ஒன்று அல்லது தொடர் செயல் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்க வில்லை. என்பதுடன் பங்கு விளைவுகாரரினால் அவரின் விருப்பதிற்கேற்ப செலுத்தப் படுகின்ற பங்கை பெற்றுக் கொண்டு | அறவிடும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு புதிய வாங்குபவருக்கு வழங்கப்பட்டுள்ளது. |

கணக்கிடப்பட்டிருந்தது. அதன்படி 2000 ஆம் வருடத்தலிருந்து 2019 ஆம் வருடம் வரை 36 ஏக்கர் 1 ரூட் 24 பேர்ச் இலிருந்து கிடைக்கும் வருமானம் ரூபா 3,575,542 மாத்திரமே.

iii. இந்த மரணச் சொத்திற்குரிய அனுராதபுரத்தின் பழைய நகரத்தின் குருநாகலை வீதியில் 238 ஆம் இலக்க மற்றும் 239 ஐ உடைய வியாபாரக் கட்டிடம் மற்றும் அவை அமைந்துள்ள நிலத்தை முறையான உடன்படிக்கைகள் இல்லாமல் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2000 ஆம் வருடத்தின் மார்ச்சில் இருந்து குத்தகைக்தாரர் குத்தகை தொகைய செலுத்துவதை கைவிட்டிருந ்ததுடன், அதனால் அந்த ஆதனங்களின் முகாமைத்துவம் தொடர்பான அவதானம செலுத்தப்பட்டிருக்கவில் லை.

iv. அனுராதபுர புதிய நகரில் ஹரிஸ்சந்திர மாவத்தையில் 48/388 இலக்க இடத்தில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைந்துள்ள வியாபார கட்டிடம் மற்றும் காணி தொடர்பாக 14289/எல் இலக்க வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் ஆதனத்தை தீர்த்துக கொண்டு முறையாக குத்தகைக்கு வழங்கி மரணச் சொத்தின் பெயரில் வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு கொள்வதற்கு திணைக்களம் தவறியிருந்தது | | | | |
| 3 | திருமதி ஶ்ரீமா இந்திராணி த சொய்சா அவர்களின் கடைசி விருப்ப சாட்சியத்தின் பிரகாரம் நுகேகொடை இலங்கை வங்கி சுப்பர் தர கிளையின் லொக்கர் இலக்கம் 738 இல் வைப்புச் செய்யப்பட்டிருந்த தங்க ஆபரணங்கள் 2007 செப்தெம்பர் 17 ஆம் திகதி திணைக்களத்தின் சட்ட மற்றும் விசாரணை அதிகாரியினால் பரிசீலனை செய்து பட்டியல்படுத்தப்பட்டிருந்த துடன் அந்த பட்டியலில ் குறிப்பிடப்பட ்டுள்ள தங்க ஆபரணங்கள் மற்றும் கடைசி விருப்ப 36 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தங்க ஆபரணங்களின் வகை, அளவு மற்றும் உலோக வகை என்பவற்றுக்கிடையில் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | **2021** | பாதுகாப்பு பெட்டகத்தில் காணப்படுகின்ற பொருட்கள் மற்றும் ஆவணங்களின் உரிமையாளரை அடையாளங் காணக்கூடிய பொருட்கள் தொடர்பாக மரணச் சொத்தின் நோக்கத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். மற்றும் அடையாளங் காண முடியாத பொருட்களை நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து | திருமதி ஶ்ரீமா இந்திராணி த சொய்சா 2002.10.02 ஆந் திகதி 4115 ஆம் இலக்க கடைசி விருப்பப் பத்திரம் எழுதப்பட்டது, அவர் 2007.04.14 அன்று இறந்தார். அதன்படி, திணைக்கள அதிகாரி பெற்ற சொத்துக்களின் பட்டியலில், அவர் இறப்பதற்கு முன்னர் எழுதிய கடைசி விருப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகைகள் காணப்படவில்லை. மறைந்த திருமதி இந்திராணி டி | இறுதி விருப்பப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | நீதிமன்ற அனுமதியுடன் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சொய்சா தனது வாழுங் காலங்களில் நகைகளை அணிந்திருக்கலாம். அதன் பிரகாரம், இறந்த பிறகு தான் சொத்துக்களின் பட்டியல் பெறப்படுவதால், கடைசி உயில் மற்றும் மரண சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகைகள் அப்படியே இருக்க முடியாது. | |
| 4. | என்.டீ.ஏ.சில்வா விஜேசிங்க முதலியரின் கடைசி விருப்பு ஆவணத்தில் புராதன பெறுமதி வாய்ந்த அருங்கலைப் பொருட்களின் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டிருந்தது டன் அந்த அருங்காட்சிப் பொருட்கள் அவரின் பங்களாவில் வைப்புச் செய்து பாதுகாக்கப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் அந்த அருங்காட்சி பொருட்களுக்கிடையில் ஒரு சில அருங்காட்சிப் பொருட்கள் மாத்திரம் திணைக்களத்தின் காப்பகத்தில் | **2021** | வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியது மற்றும் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் அனைத்து மரணச் சொத்திற்கும் உரிய காணிகளிலும் திணைக்கத்தின் பெயர் பொறிக்கப்பட்ட பெயர் பலகையை காட்சிப்படுத்தல் வேண்டும் 1. | கடைசி விருப்பு ஆவணத்தில் புராதன பெறுமதி வாய்ந்த அருங்கலைப் பொருட்களின் பட்டியலொன்று குறிப்பிடப்பட்டிருந்தது டன் அந்த அருங்காட்சிப் பொருட்களை திணைக்களத்தின் காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளதுடன் தொல்லியல் திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் அவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | தற்போது, பல காணிகளில் பெயர்ப் பலகைகளைக் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் அந்தப் பொருட்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. |

| | | | | |
|---|---|---|---|---|
| வைக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டதுடன் ஏனைய அருங்காட்சிப் பொருட்கள் காணப்படுகின்ற இடங்கள் தொடர்பாக திணைக்களத்திடம் அறிக்கை காணப்படவில்லை. அந்த காப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்த இடை பட்டியும் சிதைவடைந்திருந்ததுடன் வரலாற்றுப் பெறுமதி வாய்ந்த பொருட்களின் பாதுகாப்புக்காக போதுமான அளவு நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மரணச் சொத்து உரிமையாளர் உரிய ஆதனங்களை பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு ஒப்படைத்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| கொழும்பு மாவட்டத்தின் வெள்ளவத்தை பிரதேசத்தில் வாழ்நத 1999 நவம்பர் 28 அம் திகதி காலஞ் சென்ற திரு சீ.ஈ வணிகசூரிய அவர்களின் ஆதனங்கள் விற்று | **2021** | விற்பணைக்காக நீதிமன்ற அனுமதி பெறப்பட்ட காணி மற்றும் கட்டிடங்களை விற்பனை செய்து மரணச் | இந்தத் மரண ஆதனத்திற்குச் சொந்தமான, வெள்ளவத்தை, ரயில்வே ஒழுங்கை, இலக்கம் 25 இல் அமைந்துள்ள சொத்து, | இனங்காணப்பட்ட காணிகளில் பெயர்ப் பலகைகளைக் காட்சிப்படுத்தப் பட்டுள்ளதுடன் காணிப் பகுதிகளை இனங்காண்பதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| பெறப்பட்ட பணத்தை ‘‘சிசில் வணிகசூரிய’’ என்ற பெயரில் பொறுப்பொன்றில் வைப்புச் செய்வதற்காக பொது நம்பிக்கை பொறுப்பாளருக்கு 2005 நவம்பர் 10 ஆம் திகதி நிர்வாக உரிமங்கள் கிடைக்கப் பெற்றிருந்தது. இருப்பினும் 2019 திசெம்பர் வரைக்குமான 14 வருட காலங்கள் கடந்திருந்த போதும் 07 பிரதேசங்களில் அமைந்துள்ள காணிகள் மற்றும் கட்டிடம் என்பவற்றை விற்பனை செய்து மரணச் சொத்து உரிமையாளரின் நோக்கத்தை நம்பிக்கையோடும் மற்றும் வினைத் திறனாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. மேலும் அந்த காணிகளை அடையாளங் கண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை உறுதிப்படுத்தப்படும் வகையில் பாதுகாப்பதற்கு | சொத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் மற்றும் அடையாளம் காணப்படாத காணிகளை அடையாளங் கண்டு அறவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு பொது நம்பிக்கைப் பொறுப்பாளரின் உரிமை உறுதிப்படுத்தப் படும் வகையில் பாதுகாப்பதற்கு வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தல் வேண்டும். | பிரிக்கப்படாத உரிமையைக் கொண்டிருப்பதால், காணியின் மற்ற பகுதியில் வசிப்பவர்களுக்கு விற்பனை செய்வதற்கான அரசாங்க மதிப்பீட்டைப் பெறுமாறு பணிக்கப்பட்டுள்ளது. ஏனைய காணிகளை அடையாளம் கண்டு, பொது நம்பிக்கையாளரின் உரிமையை உறுதிப்படுத்த ஒரு விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | எடுக்கப்பட்டுள்ளன. |

| | | | | |
|---|---|---|---|---|
| | வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | | | |
| 6 | திரு தொன் சைமன் விஜேவிக்ரம வினால் 1950 பெப்ரவரி 10 ஆம் திகதி எழுதப்பட்ட 3911 ஆம் இலக்க கடைசி விருப்ப சாட்சியத்தின் 8 ஆவது பிரிவின் பிரகாரம் பிலியந்தலை நகரத்தில் நிர்மாணிப்பதற்கு முன்மொழியப்பட்ட வைத்தியசாலையில் வார்ட் ஒன்றை நிர்மாணிப்பதற்கும் அதில் அவரின் காலஞ்செள்ற தாயின் பெயரில் பெயரிடுவதற்கும் பொது நம்பிக்கைப பொறுப்பாளருக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான வார்ட் ஒன்றை பிலியந்தலை ஆதார வைத்தியசாலையில் நிர்மாணிப்பதற்கு பதிலாக ரூபா 1,014,275 பெறுமதியான வைத்திய உபகரணங்கள் நன்கொடையாக வழங்கல் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக வைத்தியசாலையிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையின் படி உறுதி செய்யப்பட்டது. | **2021** | 1947 ஆம் ஆண்டு டொன் சைமன் விஜேவிக்ரம எழுதிய கடைசி உயில் மற்றும் சாசனத்தை நிறைவேற்ற 1960 ஆம் ஆண்டு உயில் உரிமம் பெறப்பட்டது. அதன் பிரகாரம், பிலியந்தலையில் கட்டப்படவிருந்த மருத்துவமனையில் ரூபா 20,000.00 இற்கு விஞ்சாமல் செலவில் ஒரு வார்டு ஒதுக்கப்பட்டு, அது அவரது தாயார் டி.சீ.டப். சமரகோன் என பெயரிடுமாறு கோரப்பட்டுள்ளது. மருத்துவமனை நிறுவப்பட்ட நேரத்தில் இந்தப் பணிக்கு ஏதேனும் பங்களிப்புகள் வழங்கப்பட்டதா என்பதைத் தீர்மானிக்கத் திணைக்களத்திடம் எந்தத் தகவலும் இல்லை.<br><br>மேற்படி கடைசி விருப்பப் பத்திரத்தின் 4.1 வது பிரிவின் பிரகாரம், கடைசி விருப்பப் பத்திரத்தில் | பிலியந்தலை மருத்துவமனையில் வார்டு ஒன்று கட்டப்படும் நடவடிக்கை நிறைவேற்றப் பட்டிருக்க வில்லை |

கூறப்பட்டுள்ள நோக்கத்தை, சமரக்கோன் பொறுப்பு நிதியத்தின் பெயரில் அவருக்குச் சொந்தமான அசையா மற்றும் அசையும் சொத்துக்களைப் பயன்படுத்திவாடகை வருமானம் மற்றும் பெறப்பட்ட இாபத்தைப் பயன்படுத்தி.ஒரு கணக்கைத் திறப்பதன் மூலம் நிறைவேற்ற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அதன்படி, இந்தத் துறையில் சமரக்கோன் நம்பிக்கை பொறுப்பு என்ற நம்பிக்கை பொறுப்பு நிறுவப்பட்டுள்ளது, மேலும் அந்த நம்பிக்கை பொறுப்பின் வருமானம் தீவு முழுவதும் தேவைப்படுபவர்களுக் கு உதவித்தொகை, மருத்துவ உதவி, நிவாரண உதவி மற்றும் மத உதவிகளை வழங்க பயன்படுத்தப்படுகிறது . தற்போது, அறக்கட்டளை ரூபா

1,700,000/- தொகை உபகரணங்கள் மற்றும் பழுதுபார்ப்புகளுக்காக வழங்கப்பட்டுள்ளது.

2017/2018 காலகட்டத்தில் ஏற்பட்ட டெங்கு தொற்றுநோய்க்கு மருத்துவமனையை தயார்படுத்த வேண்டியதன் அவசியத்தின் காரணமாக, அவசர சிகிச்சைப் பிரிவை நவீனமயமாக்குவதற்குப் பதிலாக, மருத்துவமனைக்கு பொருத்தமான மருத்துவ உபகரணங்கள் மற்றும் காற்றுச்சீராக்கி இயந்திரமும் வழங்கப்பட்டன. இரண்டு மாடி வார்டின் கூரையும் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தொடர்புடைய நோக்கம் முறையாக அடையப்படாததால், அந்தப் பணியை நிறைவேற்றுவதற்கான திட்டங்களைத் தயாரித்து நேரடியாக

| | | | | |
|---|---|---|---|---|
| | | | எங்களுக்கு அனுப்புமாறு பிலியந்தலை அரசு மருத்துவமனையின் மாவட்ட மருத்துவ அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அதை மீண்டும் நிறைவேற்ற, பிலியந்தலை மருத்துவமனையுடன் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டு, நவம்பர் 2019 இல் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அதைத் தொடர்ந்து வந்த கோவிட் சூழ்நிலை மற்றும் நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியால் இது மறைக்கப்பட்டுள்ளது. தற்போது, பேச்சுவார்த்தைகளை மீண்டும் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | |
| நாணாயக்கார ரஜவாசல அப்புஹாமிலாகே தொன் ஆதர் சில்வா விஜேசிங்க சிரிவத்தன என்ற பெயருடைய களுத்துறை தெற்கு ரிச்மன்ட் பங்களாவில் இருந்த படிகார முதலியார் தனது கடைசி விருப்பு ஆவணத்தில் போது நம்பிக்கை | **2021** | ரிச்மன்ட் பங்களாவின் மாணவர் விடுதியை திருத்தங்கள் மேற்கொள்வதற்காக மதிப்பீட்டை தயாரித்துஅதை திருத்துவதற்கான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை | கொழும்பு பேராயரின் தலையீட்டின் பேரில், அனாதை இல்லத்திற்கு ஒரு தனி கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்ப பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. | இறுதி விருப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் மரணச் சொத்து உரித்தாளரின் விருப்பம் நிறை வேற்றப் பட்டிருக்க வில்லை |

பொறுப்பாளரை தமது மரணச் சொத்தின் நிர்வாக உரிமைக்காராக நியமித்து 1947 ஜுலை 08 ஆம் திகதி இறையடி சேர்ந்திருந்ததுடன் 1947 ஜுலை 30 திகதியிலிருந்து மரணச் சொத்தின் பாதுகாவலராக பொது நம்பிக்கை பொறுப்பாளரிடம் காணப்பட்டது. உதவியற்ற இலங்கையின் ஆண் பிள்ளைகளுக்காக “சில்வா விஜேயசிங்க தேசிய பிள்ளைகளின் வீடு” என்ற பெயரில் வீடொன˙றை உருவாக்கி கல்வியின˙ ஊடாக கிடைக்கும் பயிற்சியன் மூலம் நல்ல பிரசையாக மாறுவதற்கு பிள்ளைகளின் வாழ்க்கையை மேம்படுத்துதல் மற்றும் இங்கிலாந்தின˙ பேராசிரியர் பர்நாடோனின் வீட்டை எடுத்துக் காட்டாகக் கொண்டு தேசிய தேவைப்பாடு களுக்கு உகந்த வகையில் உருவாக்கி நடாத்திச் செல்ல˙ மரணச் சொத்தாளரின் பிரதான நோக்கமாக காணப்பட்டது. அந்த நோக்கத்தை நிறைவேற்று வதற்காக கடைசி விருப்ப ஆவணத்தில் ஒப்படைக்கப்பட்டிருந்த ஆதனங்களான ரிச்மன்ட்

அளிக்கப்பட வேண்டும். மற்றும் பங்களாவின் கூரை மற்றும் ஏனைய உடைந்த இடங்களை திருத்தங்கள் செய்து கவர்ச்சிகரமான இடமாக மாற்றப்படுதல் வேண்டும்.

பங்களாவில் அமைந்துள்ள இறப்பர் மற்றும் தெங்குச் செய்கையுடனான 42 ஏக்கர் நிலத்தின் வருமானம் மற்றும் கம்பஹா மாவட்டத்தின் ஹேனேகமவில் அமைந்துள்ள “இரஹந்தயாவ” என்ற பெயரிலுள்ள 81 ஏக்கர் தெங்கு தோட்டத்தில் கிடைக்கும் வருமானத்தையும் ஈடுபடுத்த வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது

**2.9 அவுஸ்திரேலியக் கடன் மற்றும் உள்நாட்டுக் கடன் உதவிகளின் கீழ் சுகாதார அமைச்சினால் செயற்படுத்தப்பட்ட அரச வைத்தியசாலைகளில் மருத்துவக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் செயலாற்றலை மதிப்பீடு செய்தல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | Meta Mizer இயந்திரம் மற்றும் Incinerator இயந்திரங்கள் மூலம் கிருமி நீக்கம் செய்யப்பட்ட மற்றும் எரிக்கப்பட்டு ஒதுக்கபப்ட்ட கழிவுகள் ஒழுங்கு முறையாக அகற்றுவது தொடர்பில் ஒழுங்கு முறையான வேலைத்திட்டமொன்று சுகாதார அமைச்சு மற்றும் பிரதேச சபைகளுடன் இணைந்து தயார்படுத்தாத காரணத்தினால் சில வைத்தியசாலைகளில் சுழற்சிக்குட்பட்ட கழிவுகள் என்ற வகையில் அவை வைத்தியசாலை வளவினுள் எரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருந்தது. சகல கழிவுகளும் கிருமி நீக்கம் | 2021 | 1.மத்திய அரசின் வைத்தியசாலைகள் மற்றும் மாகாண சபை வைத்தியசாலைகள் என்பவற்றை மேவுகை செய்யும் வகையில் மருத்துவக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக தேசிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும்.<br><br>2. சில வைத்தியசாலைகளால் Meta Mizer இயந்திரங்களில் இருந்து வெளியேற்றும் மருத்துவக் கழிவுப் பொருட்களை மீண்டும் எரிப்பதற்கு உட்படுத்துவதன் மூலம் மற்றும் வைத்தியசாலை வளவில் அதிக காலமாக குவித்து வைக்கப்பட்டமையால் மழை காலத்தில் | சுகாதாரக் கழிவுப் பொருள் முகாமைக்கான தேசிய செயற்திட்டத்தின் தயாரிப்பு நிறைவடைந்துள்ளது, மேலும் தேசிய செயறதிட்டத்தின் அடிப்படையில் 9 மாகாணங்களுக்கான மாகாண சுகாதாரக் கழிவு முகாமை செயறதிட்டத்தின் தயாரிப்பு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டதுடன் அதுவும் நிறைவு பெற்றுள்ளது. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மருத்துவமனை அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டு வரையிலும் திருப்திகரமான | 2024 ஒக்தோபர் வரையிலும் பரிந்துரை செயற்படுத்தப்படவில்லை.<br><br>2024 ஒக்தோபர் வரையிலும் பரிந்துரை செயற்படுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| செய்யும் செயற்பாட்டின் போது சூழலுக்கு ஒன்று சேரும் அதிக கரும் புகையினால் மற்றும் வாயுவாகும் அதிக 61 துர்நாற்றம் என்பவற்றின் மூலம் சுற்றாடலுக்கு அழுத்தங்கள ஏற்பட்டிருந்தன. | அக் கழிவுப் பொருட்கள் நீரேந து மற்றும் நீரில் கலக்கும் ஆபத்தை தவிர்ப்பதற்கு மேலதிக கிரயமொன்று செலவிடப்பட்டு வேறு வழங்குனர்களைக் கொண்டு அச்சிகிச்சை கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு செலவாகும் விளைவற்ற செலவினத்தை தவிர்ப்பதற்கும் சுற்றாடலுக்கு ஏற்படும் சேதத்தை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | முன்னேற்றம் அடையப்படவில்லை. | 2024 ஒக்தோபர் வரையிலும் பரிந்துரை செயற்படுத்தப் படவில்லை. |
| | 3 சகல வைத்தியசாலை அத்தியட்சகர்களால் மருத்துவக் கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திர மொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். | கிடைக்கக்கூடிய வளங்களைக் கருத்தில் கொண்டு, அது நடைமுறையில் செயல்படுத்த முடியாத ஒரு வழிமுறையாகும். | |
| | 4 அனைத்து மருத்துவக் கழிவுப் பொருட்களும் ஆபத்துடைய கழிவுப் பொருட்கள் என்பதால் அக் கழிவுப் பொருட்கள் உருவாகி 48 | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மணித்தியாலங்களுக்குள் கிருமி நீக்கம் செய்வதற்கு இயலுமான வகையில் இயந்திரமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும். | | |
| 2 . | 2015 நம்பா ் 11 ஆந ் திகதிய அமைப/15/1644/739/004 ஆம் இலக்க அமைச ் சரவை தீர்மானத்தின ் பிரகாரம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக ரூபா. 650,000 நிதி ஏற்பாட ் டில் ரூபா. 340,000 தொகை 4மூ கடனாக மற்றும் ரூபா 310,000 தொகையினை மானியமாக வழங்குவதற்கும் அதன ் பின ் னர் மீண்டும ் 2017 பெப்ரவரி 21 ஆந ் திகதிய அமைப/17/0306/739/002 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் கீழ் ஒரு வீடு ரூபா. 1,000,000 பெறுமதியில் அதாவது ரூபா 480,000 மானியமாகவும் ரூபா. 520,000 கடனாகவும் வழங்குமாறு அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும் அமைச்சின் மூலம் வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2017 ஆம் ஆண ் டில் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டியின் பிரகாரம் ஒரு வீட்டின் பெறுமதியில் ரூபா 494,000 தொகை 4% வட்டி வீதத்தின் கீழ் கடன் | **2022** | நலனாளிகளிடமிருந்து கடன் அறவிடப்பட்ட அளவு மற்றும் அறவிட வேண்டிய அளவு ஒவ்வொரு நலனாளி ரீதியாக பிரித்து இனங்காணக்கூடிய வகையில் கடனை மீள அறவீடு செய்தல் சம்பந்தமாக முறைப்படியாக நிதிப் பிரமாணம் 501(இ) மற்றும் 502(ஆ) இன் பிரகாரம் அமைச்சினால் ஏடுகள் பேணப்பட வேண்டியதுடன் இதுவரை கடன் அறவீடுகள் பூரணப்படுத்தப்பட்டுள்ள நலனாளிகளுக்கு அவர்களின் பணம் அறவிடப்பட்டுள்ளது என்பதனை அவர்களுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். | அந்தக் காலகட்டத்தில், ஒரு வீட்டிற்கு அங்கீகரிக்கப்பட்ட ரூபா 1,000,000.00 இல், ரூபா. 50,000.00 தொகை ஆரம்ப வேலைக்காக ஒதுக்கப்பட்டு, மீதமுள்ள ரூபா. 950,000.00 பெறுமதியில் 52% (ரூபா. 494,000.00) கணக்கிடப்பட்டுள்ளதுடன், அந்தத் தொகை வீட்டின் மொத்த பெறுமதியான கோப்பு பரிசோதனையின் போது ரூபா 1,000,000.00 கழித்த பிறகு பெறப்பட்ட தொகை ரூபா. 506,000.00 ஆக கணக்கிடப்பட்டிருந்தமை காணப்பட்டது (i).2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி பொறுப்பினால் சேகரிக்கப்பட்ட கடன்கள் | 2015 ஆம் ஆண்டு முதல் 25.10.2024 ஆந் திகதி வரை, 57 வீட்டுத் திட்டங்கள் 1,159 வீட்டு அலகுகளிலிருந்து ரூபா 101,232,647 அறவிடப்பட்டுள்ளன.<br>2015 ஆம் ஆண்டுக்குப் பிறகு நிர்மாணிக்கப்பட்டு பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்ட 5 வீட்டுத் திட்டங்களிலிருந்து கடன்அறவீடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 25.10.2024 நி,ல் உள்ளவாறு , 97 வீட்டுவசதித் திட்டங்களிலிருந்து அறவிடப்பட்ட கடன் தொகை ரூபா 6,147,392 தொகை 2024 அக்டோபர 25 ஆந் திகதி அறவிடப்பட்டிருந்தது. 2024.09.19. ஆந் திகதி கடன் வசூல் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அடிப்படையிலானதுடன் மிகுதி ரூபா 506,000 தொகை அமைச்சினால் செலவு செய்வதாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் வழிகாட்டியில் ஒரு வித்தியாசம் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் ஊழியர் தோட்ட வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம் அவ்வாறு அமைச்சிற்கு கடனை செலுத்துதல் ஆரம்பிப்பது எத்திகதியிலிருந்து என்பது வழிகாட்டியில் அல்லது உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அமைச்சில் கடன் மற்றும் வட்டியை அறவீடு செய்வது சம்பந்தமாக முறையான அறிக்கை பேணப்பட்டிருக்காததுடன் அதற்கிணங்க கடனையும் வட்டியையும் அறவீடு செய்தல் முறையாக இடம் பெற்றிருக்கவில்லை என்பது கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | குறித்த தகவல்களைப் பெறுவதற்காக, பெருந்தோட்ட மனித மனித வள அபிவிருத்தி பொறுப்பிற்கு 2023.05.11, 2023.06.07, 2024.03.20 ஆகிய திகதிகளில் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.<br>(ii)2017 ஆம் ஆண்டுக்குப் பிறகு அமைச்த்தால் சேகரிக்கப்பட்ட வீட்டுக் கடன் தவணைகள் பற்றிய தகவல்கள் கணினிமயமாக்கப்பட்டு பராமரிக்கப்ப்ப செல்லப்படும். | ஒப்பந்தத்திற்கான பரிந்துரைகள் சட்டமா அதிபர் துறையிதிணைக்களத்திடமிருந்து பெறப்பட்டுள்ளன. இந்த வழிகாட்டிகல் எதிர்காலத்தில் பயனாளிகளுக்கு வழங்கப்படும் வீட்டுவசதி திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| **3** | நுவரெலியா வலயத்தின் தெரிவுப் பரிசோதனையின் | **2022** | அமைச்சினால் செயல்படுத்தப்படும் வீட்டுவசதித் | தோட்டக் கம்பனிகளால் மேற்கொள்ளப்படுகின்ற |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரகாரம் கடன் அடிப்படையில் நலனாளிகளுக்கு 235 வீடுகளை நிர்மாணிப்பதற்காக மேற்கொண்ட செலவின் ஒரு பகுதி கடன் அடிப்படையில் வழங்கியதாக அமைச்சினால் சமர்ப்பித்து நலன்பெறுனர்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்த போதிலும் செல்லுபடியான சட்டரீதியான உடன்படிக்கை இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் கடனை அறவீடு செய்வதற்கு அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் தேவையான எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | திட்டங்கள் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள பெருந்தோட்ட நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகளில் செயல்படுத்தப்படுவதால், எதிர்காலத்தில் புதிய வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்தும் போது பயனாளிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான பொருத்தமான அளவுகோல்களை அறிமுகப்படுத்துவதும், பெருந்தோட்ட கம்பனிகள் மற்றும் மனித வள அபிவிருத்தி பொறுப்புடன் ஒருங்கிணைத்து குழுவொன்று மூலம் மேற்கொள்வதற்கு பெருந்தோட்ட அமைச்சிற்குத் தெரிவிக்க குறித்துக் கொள்ளப்பட்டது. | கடன் அறவீடு தகவல் விசாரணையின் பிரகாரம் மீண்டும் மனித வள அபிவிருத்தி பொறுப்பிற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. |
| **4** | ஹற்றன் வலயத்தில் பரீட்சித்த 370 வீட்டு மாதிரிகளுக்கு மத்தியில் 08 வீடுகள் | **2022** | கடன்கள் மற்றும் வட்டி அறவீடு தொடர்பான நாளதுவரையாக்கப் | தகவல் கோரலின் பிரகாரம் பெருந்தோட்ட மனித அபிவிருத்திடு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தோட்டத்தில் சேவையாற்றாத நபர்களுக்கு வழங்கப்பட்டிருந்ததனால் இந்த வீடுகளுக்குரிய கடனை அறவீடு செய்கின்ற நடவடிக்கை சிக்கலானது என்பது அவதானிக்கப்பட்டதுடன் நலன்பெறுனர்கள் தோட்டத்தில் சேவையாற்றியிருந்தும் அவர்களிடமிருந்து கடனையும் வட்டியையும் அறவீடு செய்தல் சம்பந்தமாக ஒவ்வொரு நலனாளிகளிடமிருந்தும் இதுவரை அறவிடப்பட்ட அளவு மற்றும் அறவிட வேண்டியது எவ்வளவு என்பது சம்பந்தமாக எதுவித தகவலும் அமைச்சிடம் இல்லாததன் காரணமாக இக்கடனையும் வட்டியையும் அறவீடு செய்தல் சம்பந்தமாக பின்தொடர் நடவடிக்கை மற்றும் தேவைப்படுகின்ற நடவடிக்கைகள் இதுவரை அசைச்சின் மூலம் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | பட்ட தகவல்கள் 16.10.2024 திகதிய உங்கள் தகவல் கோரிக்கை எப்எல்எஸ்/MWSEID / 02/2024/2024/Info /02 ஆம் இலக்க கடிதத்திற்கு, பதிலளிக்கும் விதமாக 2024.10.22 திகதிய மற்றும் MWS – EID/03/Gov. Audit/Calling Info/2024/(fl.08) கடிதம் மூலம் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. | பொறுப்பிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. |
| **5** | 2016 திசெம்பர் 31 வரையான வீடுகளை நிர்மாணிக்கும் வழிகாட்டியின் 9.2 ஆம் | **2022** | | 2017 ஆம் ஆண்டுக்கு முன்னர் பெருந்தோட்ட மனித வள | 2024.11.04 திகதிய மீண்டுமொரு கடிதம் பெருந்தோட்ட மனித வள அபிவிருத்தி |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் அறவிடப்படுகின்ற பணத்தை ஒவ்வொரு மாதத்திலும் முறையாக அறவிட்டு அனுப்பிவைத்தல் தோட்ட அதிகாரிகளினதும் தோட்ட ஊழியர் வீடமைப்பு கூட்டுறவுச் சங்கத்தினதும் பொறுப்பாகும் எனவும் அப்பணத்தை மாதாந்தம் பெற்று அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அரசாங்கத்தின் திரட்டு நிதியத்திற்குச் செலவு வைக்கும் வகையில் அமைச்சிற்கு நேரடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும் வீடுகளை வழங்குவதற்காக நேரடியாகச் சம்பந்தப்படுவது மற்றும் நலன்பெறுனர்களைத் தெரிவு செய்தல் மேற்கொள்வது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு என்பதனாலும் மேற்கூறிய நிறுவனம் அமைச்சினால் முறையாகத் தெரியப்படாமையாலும் அவ்வாறு அறவிடப்பட்ட கடன் பணம் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப | பொறுப்பினால் அறவிடப்பட்ட கடன்கள் குறித்த தகவல்களைப் பெறுவதற்காக, 2023.05.11, 2023.06.07, 2024.03.20 ஆகிய திகதிகளில் கடிதங்கள பெருந்தோட்ட மனிதவள பொறுப்பிற்குக்கு் அனுப்பப்பட்டுள்ளன . | பொறுப்பிற்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது. |

பொறுப்பினால் ஒன்று சேர்த்து வைத்துக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பின் ஆண்டறிக்கையின் இறுதிக் கணக்கிற்கு இணங்க அவ்வாறு கடனை சேகரித்து அமைச்சிற்கு செலுத்தாதவை 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 30,853,120 தொகையும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 37,747,494 தொகையும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 33,251,133 தொகையுமாகும். மேற்கூறிய மீதிகளுக்கு மேலதிகமாக 2018 ஆம் ஆண்டில் பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பு ரூபா 4,974,314 தொகையான கடனை மீள அறவிட்டுள்ளதாகக் காட்டியிருந்தது. அமைச்சிற்குச் செலுத்தாத பணம் தொடர்பாக எங்களால் 2016 ஆம் ஆண்டிலிருந்து சுட்டிக்காட்டிய போதிலும் 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில்

| | | | | |
|---|---|---|---|---|
| | அமைச்சினால் முறையே ரூபா. 7,588,525, ரூபா 7,472,296 மற்றும் ரூபா 7,204,751 தொகைகள் மாத்திரம் அறவிடக் கூடியதாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க அமைச்சிற்காகச் சேகரிக்கப்பட்டு 2018 திசெம்பர் 31 வரை அமைச்சின் வருமானத்திற்கு கிடைத்திருக்காத மீதி ரூபா. 31,020,696 தொகை என்பது பெருந்தோட்ட மானிட அபிவிருத்தி நம்பிக்கைப் பொறுப்பின இறுதிக் கணக்கின் பிரகாரம் காட்டப்பட்டுள்ளது. | | | |
| **6** | வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப் பட்ட கடன் பணத்திற்காக 4% வட்டியினை அறவிடுவதாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த வட்டியினை அறவீடு செய்தல் 261/2017 ஆம் இலக்க 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய அரசாங்க கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் அரசாங்க வருமானம் தொடர்பான | **2022** | தோட்ட சமூகத்திற்கான வீடுகளை நிர்மாணித்தல் - ஒரு வீட்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகையை ரூபா. 650,000.00 இலிருந்து ரூபா 1,000,000.00 ஆக அதிகரித்தல்” என்ற விடயம் தொடர்பாக, ஒரு வீட்டிற்கான மதிப்பீடுகள் 2017 மார்ச் 01 திகதிய ஆம் இலக்க | நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒரு அறிக்கை மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான ஒரு அறிக்கை 2011 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | அமைப /17/0306/739/002 அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் இந்தத் தொகையை ரூபா. 1,000,000.00 ஆக உயர்த்தவும், ரூபா 480,000.00 மானியமாகவும், மீதமுள்ள ரூபா 520,000.00 கடனாகவும் பயனாளிகளிடமிருந்து 15 ஆண்டுகளுக்குள் அறவிடவும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது, ஆனால் அதன் பின்னர் கடனுக்கு வட்டி வசூலிக்க எந்த முடிவும் எடுக்கப்படவில்லை, இந்த வீட்டுக் கடன்களுக்கு வட்டி அறவிடப்படவில்லை. எனவே, வருமான அறிக்கைகள் மற்றும் வருமான நிலுவைத் தொகை அறிக்கைகள் தயாரிக்கப்படவில்லை என்பதை தயவுசெய்து உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். | |
| **7** | இலங்கையில் பெருந்தோட்ட | 1.ஒரே செயற்பாட்டினை | 25/09/2015 திகதிய 1933/13 ஆம் | අමාත්‍යාංශය වෙත පැවරී ඇති කාර්යභාරයන් , |

| | | | |
|---|---|---|---|
| வலயத்தில் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதனை முன்னிட்டு பெருந்தோட்ட வலயத்திற்காக 32 ஆம் இலக்க 2018 ஒக்டோபர் 04 ஆந் திகதிய பாராளுமன்ற அதிகாரச் சட்டத்தின் மூலம் மற்றும் 2018 ஒக்டோபர் 05 ஆம் திகதிய வர்த்தமானியின் மூலம் புதிய கிராமங்களை அபிவிருத்தி செய்தல் அதிகார சபை என்ற பெயரில் ஒரு அதிகார சபையினைத் தோற்றுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் கடமைகளும் அப்போதைய மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சின் பிரதான கடமைகளாகவே இருந்ததுடன் அதனை ஸ்தாபித்து 2020 திசெம்பர் 31 வரை ரூபா. 8,835,016 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் எதுவித செயற்பாடும் நிறைவேற்றப்பட்டிருக்காமை போல தோட்ட அதிகாரசபையுடன் ஒருங்கிணைப்பு | நிறைவேற்றுவதற்கு அமைச்சிற்கு மேலதிகமாக புதிய அதிகார சபையைத் தோற்றுவித்தல் நடைமுறைச் சாத்தியமற்றது என்பதனால் அதனை மீண்டும் மீளாய்விற்கு உட்படுத்துதல் வேண்டும். | இலக்க அசாதாரண வர்த்தமானியின் பிரகாரம் புதிய கிராம உட்கட்டமைப்பு மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு நிறுவப்பட்டுள்ளது, மேலும் அந்த வர்த்தமானியின் பிரகாரம், பின்வரும் செயல்பாடுகள் அமைச்சின் முக்கிய செயறபாடுகளாக அடையாளம் காணப்பட்டுள்ளன.<br>1. அரசு மற்றும் தனியார் தோட்ட நிறுவனங்களால் பணியமர்த்தப்பட்ட நிலமற்ற லைன் வீடுகளில் வசிக்கும் மக்களுக்காக புதிய கிராமங்கள்/நகரங்களை உருவாக்குதல்.<br>2. தோட்டத் துறையில் சமூகத்தை மேம்படுத்துவதற்காக வாழ்வாதார | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் இந்த அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், அதிகாரசபைக்கு ஒதுக்கப்பட்டுள்ள செயல்பாடுகளை மிகவும் திறமையாக மேற்கொள்ளும் வகையில் நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்தவும் செயல்படுத்தவும் தேவையான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டு வருகின்றன. |

நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அமைச்சிற்கு இல்லாத இயலுமை அதிகார சபைக்கு இருப்பதற்கு வாய்ப்பு இல்லாததன் காரணமாக இந்த அதிகார சபையை தோற்றுவித்ததன் மூலம் அரசாங்கத்திற்கு மேலதிக செலவுச் சுமையை மாத்திரம் மேற்கொள்ள வேண்டியிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

உருவாக்கும் திட்டங்களை செயல்படுத்துதல்.

3. பெருந்தோட்ட சமூகத்தின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார மேம்பாட்டிற்கான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட பிற தேவைகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தல்.
4. கிராமப்புற தோட்டத்துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்.

அதன் பிரகாரம் அந்த நேரத்தில் அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட பணிகளைச் செயல்படுத்துவது அமைச்சின் அதிகாரத்தின் கீழ் இருந்தது.

1. தோட்ட மனித அபிவிருத்தி மன்றம் மற்றும்
11. பிரஜா (சமூக) சக்தி செயல்பாட்டு பிரிவு

இது செயற்படுகின்றதெ

ன
என்று
பாராளுமன்றத்திற்
கு அறிக்கை
இடல்.
(2017
செயலாற்றல்
(முன்னேற்றம்)
மற்றும் எதிர்கால
திட்டங்கள் - 2018
வரவு செலவுத்
திட்டத்திற்காக
பாராளுமன்றத்தில்
சமர்ப்பிக்கப்பட்ட
அறிக்கை)

## 2.16 கொழும்பு நகரம் மற்றும் அதனை அண்மித்த பிரதேசங்களுக்கான நுழைவுப் பாதைகளில் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக உரிய அரச நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயலாற்றலை மதிப்பீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | **வீதி அபிவிருத்திக் கொள்கை** இலங்கையில் வீதி அபிவிருத்தியை ஒழுங்குபடுத்துவதற்காக துறை சார் வீதிக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன் அது வரைவு மட்டத்திலே காணப்படுகின்றது என்பதும் அவதானிக்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையில் 2030 நிகழ்ச்சி நிரலுக்கு அமைய நிலைத்திருக்கும் அபிவிருத்தி நோக்கம் 9 (வலுவான உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், முழுமையான மற்றும் நிலைத்திருக்கும் தொழில்மயமாக்கலை முன்னேற்றி புத்தாக்கலை ஊக்குவித்தல்), நிலைத்திருக்கும் அபிவிருத்தி நோக்கம் 11 (நகரசபை குடியிருப்புகளை முழுமையாக, பாதுகாப்பாக, வலுவாக மற்றும் நிலைத்திருக்கக் கூடியதாக உருவாக்குதல்), நிலைத்திருக்கும் அபிவிருத்தி நோக்கம் 12 நிலைத்திருக்கும் நுகர்வு மற்றும் உற்பத்தி முறைகளை உறுதி | **2022** | 1.தேசிய பௌதீக திட்டத்துக்கு இணங்க நகர போக்குவரத்து மற்றும் பெருந் தெருக்கள் போன்ற துறைகளில் உள்ள திட்டங்களைப் போன்றே அந்த துறைகளுக்கு உரிய உள்ளூராட்சி நிறுவனங்களின் திட்டங்களும் ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் சட்ட மயமாக்கப்பட்டு அந்தத் திட்டங்களை ஒன்றாக சரியான நேரத்தில் நடைமுறைப்படுத்து வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | இதுவரை தயாரிக்கப்பட்டுள்ள துறை சார் வீதிக் கொள்கையை ஆய்வு செய்து மேம்படுத்துதல் ஆலோசனை சேவை யூடாக மேற்கொள் வதற்கு தீர்மனிக்கப் பட்டுள்ளது. அது ICDP (Inclusive Connectivity & Development Project) செயற் திட்டத்தின் விதிகளின் கீழ் மேற்கொள்ள வேண்டிய தேவையான பணிகள் நடைபெற்று வருகின்றன. இங்கு, சாலை மேம்பாட்டுக் கொள்கைகளை உருவாக்கும் போது, தேவையான நிலையான அபிவிருத்தி நோக்கங்கள் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டு, அதைச் சேர்க்க ஆலோசனை சேவைக்கு தேவையான | துறை சார் வீதிக் கொள்கை இது வரை வரைவு மட்ட நிலைமையிலேயே காணப்படுகின்றது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செய்தல், நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் 13 காலநிலை மாற்றம் மற்றும் அவற்றின் தாக்கங்களுக்கு எதிராக உடனடியாக செயற்படுதல் மற்றும் வீதி அபிவிருத்திக்கு உரிய இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான பங்களிப்பு என்பன அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | | பங்களிப்பு வழங்கப்படுகிறது. | |
| **2.** | **தேசிய போக்குவரத்துக் கொள்கை**<br>1991 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்ட போக்குவரத்து கொள்கை 2009 ஒக்தோபர் 14 ஆம் திகதி திருத்தப்பட்டு இருந்தது. அதனை இற்றைப்படுத்தும் நோக்கில் செயற்திட்டங்களை நடாத்துதல், குறுங்கால ஆலோசனைக் கட்டணம், பொது மக்கள் விசாரணை மாநாடு, பத்திரிகை விளம்பரம் என்பவை உள்ளிட்ட கொள்கை தயாரிக்கும் செயன்முறைகளுக்காகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் நிதியத்திலிருந்து ரூபா 2.5 பில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் தேசிய போக்குவரத்துக் கொள்கை வரைவுக்காக பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளுதல், பத்திரிகை | **2022** | தேசிய போக்குவரத்து கொள்கை ஒன்றின் தேவைப்பாடு சரியான முறையில அடையாளம் காணப்பட்டு பல்வேறு பிரிவுகளை உள்ளடக்கி நிலைபேறான போக்குவரத்து ஒழுங்கமைப்பினை நோக்காகக் கொண்டு பொருத்தமான கொள்கையினை உடனடியாக அங்கீகரித்தல். | 2020.03.02 ஆந் திகதி போக்குவரத்து அமைச்சின் செயலாளரால் ஒன்பது பேர் கொண்ட நிபுணர் குழு நியமிக்கப்பட்டது, மேலும் தற்போதுள்ள போக்குவரத்துக் கொள்கையைப் புதுப்பிக்கப்பட்ட வரைவு தேசிய போக்குவரத்துக் கொள்கை - 2019, மேற்கண்ட நிபுணர் குழுவின் விரிவான பகுப்பாய்விற்குப் பிறகு தயாரிக்கப்பட்டதுடன் அதற்கு இணங்க இருந்தது. அப்போதைய அரசாங்கத்தின் ”செழிப்பின் பார்வை” எனப்படும் தேசிய கொள்கை கட்டமைப்புடன். சட்டத்துடன் இணங்குவது தொடர்பாக | இந்த வரைவு போக்குவரத்துக் கொள்கை 2024.03.21 ஆந் திகதி தேசிய திட்டமிடல் திணைக்களத்திடம் மீளாய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிறகு, 10.05.2024 ஆந் திகதி, தேசிய திட்டமிடல் திணைக்களம் திருத்தங்களை அமைச்சகிற்கு அனுப்பியது, அந்த திருத்தங்களைச் செய்த பிறகு, தேசிய தரைப் போக்குவரத்துக் கொள்கை புதுப்பிக்கப்பட்டு, அமைச்சரவையின் அங்கீகாரத்திறகாக 09.07.2024 ஆந் திகதி மீண்டும் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விளம்பரங்களை பிரசுரித்தல் மற்றும் அதன் மொழிபெயர்ப்புக் கட்டணமாக ரூபா.334,735 செலவிடப்பட்டு இருந்தது. அதற்கமைய 2009 ஆண்டு தொடக்கம் 2022 ஜுலை 18 ஆம் திகதி வரையிலுமான 12 வருடங்களுக்கும் அதிகமான காலம் கொள்கையினை இற்றைப்படுத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த போதிலும் தேசிய போக்குவரத்துக் கொள்கை இன்னமும் வரைவு மட்டத்திலேயே காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | | | செய்யப்பட்ட பரிந்துரைகளைக் கொண்ட குழு அறிக்கை, 23.08.2020 ஆந் திகதி தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டது. இந்த வரைவு 22.07.2022 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகரரித்திற்காக சமர்ப்பிக்கப்பட்டது, ஆனால் அதில் இருந்த குறைபாடுகள் காரணமாக, வரைவு அங்கீகரிக்கப்படவில்லை. இந்த வரைவுகள் மேற்கூறிய தரப்பினர்களுடன் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு, 04.04.2023 திகதிய MT/30/2023 ஆம் ,லக்க அமைச்சரவைக் விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டன. | |
| **3** | **இலங்கை போக்குவரத்துச் சபை** 2011 - 2020 தேசிய பௌதீக திட்டத்திற்கு அமைய சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் வசதியான போக்குவரத்து சேவையினை வழங்கக் கூடிய பேரூந்துகளை பொதுப் போக்குவரத்து சேவைக்காக ஈடுபடுத்துதல் வேண்டும். பிரயாணிகள் போக்குவரத்து முகாமைத்துவ | 1. | பயணிகள் போக்குவரத் திற்காக குறைந்த உயர மிதி பலகைகள் (LOW bed) கொண்ட அதிக திறன் கொண்ட, குளிரூட்டப்பட்ட பேருந்துகளை அறிமுகப்படுத்துதல். | 2019 ஜூலை மாதம் அமைச்சரவைப் பத்திரம் மூலம் 80 குளிரூட்டப்பட்ட தாழ்தள டீசல் பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கான அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டு பெறுகை செய்யப்பட்டு ஒரு வழங்குனர் தேர்ந்தெடுக்கப்பட் | பயணிகளுக்கு உகந்த, வசதியான, நவீன பேருந்துகளின் இறக்குமதி இடம் பெறவில்லை. |

| | | |
|---|---|---|
| அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் அவ்வாறான 327 பேருந்துகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 3,695 மில்லியன் ஆகும். அதில் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மொத்த பேருந்துகளின் எண்ணிக்கை 28 சதவீதமாக உள்ளதுடன் மீதி 72 சதவீதத்திற்கு சாதாரண பேருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் பின்னர் பயணிகள் தனியார் போக்குவரத்தில் இருந்து பொதுப் போக்குவரத்துக்கு ஈர்த்த கொள்ளும் நோக்கில் திருத்தப்பட்ட செயல்பாட்டுத் திட்டத்திற்கு அமைய 4089 வசதியான பேருந்துகளும் மற்றும் 925 சாதாரண பேருந்துகள் கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்தது. அவ்வாறு இருக்கையில் வசதியான பேருந்துகளை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த 11 செயற்திட்டங்களில் 2 செயற்திட்டங்களை மாத்திரம் செயற்படுத்தக் கூடியதாக இருந்தது. அதில் 250 பேருந்துகளை மட்டு நகர்புறத்தில் ஈடுபடுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு | (குறுகிய தூர பேருந்துகளுக்கும் நீண்ட தூர பேருந்துகளுக்கும் வசதிகளை வழங்குதல்) | டதுடன். ஒப்பந்தம் வழங்கப்படுவதற்கு முன்னர் 2020 ஆம் ஆண்ற்காக ரூபா. 1500 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்து கொள்வதற்கு அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது. எனினும் அங்கீகாரம் வழங்கப்படவில்லை. அங்கீகாரம் பெறப்படாததால் தொடர்புடைய பெறுகை இடைநிறுத்தப்பட்டது. இலங்கை போக்குவரத்து சபைக்கு 2000 பயணிகளுக்கு ஏற்ற, வசதியான, நவீன பேருந்துகளை உழைத்து கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் வழங்க விரும்பும் முதலீட்டாளர்களிடமிருந்து 2019 ஒக்டோபர் மாத்தில் ஆர்வ வெளிப்பாடுகள் அழைக்கப்பட்ட போதிலும், 2020 ஜூன் மாதத்திற்குள் 07 முதலீட்டாளர்கள் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்பட்ட போதிலும், இந்தத் திட்டம் குறித்த ஒரு சாத்திய வள ஆய்வு நடத்தப்படவில்லை, மேலும் அதன் பெறுபேறுகளை் மேலும் நடவடிக்கைகளை |

இருந்ததுடன் அதன் மூல மேல் மாகாணத்தினுள்ளும் பேருந்து அளவினை ஈடுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இவ்வாறு அவ்வப்போது செயல் நடவடிக்கைத் திட்டம் திருத்தப்படுதல் மற்றும் இலக்காகக் கொண்ட பேருந்து எண்ணிக்கை சாத்தியப்படாமை என்பன காரணமாக எதிர்பார்க்கப்பட்ட இலக்கினை எட்டுவதற்கு முடியாது இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டில் 9 சொகுசு பேருந்துகளை மாத்திரமே கொள்வனவு செய்யக்கூடியதாக இருந்தது.

எடுப்பதற்காக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை ஆதலால் 2020 இல் நியமிக்கப்பட்ட புதிய அரசாங்கம் அந்தத் திட்டம் குறித்து மேலும் நடவடிக்கை எடுக்கவில்லை. 2020 ஆம் ஆண்டின் இறுதியில், அப்போதைய ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், 200 தாழ்தள டீசல் பேருந்துகளை வாங்குவதற்கான பெறுகை செயல்முறை ஜனவரி 2021 மாத்தின் போது தொடங்கப்பட்டது, மேலும் ஒரு வழங்குனர் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், ஒப்பந்தத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கோரப்பட்டது. இருப்பினும், 2021 ஜூலை மாதத்தில், போக்குவரத்துக்கு மின்சார வாகனங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்க அரசாங்கம் எடுத்த கொள்கை முடிவின் அடிப்படையில், எதிர்காலத்தில் டீசல் பேருந்துகளை மின்சாரப் பேருந்துகளாக மாற்றுவதற்கான வழிமுறை தொடர்பில்

ஆலோசணை பெறப்பட்டன. 2023 ஆம் ஆண்டில், ஒரு கிலோமீட்டருக்கு ஒரு நிலையான விலையின் அடிப்படையில் பொது - தனியார் கூட்டாண்மையாக நகர்ப்புற சேவைகளுக்காக 200 தாழ்தள, நவீன மின்சார பேருந்துகளைப் பெறுவதற்கான திட்டங்கள் அழைக்கப்பட்டன, மேலும் 2024 பெப்ரவரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டாளருக்கு அமைச்சரவை அங்கீகாரத்துடன் ஒப்பந்தம் வழங்கல் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், முதலீட்டாளர் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் தேவையான செயலாற்றல் பிணைப் பாதுகாப்பை வழங்கத் தவறியதாலும், பின்னர் நீடிக்கப்பட்ட காலத்தின் போதும் வழங்கு தவறியமையால் இந்தத் திட்டம 2024 ஜூலை மாதத்தின் போது கைவிடப்பட்டது. அமைச்சரவையின் அங்கீகாரத்துடன், நகர்ப்புற பூங்கா மற்றும் சவாரி சேவைக்காக Park and Ride நவீன குளிரூபாட்டப்பட்ட

| | | | | |
|---|---|---|---|---|
| | | | 34-35 இருக்கைகள் கொண்ட 50 பேருந்துகளும், நகர்ப்புற சேவைகள் மற்றும் விரைவுச் சாலைகளுக்கு 150 நவீன குளிரூபாட்டப்பட்ட தாழ்தளப் பேருந்துகளும் வழங்குனரின் விருப்பப் படி 60 மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தும் அடிப்படையில் வழங்கப்படும். இலங்கை பொதுப் போக்குவரத்திற்காக 200 நவீன குளிரூபாட்டப்பட்ட பேருந்துகளை வாங்குவதற்கு 2024 ஜூலை மாதத்தில் கேள்வி கோரப்பட்டு, ஏலச் செயல்முறை 2024 செப்டம்பர் 19, ஆந் திகதி முடிவடைந்த போதிலும், அதற்காக எந்த ஏலதாரரும் முன்வரவில்லை. | |
| **4** | **போக்குவரத்து செயற்திட்டத்திற்கான தயாரிப்பு (Transport Project Preparatory Facility)** புகையிரத சேவையினை வினைத்திறனானதாக ஆக்கும் நோக்கத்தில் கொழும்பு நகரை அண்டிய பிரதேசங்களில் பயணிகள் புகையிரத சேவையினைத் தாபிப்பதற்கான | 1.உரிய செயற்திட்டங்களைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்துவதற்காக தயாரிக்கப்படும் ஆய்வு மற்றும் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக செலவிடப்படும் அதிக | தயாரிக்கப்பட்ட திட்டங்களில், களனி பள்ளத்தாக்கு ரயில் பாதையின் மருதானையிலிருந்து பாதுக்க வரையிலான அபிவிருத்திக்காக தேவையான நிதி ஆதாரங்களைப் பெறுவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள் ளதுடன் ஆசிய அபிவிருத்தி | போக்குவரத்து திட்ட தயாரிப்பு வசதி (TPPF) இன் கீழ் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் களனி பள்ளத்தாக்கு ரயில் அபிவிருத்தி திட்டத்தை செயல்படுத்த 19.07.2021 ஆந் திகதிய Amap/21/1097/312/021 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்திற்கு தற்போது அங்கீகாரம் |

| | | | |
|---|---|---|---|
| முன்முயற்சி பணிகளுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் நிதியில் இருந்து மற ்றும் அரசின் ஒன்றிணைந்த நிதியில் இருந்து முறையே ரூபா. 1,456.5 பில்லியன் மற்றும் ரூபா. 9,798.4 பில்லியன் நிதி 254.9 பில்லியன் தொகை செலவிடப்பட்டு 06 ஆண்டுகளில் நிறைவேற்றுவதற்கு பூர்த்தி செய்வதற்கு இச் செயற்திட்டம் 2016 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இதன் பிரதான நோக்கம் கொழும்பு நகரை அண்டிய பிரதேசத்தில் பயணிகள் போக்குவரத்து சேவையினைத் தாபிப்பதற்கான சாத்தியவள ஆய்வு அறிக்கையை தயாரிப்பதற்கு மட்டுமே ஆகும். இந்த சாத்தியக்கூறு ஆய்வு அறிக்கையில் முன்மொழியப்பட்டிருந்த புகையிரத வீதி நிர்மாணிப்பதற்குத தேவையான நடவடிக்கைகளை உடனடியாக ஆரம்பித்தல் மிகவும் பயனுள்ளதாக இருந்த போதிலும் அந்த புகையிரத வீதியை நிர்மாணிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் சரியான முறையில் ஆரம்பிக்கப்படாததால . இந்த செயற் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருந்த ரூபா. 4,327 மில்லியன் செலவினம் பயனற்ற செலவாக | தொகையுடன் ஒப்பிடும் போது அவற்றின் மூலமான உற்பத்தி திறனை சரியான முறையில் பரிசீலனை செய்தல் அல்லது கடன் நிபந்தனைகள் தொடர்பிலான பகுப்பாய்வைப் பரிசீலனை செய்தல். | வங்கியும் இலங்கை அரசாங்கமும், அரசாங்க முன்னுரிமையின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இதன் விளைவாக, களனி பள்ளத்தாக்கு ரயில்வே வீதி அபிவிருத்தி கட்டம் 01 அங்கீகரிக்கப்பட்டு ஆசிய வளர்ச்சி வங்கி Pipeline பட்டியலில் 1 பில்லியன் அமெரிக்க டொலர் தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்டுள்ளது. மேற் கூறப்பட்ட நிதி இழப்புடன் நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் புதிய நிதி ஆதாரங்களை அடையாளம் காண முடியாததால், திட்டங்கள் செயல்படுத்தப்படவில்லை. |

அவதானிக்கப்பட்டு இருந்தது. 2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் செலவிடப்பட்ட உண்மையான செலவுகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் அமையும்.

| ஆண்டு | ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் | திரட்டு நிதியம் | மெ ம் |
|---|---|---|---|
| | ரூபா. (000’) | ரூபா. (000’) | ரூட (00 |
| 2017 | 115,070 | 88,470 | 20 |
| 2018 | 371,390 | 693,450 | 1,0 4 |
| 2019 | 368,910 | 784,910 | 1,1 2 |
| 2020 | 509,150 | 1,396,000 | 1,9 5 |
| மொத்தம் | **1,364,520** | **2,962,830** | 4,3 5 |

| | | | |
|---|---|---|---|
| 5 **புகையிரத செயல்திறனை மேம்படுத்துவதற்கான செயற்திட்டம் (Railway efficiency improvement project)** காணப்படும் புகையிரத சேவையினை மேம்படுத்துவதற்கான நோக்கில் 17 துணை செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் நிதியத்தில் இருந்து மற்றும் அரச ஒன்றிணைந்த | 1. உரிய செயற்திட்டங்களைச் சரியான முறையில் நடைமுறைப் படுத்துவதற்காக தயாரிக்கப்படும் ஆய்வு மற்றும் ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக | 2019 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு ஒப்பந்தங்கள் 18.03.2020 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தது.. இந்த ஒப்பந்தங்களில் ஒன்று 30.04.2020 அன்று | தற்போது, திட்டத்திற்கான திட்டமிடப்பட்ட பெறுகை நடவடிக்கைகளில் 95மூ நிறைவடைந்துள்ளன. முன்மொழியப்பட்ட பணிகளில், 07 பணிகள் ஏற்கனவே முடிக்கப்பட்டு ரயில்வே துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன, மற்ற அனைத்து பணிகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. |

நிதியத்தில இருந்து முறையே ரூபா. 28,232 பில்லியன் மற்றும் ரூபா. 5,646.4 பில்லியன் நிதியத்தை பயன்படுத்தி செயற்றிட்டம் 2019 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. இதன் கீழ் 32 அபிவிருத்திப் பணிகளை நிறைவேற்றுவதற்கு எதிர்பார்க்கப்பட்டு இருந்ததுடன் 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் 5 துணைச் செயற்திட்டங்கள மட்டுமே நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையில் ஆசிய அபிவிருத்தி வங்கிக் கடன் மற்றும் திரட்டு நிதியம் என்பவற்றிலிருந்து ரூபா. 505,220,000 செலவிடப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே குறிப்பிட்டவாறு ஆகும்.

| ஆண்டு | ஆசிய அபிவிருத்தி வங்கி | திரண்ட நிதி கடன் |
|---|---|---|
| | ரூபா. (000') | ரூபா.( 000') |
| 2019 | 84,030,000 | 1,640,000 |
| 2020 | 409,990,000 | 9,560,000 |
| மொத்தம் | **494,020,000** | **11,200,000** |

செலவிடப்படும் அதிக தொகையுடன் ஒப்பிடும் போது அவற்றின் மூலமான உற்பத்தி திறனை சரியான முறையில் பரிசீலனை செய்தல் அல்லது கடன் நிபந்தனைகள் தொடர்பிலான பகுப்பாய்வைப் பரிசீலனை செய்தல்.

வழங்கப்பட்ட போதிலும், ரயில்வே திணைக்கள தொழிற்சங்கங்களின் எதிர்ப்பின் காரணமாக போக்குவரத்து அமைச்சு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதை தற்காலிகமாக நிறுத்தி வைத்தது. மற்ற ஒப்பந்தத்தை வழங்குவதற்கு 15.07.2020 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டாலும், திறைசேரி செயலாளரின இலக்கம் ERD/IRCPRS/GEN/10 மற்றும் 08.07.2020 திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தலின் பேரில் அனைத்து ஒப்பந்த வழங்கல்களும் ஒப்பந்தங்களில் கையொப்பமிடுதலும் இடைநிறுத்தப்பட்டன. 2020 நவம்பரில் திறைசேரி செயலாளரின் தலைமையில் இந்தத் திட்டம் குறித்து நடைபெற்ற கலந்துரையாடலின் விளைவாக, 05.11.2020 ஆந் திகதி திட்ட நடவடிக்கைகளை மீண்டும் தொடங்க அனுமதி வழங்கப்பட்டது. அதன்படி, 2020 நவம்பரில் ஒரு ஒப்பந்தம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கையெழுத்தானது. இந்தத் திட்டத்துடன் தொடர்புடைய துணைத் திட்டங்களில் 11 பணிகளை 2020 ஆம் ஆண்டில் பெறுகைக் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக குறிப்பிட்ட நேரத்திற்குள் பெறுகைக் செயல்முறையை முடிக்க முடியவில்லை | |
| 6 | **அலுவலகம் மற்றும் பாடசாலைப் போக்குவரத்து சேவையினை மேம்படுத்துதல்**<br>பத்தரமுல்லை பிரதேச நிறுவனங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் கொழும்பு பிரதான ரயில் நிலையத்திலிருந்து பத்தரமுல்லை வரையில் அலுவலக போக்குவரத்துச் சேவையினை இலங்கை போக்குவரத்து சபையினால செயல்படுத்துவதன் மூலம் அரச உத்தியோகத்தர்களின் பயணிப்பது தொடர்பில் தற்போது அதிக போக்கு ஏற்பட்டுள்ளதுடன அதிவேக வீதிகளைப் போன்றே ஏனைய வீதிகளுக்கும் நிறுவன மட்டத்தில் மற்றும் தனியார் மட்டத்தில் அந்த சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சலுகைக் கட்டணங்களை | 1பத்தரமுல்லை பிரதேசத்தில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் அந்த நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் பொதுமக்களுக்காக பிரதான ரயில் நிலையங்களில் இருந்து பத்தரமுல்லை வரையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையைத் தாபித்தல் மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்தல். | பத்தரமுல்லை பிரதேசத்தில் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் அந்த நிறுவனங்களில் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக வருகை தரும் பொது மக்களுக்காக பிரதான ரயில் நிலையங்களில் இருந்து பத்தரமுல்லை வரையில் பொதுப் பயணிகள் போக்குவரத்துச் சேவையைத் தாபித்தல் மற்றும் வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நீண்ட கால முயற்சிகள் இருந்த போதிலும் பயணிகளுக்கு வசதியான தொடர்பு மற்றும் பயணிகளை ஏற்றிக்கொள்வதற்கு புள்ளியை | இது குறித்து பாராளுமன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவில் விவாதிக்கப்பட்டு, பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு தலங்கம டிப்போ பொருத்தமான இடமாக முன்மொழியப்பட்டது, ஆனால் அது பத்தரமுல்லை அலுவலக வளாகத்திலிருந்து வெகு தொலைவில் இருப்பதால், அந்த திட்டத்தை செயல்படுத்துவது சிக்கலாகிவிட்டது. |

அறவிட்டு மேற்கொள்ளப்படும் இந்த போக்குவரத்து முறையின் மூலம் அலுவலக ஊழியர்களுக்கு வினைத்திறனான சேவையினை வழங்குவதுடன் அது தொடர்பான ஒழுங்குபடுத்தல்கள் மூலம் அதனை மேலும் விரிவுபடுத்தும் சாத்தியக்கூறுகள் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த சலுகைகள் அலுவலக உத ˙தியோகத்தர்களைப் போன்றே சேவையினை பெற்றுக் கொள்ளும் பொது மக்களுக்கும் விரிவுபடுத்தக் கூடிய சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

அமைப்பதற்கு (Touch and Go) பொருத்தமான இடம் இல்லாதது ஒரு பெரிய பிரச்சனையாக உள்ளது. இது தொடர்பாக நகர பிவிருத்தி அதிகாரசபையுடன் பல சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன, மேலும் முன்மொழியப்பட்ட இடம் கலப்பு அபிவிருத்தித் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான திட்டங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது

## 2.17 அரச நிறுவனங்களிற்கான கட்டிடத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் அவற்றின் பயன்பாடு.

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | கட்டிடங்களை விலைமதிப்பீடு செய்தல், பெறுமதியினைத் தீர்மானித்தல், கட்டடங்களை ஆவணப்படுத்துதல். 2013 ஜுன் 24 ஆம் திகதியிலான அரச கணக்கீட்டுத் திணைக்களத்தின் GFS/02 இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் அரச காணி மற்றும் கட்டடங்களை விலை மதிப்பீடு செய்வதற்காக 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 7528 கோவைகள் கிடைக்கப் பெற்று உள்ளதுடன் அவற்றுள் 6625 கோவைகளின் செயல்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு இருந்த போதிலும்இன்னமும் விலை மதிப்பீடு செய்யப்பட்டுக் கொண்டிருக்கும் கோவைகளின் | 2022 | 1. மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் அரசு நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டிடங்களை மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு, நிறுவனங்களின் கணக்கீட்டு முறைமையில் அந்த பெறுமதிகள் உள்ளிடப்பட்டு, கட்டிடங்களின் பெறுமதி நாளதுவரையாக்கப்பட்ட நிலையில் வைக்கப்படுகிறது. | மதிப்பீட்டிற்கான கோரிக்கைகள் பெறப்பட்டிருந்த போதிலும், தொடர்புடைய ஆதனங்களுக்குத் திட்டங்கள், உரிமைப் பத்திரங்கள் மற்றும் கட்டிடத் திட்டங்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில், அந்த ஆவணங்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற நடவடிக்கை எடுக்குமாறு தொடர்புடைய நிறுவனங்களின் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டு அவற்றை பெற்றுக்கொள்வதற்கும் உரிமை அமைச்சுக்களில் ஏற்படும் மாற்றங்கள் காரணமாக நிறுவனங்களுக்கு இடையில் ஆதனங்களின் உரிமை மாற்றப்படுகின்றன, | 2024 செப்டம்பர் 30 ஆந் திகதி வரை காணிகள் மற்றும் கட்டிடங்களை மதிப்பீடு செய்வதற்காக 8990 கோரிக்கைகள் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், அவற்றில் 7823 கோவைகளின் மதிப்பீடு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன . தவிர்க்க முடியாத காரணங்களால் மூடப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 625 ஆக இருந்ததுடுன் 542 கோப்புகளின் மதிப்பீடு இன்னும். மேலும் நடந்து கொண்டிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. |

| | |
|---|---|
| எண்ணிக்கை 352 என்பது அவதானிக்கப்பட்டது. ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்படாமல் 551 கோவைகள் மூடப்பட்டிருந்தன. அதற்காக உரிய நில அளவை படம் மற்றும் உரிமைத்துவத்தை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இல்லாமை. பிரதேச அலுவலகங்களுக்கு உரிய காணிகளின் நில அளவைப் படம் மற்றும் கட்டடத் திட்டம் கிடைத்திருக்காமை. சில நிறுவனங்கள் மூலம் பாதுகாப்பு காரணங்களின் அடிப்படையில் அந்த கட்டடங்களுக்குள் நுழைய அனுமதி இல்லாமை. குறித்த சொத்துக்கள் சரியான முறையில் அமைக்கப்பட்டுள்ளமையை அடையாளம் காண முடியாததுடன், விண்ணப்பதார நிறுவனங்களுக்கு சொத்துக்களின் அமைப்பு தொடர்பான தெளிவு இல்லாமை. | பொதுக் கணக்குத் துறையில் நடைபெற்ற முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் |

| | | |
|---|---|---|
| | சொத்துக்களுக்கான உரிமைத்துவம் மாற்றமடைதல், உரிமைத்துவம் மாறிய நிறுவனத்தின் மூலம் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு தெரிவிக்கப்படாத காரணத்தால் சொத்துக்களின் உரிமைத்துவம் உறுதிப்படுத்தப்பட்டு அறிக்கையளிக்க முடியாமை. ஒவ்வொரு அமைச்சும் அவ்வப்போது வேறு அமைச்சுடன் இணைக்கப்படுவதால் சொத்துக்களின் உரிமைத்துவம் எந்த அமைச்சிடம் உள்ளது என்பதனைத் தீர்மானமாக அடையாளம் காண முடியாமை. போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தன.. | |
| 2 | **இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ள நிர்மாணங்கள்** அரச நிறுவனங்களில் இடவசதி தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்து கொள்ளும் நோக்கில் | 2022 |

| | | | |
|---|---|---|---|
| நிர்மாணிக்கப்படும் கட்டடங்களைக் குறித்த கால எல்லைக்குள் நிர்மாணிப்பதற்குப் போதிய அளவு நிதி இல்லாமை, நிர்மாண பலவீனங்கள், நிர்மாணத்தை நிறுத்த தீர்மானிக்கும் போது ஏற்பட்டுள்ள குறைபாடு போன்ற காரணங்களின் அடிப்படையில் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. எடுத்துக் காட்டாக சில கீழே காட்டப்பட்டுள்ளன. | | | |
| I. மஹாவலி அதிகார சபையினால் வதிவிட வசதிகளை வழங்குவதற்குக் ரம்பகன் ஓயா வலயத்தில் உள்ள மஹாஓயா முகாம் வளவில் IV ஆம் தர உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 4,843,183 பெறுமதியான ஒப்பந்தம் வழங்கப்பட்டது. 20 சதவீத பௌதீக முன்னேற்றம் அடைந்து, ரூபா 1,414,556 | | ரம்பகன் ஓயா வலயத்தில் உள்ள மஹாஓயா முகாம் வளவில் IV ஆம் தர உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிப்பதற்குரிய எஞ்சிய பணிகளை முடிக்க மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கேள்வி செயல்முறைக்கு அனுப்பப்பட்ட போதிலும், நாட்டில் நிதி பற்றாக்குறை காரணமாக, கட்டிடம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால், நிர்மாணப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. | ரம்பகன் ஓயா வலயத்தில் உள்ள மஹாஓயா முகாம் வளவில் IV ஆம் தர உத்தியோகபூர்வ இல்லம் 2024 ஆம் ஆண்டில் நிதிஏற்பாடு கிடைதத்தால் தங்குமிடத்திக் எஞ்சிய வேலைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படடுகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| செலவினம் மேற்கொள்ளப் பட்டிருக்கையில் அந்நிர்மாணம் பாதியிலேயே நிறுத்தப்பட்டிருந்த ன. | தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக புதிய கட்டிடங்கள் கட்டுவது குறைவாக இருப்பதால், கட்டிடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும், ஏற்கனவே உள்ள கட்டிடங்களைப் பயன்படுத்துவதிலும் சிக்கனமாகச் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியம். | | |
| II .மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான வளவ விசேட அதிகார பிரதேசம் எம்பிலிப்பிட்டிய - முரவெசிஹேன எனும் முகவரியில் வதிவிட வியாபார முகாமைத்துவ அலுவலகத்தின் நிர்மாண நடவடிக்கை களுக்காக ரூபா 14,757,550 மதிப்பிடப்பட்டு இருந்த போதிலும், உறுதிப்படுத்தப்பட்ட வேலையின் அளவு ரூபா.5,867,830 ஆகவும் இருந்ததுடன் மற்றும் பௌதீக முன்னேற்றம் 85 சதவீதமாக இருந்த போதும் நிதி இல்லாத காரணத்தால் ஒப்பந்தம் 2021 திசம்பர் 22 ஆம் திகதி முடிவுறுத்தப்பட்டிருந் தது. | . | ஒப்பந்ததாரர் நிர்மாணத்தை பூர்த்தி செய்யத் தவறியதால், நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டு ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. மஹவலி அதிகாரசபைக்கு வேலை ஆரும்பிப்பு துமுற்பணஷம் ரூபா 2,367,071 உம், மூலப்பொருள் முற்பணமாக ரூபா . 1,446,980 உம், எஞ்சிய வேலைகளில் 25 சதவீதமான அதாவது ரூபா 1,006,406 தொகையை ம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டன. ஒப்பந்ததாரருக்கு ரூபா . 1,171,924 செலுத்த வேண்டியிருந்த போதிலும், C வலயத்திற்கு ஒப்பந்ததாரரிடமிருந் து அறவிடப்பட | 2024 ஆம் ஆண்டில் நிதி பெறப்பட்டதால், விடுதிகளின் மீதமுள்ள பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டிய ஆரம்பிப்பு முறபணத்தை செலுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. | |
| III. நெற் சந்தைப்படுத்தல் சபையின் மத்தவத்த களஞ்சியசாலையின் புதுப்பித்தல் நடவடிக்கைக்காக ரூபா.14,069,468 இற்கான மதிப்பீட்டுடன் 2017 நவம்பர் 01 ஆம் திகதி ஒப்பந்தம் செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டு 2019 ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலும் ரூபா.5,193,866 செலுத்தப்பட்டு இருந்தது. | | தற்போது நெல் களஞ்சிய வசதிகளுக்கு பற்றாக்குறை இல்லை என்பதாலும், பல்கலைக்கழகத்திற்கு கட்டிடத்தை வழங்குவது குறித்து அமைச்சு மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டதாலும், களஞ்சிய வசதிகளை தொடர்ந்து பயன்படுத்தப்படுமா அல்லது பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்படுமா என்பது குறித்து முடிவு எடுக்கப்பட்டு வருகிறது.. | இதுவரை எந்த தீர்மானம் ஒன்றும் எடுக்கப்படவில்லை. |
| IVகொத்மலை நீர்ப்பாசனம் மற்றும் நீர் முகாமைத்துவ சர்வதேசப் பயிற்சி நிறுவனத்திற்காக ரிவர்சைட், மாவத்துர விரிவுரை மண்டபம், வாகனத் தரிப்பிடம் மற்றும் சாரதிகள் உத்தியோகபூர்வ இல்லம் என்பவற்றை ரூபா 9,900,000 செலவில் | | நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் பதிருத்த வேலைகள் முடிக்கப்படாததால், செய்யப்பட்ட வேலைக்கு மட்டும் பணம் செலுத்தி ஒப்பந்தங்கள் நிறுத்தப்பட்டன. பல ஆண்டுகளாகக் கைவிடப்பட்டிருந்த இந்தக் கட்டிடத்தின் நிர்மாணத்தை முதலில் திட்டமிட்ட அதே தளங்களுடன் தொடர்வதில் சிக்கல் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. | ரூபா. 1.9 மில்லியனுக்கு புதிய மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கேள்வி கோரப்பட்டுள்ளன துடன், மேலும் அதன் வேலைகளை இந்த ஆண்டில் தொடங்க திட்டமிடப்பட்டது. |

| | | | |
|---|---|---|---|
| நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கையில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன | | | |
| V.அநுராதபுர போதனா வைத்தியசாலையின் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை அலகினை நிர்மாணிப்பதற்காக தனியார் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொண்ட ஒப்பந்தக்காரரினால் நிர்மாணப் பணிகள் புறக்கணிக்கப்பட்ட காரணத்தால் 2020 பெப்ரவரி மாதத்தில் நிர்மாணத்தின் பௌதீக முன்னேற்றம் ஒரு சதவீதமாக இருந்தபோது கட்டட நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன . ஒப்பந்தக்காரரின் திருப்தியற்ற வேலை முன்னேற்றத்தின் அடிப்படையில் இந்த ஒப்பந்தம் | | தற்போதைய நிதி நிலைமையின் அடிப்படையில், முழுமையாகக் கட்டப்பட வேண்டிய கட்டிடங்களின் கட்டுமானத்தை பாதுகாப்பாக நிறுத்தி, அவற்றின் 2026 இல் ஆரம்பிப்பதற்கு பிற்போடுவதற்கு முடிவு செய்யப்பட்டது. | கட்டிடத்தின் ஒரு பகுதி ஏற்கனவே தொடங்கப்பட்டு,ள்ளதால் நிர்மாணத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்தக்கூடிய வகையில 2025 ஆம் ஆண்டுக்கான சுகாதார அமைச்சகத்திற்கு ஒதுக்கப்பட்ட வரவு செலவு ஒதுக்கீட்டிற்குள், முகாமை செய்வதற்கு தீர்மானம் செய்யப்பட்டுள்ளது . |

| | | | |
|---|---|---|---|
| இரத்துச் செய்யப்பட்டு முற்பணம் மற்றும் செயலாற்றல் பிணை என்பவற்றின் பெறுமதியான ரூபா.81,653,603 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | |
| VI அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் தாதி உத்தியோகத்தர்களுக்கு வதிவிட வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதற்காக நிர்மாணிப்பினை ஆரம்பித்து மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா.139,000,000 பெறுமதியான கட்டடத்தின் நிர்மாண நடவடிக்கைகளில் பௌதீக முன்னேற்றம் 60 சதவீதமாக இருந்த போது 2018 ஆம் ஆண்டில் ஒப்பந்தக் காரரினால் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட காரணத்தால் 2019 மார்ச் 17 ஆம் திகதி ஒப்பந்த உடன்படிக்கை | | இந்தக் கட்டிடத்திற்கான ஒப்பந்தங்கள் பூர்த்தி செய்யப்பட்டு, மீள் மதிப்பீடு செய்து 2025 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. | 2025 ஆம் ஆண்டில் பணிகளைத் தொடங்குவதற்கான பெறுகை தற்போது நிறைவடைந்துள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | | | |
| VII அநுராதபுரம் போதனா வைத்திய சாலையில் Linear Accelerator Unit நிர்மாணிப்பதற்கு மதிப்பிடப்பட்ட மொத்த செலவு ரூபா.286,000,000 ஆக இருந்ததுடன் ஒப்பந்தத்தின் பௌதீக முன்னேற்றம் 15 சதவீதமாக இருந்த போதும் விலைப் பட்டியல் செலுத்துதல் தாமதமான காரணத்தால் 2019 ஆம் ஆண்டில் நிர்மாண நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டு இருந்தன. | | 2024.08.12 ஆந் திகதி நடைபெற்ற தேசிய வழிகாட்டல் குழு கூட்டத்தில் இந்தக் கட்டுமானத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டது. | Linear Accelerator இயந்திரங்கள் நிறுவப்படும் தரைத்தளத்தில் பணிகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள் ளன. இந்த இயந்திரங்கள் 2025 ஆம் ஆண்டில் நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள து. . |
| VIII. சுகாதார அமைச்சின் மருத்துவ விநியோகப் பிரிவின் வெலிசறை களஞ்சியசாலை வசதிகளை ஏற்படுத்துவதற்காக நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அத்திவாரத் தூண்கள் நிலத்தில் கீழிறங்கிய காரணத்தால் | | இந்தக் நிர்மாணத்தைத் தொடர்வது தொடர்பாக தேசிய கட்டிடம் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திடம் புதிய புவி தொழில்நுட்ப அறிக்கையைக் கோரப்பட்டிருந்தது. | பட்டியல்கள் தொடர்பாக உரிய ஒப்பந்ததார ருடனான தீர்வு செயல்முறைக்காக தற்போது நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கி விட்டது. |

நிர்மாண
நடவடிக்கைகள்
நிறுத்தப்பட்ட போது
ரூபா.67,189,923
தொகையினை
ஒப்பந்ததாரருக்கு
செலுத்தப்பட்டிருந்தது.

## 2.18 அரச சார்பற்ற பாடசாலைகள் தொடர்பான ஒழுங்குபடுத்தல் நடைமுறைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 2016 ஆம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட பொது கல்விக் கொள்கை தேசிய கல்வி ஆணைக்குழுவினால் இறுதியாக 2016 ஆம் ஆண்டில் இலங்கையில் பொது கல்வி தொடர்பில் தேசிய கொள்கைக்கான பிரேரணை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு தினம் வரையிலும் அது அங்கீகரிக்கப்பட்ட கொள்கையாக கல்வி ஒழுங்கமைப்பின் உள்ளே இணைக்கப்படவில்லை. ஆயினும் அதில் உள்ள முன்மொழிவுகளை கவனத்திற் கொண்டு தேவைக்கேற்ப ஒரு சில மறுசீரமைப்பு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள், சர்வதேச பாடசாலைகள், சமய பாடசாலைகள் போன்ற கல்வி நிறுவனங்களில் நிலவும் குறைபாடுகள் தொடர்பில் அறிக்கையில் கலந்துரையாடப்படும் கணக்காய்வு அவதானிப்புகள் தொடர்பில் கவனத்தில் கொள்கையில், மொத்த கல்விக்காகவும் தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கல்வி கொள்கை ஒன்று பொது சட்டமாக காணப்படாமையே, அந்த | 2022 | 1. கல்வித் தரத்தின் அபிவிருத்தி, கல்வித் திட்டமிடல் மற்றும் முகாமைத்துவம், கற்றலுக்கான சூழல் போன்ற காரணிகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டு மொத்த கல்விக் காகவும் நாளது வரையாக்கப்பட்ட கல்வி கொள்கையினை தயாரித்து பொது சட்டமாக்குதல் வேண்டும். | தனியார் பாடசாலை கிளைகளுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | கல்வியின் தரம் அபிவிருத்தி, கல்வித் திட்டமிடல், கற்றல் சூழல் போன்றவற்றில் கவனம் செலுத்தி முழுக் கல்விக்குமாக நாளது வரையாக்கப்பட்ட கல்விக் கொள்கை ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒழுங்கமைப்பில் நிலவும் குறைபாட்டினை திருத்தம் செய்யப்பட முடியாமைக்கு காரணமாக உள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 2 | **கல்வி அமைச்சின் மூலம் சர்வதேச பாடசலைகளை ஒழுங்குபடுத்துதல்**<br>1961 இல் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கு அமைய 5-14 வயது வரம்பில் இருக்கும் பிள்ளைகளுக்கு கல்வியினை பெற்றுக் கொடுக்கும் தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் காரணமாக கம்பனி சட்டத்தின் கீழ் நிறுவனமாக அல்லது வியாபாரப் பெயர் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தனிநபர் அல்லது பங்குடைமை வியாபாரமாக இந்த சர்வதேச பாடசாலைகள் எனும் நிறுவனம் விசேடமாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அதன் காரணமாக சர்வதேச பாடசாலைகள், கல்வி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் அல்ல என்பதால் அவற்றை ஒழுங்குறுத்தல் செய்வதில் சட்ட ரீதியான தடைகள் காணப்படுகின்றதாகவும் கல்வி அமைச்சின் தனியார் பாடசாலைப் பிரிவு பணிப்பாளரினால் 2020 ஜுலை மாதம் திகதியிடப்பட்ட ED/03/10/01 ஆம் | 2022 | 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலைகள் மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவிற்கு அமைய 5-14 வயது எல்லையிலுள்ள பிள்ளைகளுக்கு கல்வியை பெற்றுக் கொடுப்பதற்காக தனியார் பாடசாலைகளை ஆரம்பிக்க முடியாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கல்வி அமைச்சின் தலையீடின்றி வியாபார நிறுவனமாக சர்வதேசப் பாடசாலைகளும் சமய பாடசாலைகளாக மதரசா பாடசாலைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன என்பதால் சட்டத்தினை தீவிரமாக செயற்படுத்து வதற்கு தேவையான உடனடி நடவடிக்கை களை எடுத்தல். | சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கான சட்ட கட்டமைப்பை எவ்வாறு திருத்துவது மற்றும் முன்னோக்கிச் செல்வதற்கான வழிகள் குறித்த அறிக்கையை தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | சர்வதேச பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப் படுத்துவதற்கான சட்ட கட்டமைப்பை எவ்வாறு திருத்துவது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரணத்தினால் கல்வித் தரத்தினைத் தாண்டி வியாபார நோக்குடன் அந்த நிறுவனங்களை நடாத்திச் செல்வதற்கு இடம் அளிக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக கல்வியின் தரத்தினை சகல பாடசாலைகளுக்கு இடையிலும் ஒரே மாதிரியாக பேணிச் செல்வதற்கான சாத்தியக்கூறுகள் தடுக்கப்பட்டிருந்தன. | | | | |
| 3 | **அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் நிர்வாகம்** அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகளின் நிர்வாகமானது முகாமைத்துவதத்தின் மூலம் இடம் பெறுவதுடன் இத்தகைய பல பாடசாலைகள் சமயத்தை மையப்படுத்தியவை என்பதுடன் ஒவ்வொரு சமய பிரிவுகளின் தலையீடும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாடசாலை நிர்வாகத்துடன் தொடர்புபட்டுள்ளது. அதற்கமைய மாணவர்களை பாடசாலைக்கு அனுமதித்தல், கட்டணங்கள் அறவிடுதல், ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்தல், ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் அந்தப் பாடசாலை முகாமைத்துவத்தின் மற்றும் குறித்த சமயப் | 2022 | 1. அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அறிவுரை வழங்கப்பட்டுள்ள பிரகாரம் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளுதல், கட்டணம் அறவிடுதல், ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல், ஆசிரியர்கள் தொடர்பான நடவடிக்கைகள், கற்றல் கற்பித்தல் செயல்பாடுகள் கண்காணிப்பு செய்தல் போன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும் கல்வி அமைச்சின் போதுமான தலையீடு இடம்பெற வேண்டும் என்பதால் அதற்கான ஒழுங்கான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டு வர்தமானி மூலம் பிரசுரித்தல். | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துதல், நடைமுறையில் உள்ள சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை திருத்துதல் மற்றும் இலங்கையின் தனியார் பாடசாலை ஆசிரியர் சேவைக்கு புதிய ஆசிரியர்களை நியமித்தல் தொடர்பான அமைச்சரவை பத்திரம் தயாரிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பாக கல்வி அமைச்சின் போதிய தலையீடு இருக்க வேண்டிய போதிலும் அதற்குத் தேவையான தற்போதைய சட்டங்கள் விதிகள் மற்றும் ஒழுங்குமுறை கட்டமைப்பில் திருத்தம் செய்வது தொடர்பான பணிகள் நடைபெறவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரிவின் தலையீடும் இடம் பெற்றிருக்கின்றது என்பதும், அவ்வாறான சந்தர்ப்பங்களில் கல்வி அமைச்சின் போதிய தலையீடு இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது. | | | | |
| 4 | **கிளை பாடசாலைகள் ஆரம்பித்தல்** 2018 ஆம் ஆண்டு வரையில் அரச அனுமதி பெற்ற 08 தனியார் பாடசாலைகளினால் 09 கிளை பாடசாலைகள் கல்வி அமைச்சின் முறையான அனுமதியின்றி ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்துள்ளது. பின்னர் அந்த 09 கிளை பாடசாலைகளுக்கு அதுவரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட ஆசிரியர் சம்பளத்திற்கான அனுமதியினை பெற்றுக் கொள்வதற்கும், எதிர்காலத்தில் அந்த கிளை பாடசாலைகளுக்கு ஆசிரியர் சம்பளம், உரிய ஆசிரியர் சேவை எண்ணிக்கை தொகுதிக்கு அமைய பெற்றுக் கொடுப்பதற்கும் அமைச்சரவையிடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதில் 2018 மே 23 ஆம் திகதிய அமப/18/0850/742/017 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் மற்றும் அதனோடு இணைக்கப்பட்டுள்ள அவதானிப்புகளுக்கு அமைய, எதிர்காலத்தில் ஏதேனும் தனியார் தாய்ப் பாடசாலையினால் நாட்டின் ஏதேனும் இடத்தில் கிளை | 2022 | அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின் கிளை பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை அனுமதிக்கு இணங்க, எதிர்காலத்தில் ஏதேனும் தாய் பாடசாலையினால் நாட்டின் ஏதேனும் இடத்தில் கிளை பாடசாலையினை ஆரம்பிக்கும் போது கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நியதி பிரமாணங்களின் கீழ் முன் அனுமதியினை பெற்றுக் கொடுத்தல் வேண்டும் என்பதால், அதற்கு தேவையான நியதிகளைத் தயாரித்தல். | கிளை பாடசாலையினை ஆரம்பிப்பதற்காக கல்வி அமைச்சின் மூலம் தயாரிக்கப் பட்ட நியதிகளின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள து. | கிளை பாடசாலையினை ஆரம்பிப்பதற்காக கல்வி அமைச்சின் மூலம் இதுவரை தயாரிக்கப்பட்ட நியதிகளின் பிரகாரம் முன் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் அதற்காக தொடர்ந்தும் திருத்தங்களை மேற்கொள்வது குழுவினால் மேற்கொள்ளப்பட உள்ளன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாடசாலை ஒன்றினை ஆரம்பிக்கும் போது ஒரு தாய் பாடசாலைக்காக அதிகபட்சம் 05 கிளை பாடசாலைகள் எனும் ரீதியில் கல்வி அமைச்சினால் பெற்றுக் கொடுக்கப்பட்ட நியதிப் பிரமாணங்களின் கீழ் முன் அனுமதியினை பெற்றுக் கொடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. 2020 திசெம்பர் 31 ஆம் திகதியில் 8 தாய்ப் பாடசாலைகளில் 10 கிளை பாடசாலைகள் நடாத்தப்பட்டு வருகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 5 | **சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பான குழு** 1980 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த நாட்டு பாடசாலை ஒழுங்கமைப்பில் செயற்பட்டு வரும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்தல் செய்வதற்காக 2013/ED/E/13 ஆம் இலக்க 2013 ஜூன் 03 ஆம் திகதிய அமைச்சரவை பத்திரத்திற்கு நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் பரிந்துரையுடன் பரிசீலனை செய்யப்பட்டதன் பின்னர் இவ்விடயம் தொடர்பாக ஆய்வு செய்து அமைச்சரவைக்கு பரிந்துரையினை சமர்ப்பிப்பதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இந்த | 2022 | • இந்த நாட்டு பாடசாலை முறைமை அமைப்பினுள் செயற்படும் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளை ஒழுங்குபடுத்து வதற்கு 2013/ED/E/13 ஆம் இலக்க 2013 ஜூன் 03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை பத்திரத்திற்கமைய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழு 2013 ஆகஸ்ட் 28 ஆம் திகதி கலந்துரையாடி இணக்கப்பாட்டிற்கு ஏற்படுத்திய காரணிகள் தொடர்பில<br>• உடனடி கவனத்தைச் செலுத்தி தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்கான சர்வதேச பாடசாலைகள் தொடர்பாக சட்ட கட்டமைப்பை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய முறை தொடர்பாகவும் எதிர்வரும் நடவடிக்கை தொடர்பாக திரட்டிய அறிக்கை தயாரிப்பதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. | சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குபடுத்தல் தொடர்பாக முன்மொழிவுகளை அமுல்படுத்துவதற்கான உரிய சட்டக் கட்டமைப்பை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

உத்தியோகத்தர் குழுவினால் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார் பாடசாலைகளில் கல்வி கற்கும் அனைத்து பிள்ளைகளுக்கும் தாய்மொழி, சமயம் மற்றும் வரலாறு ஆகிய பாடங்களை கற்பது கட்டாய நிபந்தனை என்பதாக மாற்றுதல். கல்வி அமைச்சின் மூலம் ஓழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பு செயற்பாட்டினை தாபிக்கக்கூடிய வகையில் 1961 இன் 8 ஆம் இலக்க துணைப் பாடசாலை மற்றும் பயிற்சிக் கல்லூரி (மேலதிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 25 ஆவது பிரிவில் திருத்தம் செய்தல். கல்விச் செயற்பாடுகள் தேசிய கல்விக் கொள்கையின் பொதுக் கட்டமைப்பில் இருந்து முறையாக ஒழுங்கு செய்வதற்கு ஏற்ற வகையில் கல்வி அமைச்சின் கீழ் செயல்பட்டு வரும் தனியார் பாடசாலைப் பிரிவு, செயலாளர் அலுவலகம் (Secretariat) என்பதாக மாற்றப்பட்டு சட்ட ரீதியான அதிகாரங்களை வழங்குதல் உண்மையாகவே செயற்படும் பாசாலைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தமையால் அந்தப் பாடசாலைகளில் கல்வியைப் பெறும் பிள்ளைகளாக பிரதிநிதித்துவம் பெறும் முறைமையினை தயாரித்தல் சர்வதேச பாடசாலைகள் மற்றும் தனியார்

பாடசாலைகளின்
நடவடிக்கைகளின்
தரத்திற்கு அமைய
ஒழுங்குபடுத்துதல்
பௌதீக மற்றும் மனித
வளங்களின் தரத்தினை
மற்றும் கற்றல் கற்பித்தல்
· செயற்பாடுகளின்
தரத்தின் அடிப்படையில்
அந்த பாடசாலைகளை
தரப்படுத்தல் செய்யும்
முறையினை
அறிமுகப்படுத்துதல் இப்
பாடசாலைகளில்
கல்வியைப் பெற்றுக்
கொள்ளும் இலங்கையின
· மாணவர்களுக்கான
தேசிய பாடத் திட்டம்
சார்ந்த பாடநெறிகள்
வகுப்புகளை
செயற்படுத்துவதாயின்
· ,தேசிய கல்வி
நிறுவனத்தினால்
பரிந்துரைக்கப் பட்ட
பாடத் திட்டம் மற்றும்
அறிவுரைகளை
பின்பற்றும் தேவைப்பாடு
மிகவும் முக்கியமானது
சர்வதேச பாடசாலைகள்
மற்றும் தனியார்
பாடசாலைகள், பொது
தேசிய கல்விக்
கொள்கை மற்றும்
நியமங்களுக்கு
ஏற்புடையதாக
செயல்படுவதை
உறுதிப்படுத்தும்
நோக்கில்
விதிமுறைகளை
கோவைகள் தயாரித்தல்
போன்ற விதந்துரைகள்
வழங்கப்பட்டிருந்தன

**2.19 இலங்கையில் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்தல்**

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **அறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை** | **கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 1 | **புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை** புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய கொள்கையொன்றை இனங்கண்டு செயற்படுத்துதுல் உட்பட செயற்பாடுகளுக்கான 2006 இன் 27 ஆம் இலக்க புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகாரசபை சட்டம் நிறைவேற்றப்பட்டிருந்த போதும் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய கொள்கைகளைத் தயாரித்திருக்கவில்லை. | 2022 | புகையிலை தொடர்பான தேசிய கொள்கையொன்றை இனங் கண்டு தயாரித்து செயற்பாட்டிற்கு உட்படுத்தல் | புகையிலை மீதான தேசிய கொள்கையின் அடிப்படையில் முன்மொழிவு மற்றும் அதன் தொடர்புடைய பரிந்துரைகள் ,''நாட்டில் வேகமாகப் பரவி வரும் போதைப் பொருள் அச்சுறுத்தலை அவசரமாகக் கட்டுப்படுத்தவும் ஒழிக்கவும் வழிமுறைகளை ஆராய்ந்து அடையாளம் காணும் நாடாளுமன்றத் தேர்வுக் குழுவிடம்" சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நாட்டில் விரைவாக பரவி வரும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்தி முழுமையாக இல்லாமல் செய்வதற்காக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வேலைத்திட்டம் தொடர்பாக விடயங்களைத் தேடி அது பற்றிய அவதானிப்புக்கள் மற்றும் பரிந்துரைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான விசேட பாராளுமன்ற செயற் குழுவின் அறிக்கையில் இப் பரிந்துரைகள் உள்ளடக்கப்பட்டுள்ளது. |
| 2 | இலங்கையில் குழந்தை என்பது தொடர்பாக வரையறை செய்கையில், தொழில் சட்டத்திற்கு | 2022 | சுகாதாரத்திற்கு ஆரோக்கியமற்ற உணவுகளை விளம்பரப்படுத்துவதைத் தடை செய்ய | 2022 உணவு (லேபலிடல் மற்றும் விளம்பரப்படுத்த | குழந்தைகளை விளம்பர பிரசார நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுவ |

| | | | |
|---|---|---|---|
| அமைய 16 வயதிற்கு குறைந்த நபர்கள் குழந்தைகளாக கருதப்படுவதாக இருந்த போதிலும். குழந்தைகள் மற்றும் இளைய நபர்களுக்கான 1939 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் (children and young persons ordinance) 14 வயதுக்கு குறைந்த நபர்களும் குழந்தைகளாகக் கருதப்படுவர். தற்காலத்தில் உணவு மற்றும் பாண வகைகள் தொடர்பில் பிள்ளைகள் பாரிய அளவில் பயன்படுத்தப்படுகின்றமை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் பல்வேறு வியாபார விளம்பரங்களை பார்க்கும் போது இந்நிலைமை அவதானிக்கப்படக் கூடிய விடயமொன்றாகும். நூடுல்ஸ், பிஸ்கட், சொக்கலேட், மாஜரின் போன்ற பல்வேறு உணவுப் பொருட்கள் தொடர்பில் இந்த நிலைமை அவதானிக்கப்பட்டது. குழந்தைகளை ஈடுபடுத்தி மேற்கொள்கின்ற விளம்பர பிரசார நடவடிக்கைகளுக்காக தற்போது வயது எல்லையொன்று | தேவையான நடவடிக்கை எடுத்தல் மற்றும், பாடசாலை செல்லும் வயது குழந்தைகளின் ஆரோக்கியமற்ற உணவுகளை விளம்பரப்படுத்துவதைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் | ல்) பிரமாணத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் 12 வயதுக்கு குறைந்த குழந்தைகளை விளம்பரத்திற்காக பயன்படுத்தப்பட்டது தடை செய்யப்பட்டுள்ளது. அந்த உத்தரவை 2024.01.01 ஆந் திகதி முதல் செயல்பாட்டில் இருந்த போதும் பின்னர் அது 2025.01.01 ஆந் திகதி முதல் செயற்படுத்துவதற்க அமைச்சர் அவர்களால் பிற்போட்டப்பட்டது. | து தொடர்பான ஒழுங்குபடுத்தல் செயற்பாடு இதுவரை செயற்படுத்தப்பட வில்லை.. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இல்லாமல் இருப்பதுடன் பிள்ளைகளை விளம்பரங்களைக் ஒளிபரப்புவதற்கு முன்னர் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளக்கூடிய நடைமுறையென்றும் இல்லையென்பதாக அவதானிக்கப்பட்டது. | | | | |
| 3 | **2019 உணவுக் (சீனி, உப்பு மற்றும் கொழுப்பு என்பவற்றுக்கான நிற குறியீட்டு முறை) கட்டளை** தற்போது இலங்கையில அதிகரித்துச் செல்லும் தொற்றாத நோய் நிலைமைகள் இடையே, முக்கிய இடத்தினைப் பெறும் இருதய நோய், நீரிழிவு, அதிக கொலஸ்ரோல் போன்ற நோய் நிலைமைகளுக்கு பங்களிப்பு செய்யும் உணவு ரீதியான காரணிகளாக அதிக சீனி, உப்பு மற்றும் கொழுப்பு நுகர்வு அடையாளம் காணப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சினால் 1980 இன் 26 ஆம் இலக்க உணவு சட்டத்தின் கீழ் உணவுகளில் அடங்கியுள்ள சீனி, உப்பு மற்றும் கொழுப்பு என்பவற்றின் அளவுகள் தொடர்பிலான கட்டுப்பாட்டிற்காக நிறக் | 2022 | உப்பு, சீனி, மற்றும் கொழுப்பு என்பவை தொடர்பாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள நிற குறியீட்டு முறை தொடர்பான கட்டளையின் அமுல்படுத்தல் தொடர்பில் மதிப்பீடு செய்தல் | உப்பு, சீனி, மற்றும் கொழுப்பு என்பவை தொடர்பாக நிற குறியீட்டு முறை தொடர்பான கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது | .கட்டளையைப் அமுல்படுத்தல் தொடர்பில் தொடர்ந்தும் பிற்போடப்பட்டு வந்தது. |

குறியீட்டு முறைமை ஒன்று புதிய கட்டளையாக அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும். இந்தக் கட்டளையின் அமுல்படுத்தல் தன்மை தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகள் அவதானிக்கப்பட்டது

i 2019 ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதிய 2119/3 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரத்தில் பிரசுரிக்கப்பட்ட வகையில் இந்த கட்டளையானது 2019 ஜூன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தியிருக்க வேண்டும். இந்த நிறக் குறியீட்டு முறை செயற்படுத்துவதற்கு உரியதான 2019.05.24 ஆம் திகதிய PA/EOH/FCAU/43/2017 இலக்கத்தின் கீழ் விதி இலக்கம் 01 எனக் குறிப்பிடப்பட்டு அப்போது பதில் கடமை புரிந்த சுகாதார சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் கட்டளை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம்

2019.06.01 ஆம் திகதியின் பின்னர் உற்பத்தி செய்யப்படும் திட மற்றும் அரை திட உணவுகளில் நிறக் குறியீட்டினை இடுதல் சரியான வகையில் மேற்கொள்ளப்படுவதற்கு உரிய அதிகார பிரதேசத்திலும் இருக்கும் உற்பத்தியாளர்களுக்கு தேவையான வழிகாட்டல்கள் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும்

2019 ஜுன் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டு இருந்த இந்த உணவு (சீனி, உப்பு மற்றும் கொழுப்பு என்பவற்றுக்கான நிறக் குறியீட்டு முறைமை) கட்டளை அனைத்து திட மற்றும் அரை திட உணவுப் பொருட்கள் தொடர்பில் செயற்படுத்தப்பட வேண்டும். அதே போன்று எந்த ஒரு நபரினாலும் கட்டளைகளின் 1 ஆம் அட்டவணையின் படி திட்டவட்டமாக குறிப்பிடப்பட்டுள்ள சீனியின் அளவு, உப்பின் அளவு அல்லது கொழுப்பின் அளவு உள்ளடக்கப்பட்டுள்ள ஏதேனும் திட அல்லது அரை திட உணவானது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டளையில் தீர்மானமாக குறிப்பிடப்பட்டுள்ள முறையில் சிட்டை இடப்பட்டு இருந்தாலன்றி பொதியிடல், விற்பனை செய்தல், விற்பனைக்காக காட்சிப்படுத்தல் அல்லது விளம்பரப்படுத்தல் செய்யப்படலாகாது என்பது குறிப்பிடப்பட்டுள்ளது | | | | |
| 4 | ஆரம்ப சுகாதார சேவைக்கு நாட்பட்ட சுவாச நோய் முகாமைத்துவத்திற்கான வழிகாட்டல் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கொள்கை மற்றும் therapeutic options ஆக நோயாளர்களுக்கு சமூக அடிப்படையிலான நுரையீரல் புனர்வாழ்வு வேலைத் திட்டம் (Community based out patient pulmonary rehabilitation programme) நடாத்தப்பட வேண்டும் என கண்டறியப்பட்டு இருந்தத போதிலும் சுவாச நோயாளர்களுக்கு புனர்வாழ்வு வேலைத் திட்டத்தினை நடாத்துவதற்கு போதுமான உபகரணங்கள் மற்றும் பதவியணியினர் வைத்தியசாலையில் இல்லாத காரணத்தால் நோயாளர்களுக்கு பௌதீக மருத்துவ உடற் பயிற்சிகள் மேற்கொள்ளும் திறன் குறைந்த மட்டத்திலேயே | 2022 | சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலைக்கு தேவையான உபகரணங்கள், மருந்துகள் மற்றும் பதவியணியினர் வழங்கப்பட வேண்டும். | வருடாந்த பெறுகைக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. | 2024 நவம்பர் மாதம் 11 ஆந் திகதி மேலும் Multifunction Electrical Postural Drainage Bed 03 ஐ, Multi para Monitor 03 உம், Treadmill 01 உம், வழங்க வேண்டியுள்ளது. |

காணப்பட்டது. வெலிசர சுவாச நோய் தொடர்பான தேசிய வைத்தியசாலையில் வருடாந்த பெறுகைக்குள் உள்ளடக்கப்பட்ட Multifunction Electrical Postural Drainage Bed 03 க், Multi para Monitor 03 க், Treadmill 01 உபகரணங்கள் தேவையாக உள்ளது என்பதும் கணக்காய்வுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய அவதானிக்கப்பட்டது.

## 2.20 கொள்கலனுடைய நடமாடும் டீசல் மின்பிறப்பாக்கிகளின் கொள்வனவு மீதான செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை மின்சார சபை தேசிய முறைமையை கட்டுப்படுத்தும் நிலையத்தின் தரவுகள் மற்றும் களனிதிஸ்ஸ மின்சார வலுக்கூடத்தில் பேணிச் செல்லப்படுகின்ற 50 மின் உற்பத்தி இயந்திரங்களுக்கு உரிய மின்சாரம் செயலிழந்தமை, அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் நிறைவேற்றப்படாத தவறுகள், குறைபாடுகள், திட்டமிடலில் குறைபாடுகளின் காரணமாக ஏற்பட்ட இயந்திரங்களின் வீழ்ச்சி மற்றும் நிறுத்துவதற்கான தாக்கங்களினால் 2022 சனவரி முதல் ஏப்ரல் மாதம் வரையான காலத்தில் இலங்கை மின்சார சபைக்கு ரூபா 1,263 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட நிதி நட்டமொன்று ஏற்பட்டிருந்தமை 2022 மே 22 ஆம் திகதிய பிரதான சட்ட உத்தியோகத்தருக்கு முகவரியிடப்பட்ட பிரதி பொது முகாமையாளர் | 2023 | மின்பிறப்பாக்கிகளில் தற்போது காணப்படுகின்ற வழுக்களை சரிசெய்து அவற்றில் பராமரிப்பு நடவடிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2024 ஒக்தோபர் 21 ஆந் திகதி வரை பல்வேறு தொழில்நுட்பக் கோளாறுகள் காரணமாக அம்பாந்தோட்டை மற்றும் மத்துகமவில் நிறுவப்பட்ட 5 ஜெனரேட்டர்கள் பல்வேறு நிலைகளில் செயலிழந்த நிலைமையில் காணப்பட்டதுடன் மேலும் அவற்றில் ஒன்று அதன் டீசல் எஞ்சினில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 2022 மார்ச் 01 ஆந் திகதி முதல் செயலற்ற நிலைமையில் காணப்பட்டது. இது அந்தக் குறைபாடுகளைச் சரிசெய்யத் தேவையான உதிரி பாகங்களை கொள்வனவு | இயந்திர செயல்பாட்டின் போது அவ்வப்போது பிழைகள் ஏற்படுகின்றதுடன், மேலும் தீர்வுகளைப் பயன்படுத்துவதன் மூலம் அடையாளம் காணப்பட்ட பிழைகளைச் சரிசெய்ய தேவையான உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |

(அனல் மின்சார நிலையம்) கடிதத்தில் காண்பிக்கப்பட்டிருந்தது.
மேற்கூறப்பட்ட விடயங்கள் யாவற்றையும் கவனத்தில் கொள்ளும் போது மின்பிறப்பாக்கிகள் அவ்வப்போது செயலிழந்ததாகவும் அதன் காரணமாக அவற்றின் கூடிய நிலையத்தின் செயலாற்றல் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் இல்லாமல் போனதாகவும் வழுக்களை உத்தரவதா காலத்தில் ஒப்பந்தகாரரால் அவற்றை சரிசெய்வது தொடர்பில் அவர்களின் பங்களிப்பு ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

செய்வதன் மூலம் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 2.21 சிறைச்சாலைகளில் காணப்படுகின்ற இட நெருக்கடியை முகாமைத்துவம் செய்தல் தொடர்பான செயலாற்றல் கணக்காய்வு

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **அறிக்கை ஆண்டு** | **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை** | **கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள்** | **அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை** |
|---|---|---|---|---|---|
| 1 | நாட்டில் போதைப் பொருள் குற்றம் அதிகரித்து ஏனைய குற்றச் செயற்பாடுகளை அதிகரிப்பதற்கு நேரடியாக தாக்கமளிக்கின்றது. மேலும், போதைப் பொருள் தவறு இழைத்தவர்களில் அனேகமானவர்கள் போதைப் பொருள் பயன்பாடு, போதைப் பொருள் வைத்திருத்தல், கொள்வனவு செய்தல் விற்பனை செய்தல் தொடர்பாக சிறைச்சாலைகளில் இடப்படுகின்றனர். அதன் பிரகாரம் இலங்கையில் சிறைச்சாலைகளில் இடப்பட்ட கைதிகளில் கனிசமான அளவு போதைப்பொருளுக்கான குற்றங்கள் தொடர்பாக இருந்தமை ஆகும். இலங்கையில் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சிறைச்சாலைகளில் கைதிகளின் எண்ணிக்கை 26,176 ஆக இருந்ததுடன் அதில் 53 சதவீதத்திற்கு | 2023 | 1. 2022 இன் 41.விஷம், அபின் மற்றும் ஆபத்தான மருந்துகள் திருத்தச் சட்டத்தின் 54 இன் படி நீதிமன்றத்தால் சிறைச் சாலைகளில் வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பாக, பொலிஸ் திணைக்களத்தினால் இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மாதிரிகள் (Sample) தொடர்பான பகுப்பாய்வாளர் அறிக்கைகளை உடனடியாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.<br>2. குற்றம் இழைக்கும் மூலங்களில் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு | பகுப்பாய்வாளர் அறிக்கை களில் ஏற்படும் தாமதம் காரணமாக, 1991 ஆம் ஆண்டு 08 ஆம் இலக்க விளக்க மறியல் கைதிகளை விடுதலை செய்யும் சட்டத்தின் கீழ், சந்தேக நபர்களை பிணையில் விடுவிப்பது தொடர்பாக, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் சந்தேக நபர்களின் தகவல்களை சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களின் கவனத்திற்குக் கொண்டுவரும். மேலும் இரசாயன பகுப்பாய்வாளர் அறிக்கைகள் | இந்த நிலைமை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டது என்றாலும், இட நெரிசலைத் தடுக்க எளிய நடவடிக்கை களைச் செயற்படுத்த தொடர்புடைய நிறுவனமும் சிறைச்சாலைகள் திணைக்களமும் இன்னும் முறையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.. |

| | | |
|---|---|---|
| மேற்பட்ட தரப்பினர் அதாவது 13,794 பேர் போதைப் பொருள் குற்றங்கள் மற்றும் தொடர்புடையதான கைதிகள் ஆகும். போதைப் பொருள் குற்றம் தொடர்பாக 4,406 கைதிகளுக்கு சிறைக் கைதிகளாக இருந்ததுடன், 9,388 பேர் சந்தேகத்திற்கு உரியவர்களாக இருந்தனர். | இடையே புரிந்துணர்வு பொறிமுறை ஒன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் இயலுமானவரை நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துதல்.<br>சிறைச்சாலைகள் முகாமைத்துவத்திற்கு இலகுவான வகையில் சமூக பாதுகாப்புக்கு இழப்பு ஏற்படாத வகையில் போதைப ்பொருள் குற்றங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்களை திருத்துதல் தொடர்பாக கவனம் செலுத்துதல். | உடனடியாகப் பெறப்படும். சிறைச்சாலைத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளது. போதைப் பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு குறித்து சம்பந்தப்பட்ட துறைகளுக்குத் தெரிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இந்தப் பிரச்சினையைத் தீர்க்க சிறைச்சாலைகளுக்கு வெளியே மாற்று நிறுவனங்களை நிறுவுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதும் தொடர்புடைய கலந்துரையாடல்களில் தெளிவுபடுத்தப் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பட்டுள்ளது.<br><br>சிறையில் அடைக்கப்பட்டு உள்ள புனர்வாழ்வு பெறுவோருக்கு இடையே ஒரு தரப்பினர் நீதிமன்ற உத்தரவுகளின் பேரில் புனர்வாழ்வு பணியகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சேனபுர மற்றும் கந்தகாடு புனர்வாழ்வு நிலையங்களில் அனுமதிக்கப்படுகிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், நீதிமன்றங்கள் கைதிகளை பொருத்தமான புனர்வாழ்வுக்கு அனுப்ப உத்தரவிடும் போது, கைதிகள் சிறைச்சாலை நிறுவனங்களில் செயல்படுத்தப்படும் அம திவி ரிட்மா புனர் வாழ்வு செயல்முறைக்காக கைதிகளை அனுப்பி வைக்கப்படுவதாக மேலும் நான் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். | |
| 2 | வெலிக்கடை சிறைச்சாலை தொகுதி ஹொரண பிரதேசத்தில் மீண்டும் ஸ்தாபிக்கும் செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு | 2023 | தற்காலிகமாக அமுல்படுத்துவதை கைவிட்டுள்ள வெலிக்கடை சிறைச்சாலை தொகுதியை | இந்த செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் | இந்த செயற்திட்டம் நகர அபிவிருத்தி அதிகாரசபையல் செயல்படுத்தப்படுகிறது, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அமைச்சு மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களம் என்பன ஒன்றிணைந்து மேற்கொள்கின்றது. இந்த செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் தாக்கங்களில் மதிப்பீட்டறிக்கை, திட்டமிடல் நிர்மாண நடவடிக்கைகள், உள்ளக வழி மற்றும் உள்ளக வீதி, நீர் மற்றும் மின்சாரத்தை உள்ளடக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவருத்தி செய்யும் நடவடிக்கைகளில் 30 சதவீதம் அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. எனினும், நிதியமைச்சினால் விநியோகிக்கப்பட்ட 2022.04.26 ஆந் திகதிய 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கையின் படி இந்த செயற்திட்டத்தை அமுல்ப்படுத்துதல் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. | | பொருத்தமான பிரதேசத்தில் ஸ்தாபித்தல். | செயற்படுத்தப் படுகிறது. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2022 ஆம் இலக்க சுற்றறிக்கை பிரகாரம் இந்தத் திட்டத்தை செயல்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | சிறைச்சாலைகள் திணைக்களம் எந்தச் செலவுகளையும் ஏற்கவில்லை. நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கை எண். 03/2022 இன் பிரகாரம் இந்தத் திட்டத்தை செயற்படுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. |
| 3 | சிறைச்சாலை இயலளவை விஞ்சி கைதிகளின் அளவு அதிகரித்தமையால் கைதிகளுக்கு போதியளவு பிரகாரம் சுகாதார வசதிகளை வழங்குதல் கஷ்டமாகியிருந்தது. 2023 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையில் 27 சிறைச்சாலைகளில் 187 மலசல கூடங்களில் பற்றாக்குறை காணப்பட்டதுடன் தற்போது காணப்படுகின்ற மலசல கூடங்களிலும் 287 பழுது பார்க்க வேண்டிய நிலைமைகளில் காணப்பட்டது. | 2023 | 1. சிறைச்சாலைகளில் உள்ள பாழடைந்த, உருக்குலைந்த பாதுகாப்பற்ற மற்றும் சுகாதாரமற்ற கட்டிடங்களை புதுப்பித்தல் அல்லது கைதிகளின் மனித தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் புதிய கட்டிடங்களைக் கட்டுதல்.. | 106 புதிய கழிவறைகளை நிர்மாணிப்பதற்கும், 166 கழிவறைகளை என்பவற்றை புதுப்பிக்கப்படுவதற்கும் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. | அந்தத் அளவிற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலதிலாக, 1303 ஆம் செலவினத் தலைப்பில் கீழ் சிறிய பழுதுபார்ப்புகளை மேற்கொள்ளவும், தொடர்புடைய சுகாதார ஆரோக்கிய வசதிகளை மேம்படுத்தவும் சிறைச்சாலை அத்தியட்சகருக்கு கண்காணிப்பாளருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 90% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | ,றகும் அதிகமான பணிகள் நிறைவடைந்துள்ளன. |
| 4 | கைதிகளை முறையான பிரகாரம் புனர்வாழ்வளிப்பற்கு முடியாமையினால் அவர்களை மீண்டும் மீண்டும் சிறைச்சாலையில் அடைப்பதை தடுக்க முடியாது இருந்தது. சிறைச்சாலைகளில் இருக்கின்ற கைதிகளில் அதிக தரப்பினர் போதைப் பொருளுக்கு அடிமையானதால் அவர்களுக்காக தேவையான சிகிச்சை அளித்தல் மற்றும் முறையாக புனர்வாழ்வு பணிகளை சிறைச்சாலை அமுல்படுத்துதல் வேண்டும். அவ்வாறே சிறைச்சாலையில் இருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் அவர்கள் சமூக சேவைகளில் எந்த ஒரு தொடர்பும் காண்பிக்காமை மற்றும் தொடர்ச்சியான பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்காமையினால் மீண்டும் போதைப் பொருள் பயன்பாட்டிற்கு முன்வருதல் ஆதலால் அவர்கள் மீ"ண்டும் மீண்டும் சிறையில் இடப்பட்டலாம் இலங்கையில் சிறைச்சாலைகளில் இடப்பட்ட கைதிகளில் கவனத்தில் கொள்ள வேண்டிய எண்ணிக்கையினர் மீண்டும் மீண்டும் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டவர்கள் ஆவர் | 2023 | சமூக உற்பத்திப் பணிகளுக்கு கைதிகளின் உழைப்பு மற்றும் அறிவைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல். | கணக்காய்வு அவதானிப்புகளுடன் நாங்கள் உடன்படுகிறோம். என்றாலும், இந்த செயல்களின் சங்கிலி அரசாங்கத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டுக் கொள்கையால் தீர்மானிக்கப்படும் ஒரு செயல்முறையாகும், எனவே இது சிறைச்சாலைத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு வெளியே உள்ளது. | போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அல்லது புனர்வாழ்வு என்பது சிறையிலடைப்பதால் மட்டும் அடைய முடியாது. போதைப் பொருள் பயன்படுத்துபவர்களை குற்றவாளிகளாகக் கருத முடியாது, மேலும் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க, சிறைச்சாலைத் திணைக்களத்திற்கு வெளியே மருத்துவ வசதிகளுடன் கூடிய ஒரு நிறுவன கட்டமைப்பில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் நடைபெற வேண்டும். புனர்வாழ்வுப் பணியகம் மற்றும் சமூக சீர்திருத்தத் திணைக்களம் போன்ற நிறுவனங்கள் இந்த நோக்கத்திற்காக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | நிறுவப்பட்டிருந்த போதிலும், போதைக்கு அடிமையானவர்கள் தொடர்ந்து சிறைச்சாலை களுக்கு அனுப்பப்படுகிறார்கள். |
| 5 | சிறைச்சாலைகளின் கூட்ட நெரிசலை அதிகரித்துச் செல்வதுடன் கைதிகளின் அளவு அதிகரிக்கின்றமையால் கைதிகளை புனர்வாழ்வளிப்பதற்காக காணப்படுகின்ற பௌதீக மற்றும் மனிதவளங்கள் பற்றாக்குறையின் அடிப்படையில் சிறைக்கைதிகளின் ஊழியத்தை தனியார் துறையின் செயற்திட்டங்களில் ஈடுபடுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2020 மே 14 ஆந் திகதி 20/0792/207/025 ஆம் இலக்கத்தின் கீழ் அங்கீகாரம் கிடைத்திருந்தது. எனினும், தனியார் துறையின் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சிறைகைதிகளுக்காக அதற்காக வெளிக்களத்தில் 03 மாத பயிற்சியொன்றும் தொழில் ரீதியான செயற்திட்டங்களில் சான்றிதழ் (NVQ) வழங்குவதற்கும் வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக வெளிநாட்டு மொழிப் பயிற்சி வழங்கப்பட்டிருக்கவில்லை. | குற்றவாளியாக்கபட்டு சிறையில் அடைக்கப்படும் கைதிகள், சிறைச்சாலைத் திணைக்களத்தின் கீழ் திறந்தவெளி பணி முகாம்கள், தொழில்துறை பிரிவுகள், சிறை பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தினசரி சிறைசாலையில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் (உணவு தயாரித்தல் போன்றவை) ஆகியவற்றில் பணியமர்த்தப்படுகிறார்கள், இதன் மூலம் அவர்களின் உழைப்பை திறம்பட பயன்படுத்தி, கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. . | சிறைச்சாலைகளில் இருந்து இந்தக் கைதிகளை புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்புதல் இடம் பெறுகின்றதுடன் மேலும் சிறைகளுக்குள்ளேயே ''அமதிவிரிட்மா'' போன்ற புனர்வாழ்வுத் திட்டங்களும் நடத்தப்படுகின்றன. இது தொடர்பாக நியமிக்கப்பட்ட செயலாற்றல் படையணிக்கும் ஏனைய கொள்கை தீர்மானங்களை எடுக்கும் கலந்துரையாடல்களின் போதும் அறிவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குற்றவாளியாக்கபட்டு சிறையில் அடைக்கப்படும் கைதிகள், சிறைச்சாலைத் திணைக்களத்தின் கீழ் திறந்தவெளி பணி முகாம்கள், தொழில்துறை பிரிவுகள், சிறை பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் தினசரி சிறைசாலையில் செய்ய வேண்டிய நடவடிக்கைகள் (உணவு தயாரித்தல் போன்றவை) ஆகியவற்றில் பணியமர்த்தப்படுகிறார்கள், இதன் மூலம் அவர்களின் உழைப்பை திறம்பட பயன்படுத்தி, கிடைக்கக்கூடிய வளங்களைப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்பட்டுள்ளன . . |
| 6. | காலரீதியான தேவைகளுக்கு பொருந்தும் வகையில் கைதிகளை புனர்வாழ்வளித்து நல்ல பிரசையாக ஒன்றாக சமூக மயப்படுத்துவதற்கு தேவையான பின்னணி ஒன்றை தயார்படுத்துவது சிறைச்சாலையின் பிரதான இலக்குகளில் ஒன்றாகும் அதன் போது கல்விச் செயற்டபாடுகளில் ஈடுபடுதல் போன்ற அர்த்தத்துடனான செயற்படல் மற்றும் சாதகமான சிறைச்சாலை சூழலொன்றை வடிவமைத்து கைதிகளின் சக்தியை உச்ச அளவில் தொழிற்திறன் பயிற்சிகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் சமூகத்திற்கு மீண்டும் அனுப்புவதற்காக தயார்படுத்துவதற்கு உதவுகின்ற வகையில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை பேணிச் செல்ல வேண்டும். எனினும், சிறைச்சாலைகள் இட நெருக்கடியின் இடையே கைதிகளின் புனர்வாழ்வளிக்கும் போது பிரச்சினைகள தோன்றியிருந்தது. | இலங்கையின் சிறைச்சாலை நிறுவனங்களில் வைத்திருக்கக் கூடிய கைதிகளின் கொள்ளளவை விட இரண்டு மடங்கு அதிகமான எண்ணிக்கை தொகையுடன், புனர்வாழ்வு செயல்முறை மட்டுமல்ல, சிறைச்சாலைகளி ல் உள்ள முழு செயற்பாட்டிற்கு ம் மிகவும் சவாலானதாக மாறியுள்ளது. இருப்பினும், கடுமையான நெரிசல் சூழ்நிலையிலும் கூட, சிறைச்சாலைத் திணைக்களத்தின் நோக்கங்களான தடுப்புக்காவலில் வைத்திருத்தல் கைதிகளைப் பாதுகாத்து பராமரித்தல் மற்றும் அவர்களின் புனர்வாழ்வு ஆகிய அதன் அதன் சிறந்த | சிறைக் கைதிகளுக்கு தொழில் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல், அவர்களின் உழைப்பை மிகவும் திறம்பட பயன்படுத்துதல் மற்றும் நவீன தொழில்நுட்ப முறைகளுடன் தொழில் பயிற்சி வழங்குதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்படும் திட்டங்களில் ஒன்று பொது மற்றும் தனியார் துறைகளால் மேற்கொள்ளப்படு ம் கூட்டுத் திட்டமாகும். . (Private Public Partnership Project). இருப்பினும், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வெளிநாட்டு மொழிப் பயிற்சி அளித்தல் மற்றும் NVQ நிலைச் சான்றிதழை வழங்குதல் ஆகியவற்றை |

| | |
|---|---|
| இயலுமைக்கு ஏற்றவாறு சிறைச்சாலைத் திணைக்களம் நிறைவேற்ற பாடுபடுகிறது. | நோக்கமாகக் கொண்டு செயற்படுத்தப்பட்ட வட்டரேகா திட்டம், நிலவும் கோவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. போதைப்பொருள் குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் சிறைச்சாலைகள் நிரம்பி வழிகின்றன. இங்கு, கைதிகளும் சந்தேக நபர்களும் தனித்தனியாக வைக்கப்படுவதில்லை, மேலும் புனர்வாழ்வு செயல்முறை கைதிகளுக்கு மட்டுமே மேற்கொள்ளப்பட்ட போதிலும், புனர்வாழ்வு திட்டங்களுக்குப் பிறகு அந்தக் கைதிகளும் |

சந்தேக நபர்களுடன் மீண்டும் தடுத்து வைக்கப்படுகிறார்கள், எனவே பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் , இன்னும் முறையான புனர்வாழ்வு நடைபெறவில்லை.

## 2.22 இலங்கை போக்குவரத்துச் சபையின் பஸ்கள் தொகுதியை உச்ச இயலளவில் பயன்படுத்துதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 1991 நவம்பர் 27 ஆந் திகதி அமைச்சரவையினால் அங்கீகரித்த போக்குவரத்து கொள்கை 2009 ஒக்தோபர் 14 ஆந் திகதி திருத்தம் செய்யப்பட்டிருந்தது. அதனை நாளதுவரையாக்கும் குறிக்கோளில் கருத்தரங்குகளை நடாத்துதல், குறுங்கால ஆலோசனைக் கட்டணங்கள், பொதுமக்கள் முறைப்பாடுகள், கருத்தரங்கு கள், பத்திரிகைகள், அறிவித்தல்கள் முதலிய வற்றினை உள்ளடக்கிய கொள்கையை தயாரிக்கும் நடைமுறைக்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் கீழ் காணப்படும் நிதிகளிலிருந்து ரூபா 2.5 மில்லியன் ஒதுக்கீடு<br>2 செய்யப்பட்டிருந்தது. அந்த நிதிகளிலிருந்து மேற்கூறிய விடயங்களுக்காக ரூபா | | 1991 நவம்பர் மாதம் அங்கீகரித்த போக்குவரத்து 2009 ஒக்தோபர் மாதம் திருத்தம் செய்யப்பட்ட தேசிய போக்குவரத்துக் கொள்கை தயாரிப்பதை துரிதப்படுத்துதல் | பதில் அளிக்கப்பட்டிருக் கவில்லை | இதுவரை தேசிய போக்குவரத்து கொள்கையை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 334,135 செலவு செய்யப்பட்டிருந்தும 2009 ஆம் ஆண்டிலிருந்து 2023 மார்ச் 01 ஆந் திகதி வரை 15 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் தேசிய போக்குவரத்து கொள்கையானது இன்னும் வரைபு நிலையில காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது.<br>சட்டத்தின் முகவுரையின் (இ) பிரிவின் பிரகாரம் சமூக ரீதியாக அத்தியவசியமான எனினும் இலாபம் கிடைக்காத பயண வழிச் சேவை மற்றும் பயண தவணை பஸ்களின் மூலம் பயணிகள் போக்குவரத்து தொடர்பாக போதியளவான பஸ் சேவைகளை செயற்படுத்து வதற்கான ஏற்பாடுகளை வழங்குவதற்கும் அச்சேவைகளை வழங்குபவர் களுக்கிடையே சிறந்த போட்டியை உருவாக்கி நியாயமற்ற மற்றும் இலாபம் கிடைக்காத போட்டித் தன்மையை தவிர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கை மற்றும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் ஆணைக்குழுவினால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை. | இதுவரை எவ்வித வேலைத் திட்டமொன்றையும் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை. |
| 3 | இலங்கை போக்குவரத்துச் சபையின் தொழில்நுட்ப பிரிவின் மூலம் பிராந்தியங்களினூடாக | 2023 | 1. டயர்களை மீள்நிரப்பும் தொழிற் சாலையின் இயலளவினை | சாரதிகள் மற்றும் நடத்துனர் பற்றாக்குறை, பெரிய | இதுவரை அதற்காக உரிய தீர்வை தருவதற்கு முகாமைத்துவம்த |

| | | | |
|---|---|---|---|
| 5,918 பஸ்களும் மத்திய பஸ் அலுவலகத்தினதும் அதி சொகுசு சுற்றுலா போக்குவரத்து சேவையின் 85 பஸ்களுமாக மொத்தமாக 6,003 பஸகளை நாளாந்தம் சேவைக்கு வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதும் தொழில்நுட்ப பிரிவின் மூலம் ஓட்டத்திற்கு வழங்குவதற்கு முடியுமாக உள்ள பஸ்களின் அளவு 5,118 அதாவது 85.26 சதவீதம் என அவதானிக்கப்பட்டது. | அதிகரித்து சபையின் பஸ் தொகுதிக்கான டயர்களை மீள் நிரப்புதல் (Rebuild) மற்றும் மீள் உருவாக்கல் (Recap) செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல். | பழுதுபார்ப்புகளுக் காக பேருந்துகளை நிறுத்த வேண்டிய அவசியம், இயந்திரத் தொகுதிகள் இல்லாமை, சிறிய இயந்திரக் குறைபாடுகள், விபத்துக்கள், டயர்கள் மற்றும் பேட்டரிகள் இல்லாதது போன்ற காரணங்களால் பேருந்துகள் நிறுத்தப்பட்டுள்ள னதுடன், தொழிலாளர் பற்றாக்குறை இவற்றை மீட்டெடுப்பதில் தடையாக உள்ளது. | வறியிருந்தது. |
| | 2. ජාතික ගමනාගමන කොමිෂන් සභාව විසින් මගී ප්‍රවාහන අවශ්‍යතා සපුරාලීම පිණිස විද්‍යාත්මකව තීරණය කරනු ලබන පොදු කාලසටහනක් මත මගී ප්‍රවාහන අවශ්‍යතා සපුරාලීම. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | பஸ் தொகுதியை முழுமையாக செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு பிரதான தடையாக சபையில் காணப்படுகின்ற 7,786 சாரதிகளின் அளவு மற்றும் நடத்துனர்களின் அளவு 7,768 தாக்கமளித்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. நீண்டகாலமாக சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் புதிதாக சேர்த்துக்கொள்ளாமை இந்நிலைமைக்கு காரணமாக உள்ளது என்பது மேலும் அவதானிக்கப்பட்டது. | பஸ் வண்டிகளின் எரிபொருள் எரிவு தொடர்பான தரப்பரிசோதனை அவ்வப்போது மேற்கொள்ளல் மற்றும் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு முறையான கடமைச் சுற்றொன்றை தயாரித்தல் | சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறையை தவிர்ப்பதற்கு உள்ள தடை இதற்காக தாக்கமளித்துள்ளது. | சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் பற்றாக்குறையை தவிர்ப்பதற்காக புதிய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப் பட்டு வருகின்றது. |
| 5 | காணப்படுகின்ற பஸ் தொகுதியில் ஆயுட்காலம் 15 ஆண்டுகளை மிகைத்து செயற்படாதுள்ள டாடா வகையான 630 பஸ்கள், லேலன்ட் வகையான 425 பஸ்கள், ஏனைய வகையான 50 பஸ்கள் என்பனவாக 1,105 பஸ்கள் காணப்படுவதுடன் இந்த பஸ்களில் எதுவும் பாதுகாப்பு நடைமுறையின்றி டிப்போக்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்த பஸ்களில் செயற்பாட்டிற்கு சேர்த்துக் கொள்ளக் கூடிய பஸ்கள் எவை என்பது தொடர்பாக ஆராய்ந்து பார்த்து அவற்றின் தர அறிக்கையைப் பெற்று திருத்தம் செய்யும் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கு அல்லது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ள முடியாததாக ஒதுக்கி வைக்கப்பட்ட பஸ்களை கைதவிர்ப்புச் செய்வதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் | நிதி ஏற்பாடுகளை முறையாக பயன்படுத்தி பிராந்திய வேலைத் தளங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் பழைய உதிரிப் பாகங்கள் மற்றும் பஸ வண்டிகளை திருத்தம் செய்தல் மற்றும் தொழில்நுட்ப பிரிவின் ஆளணியினரை முறையாக பயன்படுத்துதல் | அறிவு மற்றும் திறன்கள் இல்லாத பதவியணியொன்று காணப்படுவதால், தேவையான தர அறிக்கைகளை முறையாகப் பெற்றுக் கொள்ளவும், பேருந்து பழுதுபார்ப்பு மற்றும் கைதவிர்ப்பு மேற்கொள்வதும் சாத்தியமற்றதாக உள்ளது. | இந்நிலைமைக்காக தற்போது சாதகமான தீர்வொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| 6 | ஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக 2022 ஆம் ஆண்டில் பொதுத் திறைசேரியினால் ரூபா 750 மில்லியன் வழங்கப்பட்டிருந்த துடன் இப்பணத்தைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்து செயற்பாட்டிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பஸ்கள் தொடர்பான எந்த அறிக்கையும் சபையிடம் இல்லாததுடன் அப்பணத்தில் ரூபா 606.31 மில்லியன் போக்குவரத்துச் சபையினால் மற்றும் ரூபா 143 மில்லியன் லக்திவ பொறியியலாளர் நிறுவனத்தின் மூலமும் செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் தயாரிப்பாக புனரமைப்புச் செய்யப்பட்ட பஸ்கள் எதுவும் அவதானிக்கப்பட்டிருக்கவில்லை. திறைசேரியின் மூலம் பஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக வழங்கப்பட்ட ரூபா 750 மில்லியன் பணம் சபையும் லக்திவ பொறியிலாளர் நிறுவனமும் இணைந்து புனரமைப்புச் செலவுகளுக்காக செலவு செய்துள்ளது என அவதானிக்கப்பட்டது. | | நிதி ஏற்பாடுகளை முறையாக பயன்படுத்தி பிராந்திய வேலைத் தளங்கள் மற்றும் டிப்போக்களின் மூலம் பழைய உதிரிப் பாகங்கள் மற்றும் பஸ வண்டிகளை திருத்தம் செய்தல் மற்றும் தொழில்நுட்ப பிரிவின் ஆளணியினரை முறையாக பயன்படுத்துதல் | மூலதனச் செலவினங்களின் கீழ் உள்ள பணம், மீண்டெழும் செலவினங்களின் கீழ் கணக்கிடப்பட்டு, பேருந்து புனரமைப்புகளுக்கு செலவிடப்பட்டுள்ள போதும் அவற்றை மூலதனமாக்குவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இந்தக் கணக்கீட்டு முறை இதுவரை மாற்றப்பட வில்லை, மேலும் திறைசேரி மூலதன ஒதுக்கீடுகள் இன்னும் மீண்டெழும் செலவுகளின் கீழ் கணக்கிடப்பட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்படுகின்றன. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 2023 ஆம் ஆண்டிற்காகவும் பொதுத் திறைசேரியினால் ரூபா 2020 மில்லியன் பணம் பஸ்களை புனரமைப்புச் செய்வதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் அப்பணத்தைப் பயன்படுத்தி புனரமைப்புச் செய்து செயற்பாட்டிற்கு சேர்த்துக் கொள்ளப்பட்ட பஸ்கள் தொடர்பான அளவினை உள்ளடக்கிய விபரம் மற்றும் அப்பணத்திலிருந்து முற்பணங்களைப் பெற்றுக் கொள்ளல் தொடர்பான மாதாந்த அறிக்கை அமைச்சினூடாக பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் திறைசேரிகள் செயற்பாட்டு திணைக்களத்திற்குப் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. | | | மூலதனச் செலவினங்களின் கீழ் உள்ள பணம், மீண்டெழும் செலவி னங்களின் கீழ் கணக்கிடப்பட்டு, பேருந்து புனரமைப்புகளுக்கு செலவிடப்பட்டுள்ள போதும் அவற்றை மூலதனமாக்கு வதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | இந்தக் கணக்கீட்டு முறை இதுவரை மாற்றப்பட வில்லை, மேலும் திறைசேரி மூலதன ஒதுக்கீடுகள் இன்னும் மீண்டெழும் செலவுகளின் கீழ் கணக்கிடப்பட்டு இலாபத்திற்கு சீராக்கம் செய்யப்படுகின்றன. |
| 8 | போக்குவரத்து சபையின் அனைத்து டிப்போ வளவுகளில் மற்றும் பிராந்திய வேலைத் தளங்களில் உள்ள நிலையங்களின் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி எண்ணைக் கழிவுகளை வெளியேற்று வதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரித்த நடைமுறை பின்பற்றப்பட வேண்டியதுடன் அதற்காக 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் மற்றும் 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்திற்கு இணங்க மத்திய சுற்றாடல அதிகார சபையிடமிருந்து | 2023 | பஸ் வண்டிகளுக்காக புகை பரிசோதனை அறிக்ரகை மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரத்தினை உரிய காலத்தில் பெற்றுக் கொள்ளல் | சில டிப்போக்கள் தவிர அநேகமான டிப்போக்கள் சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டிருக்கவில்லை சில டிப்போக்களுக்காக சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரத்தினை கோரியுள்ளன | இதுவரை சில டிப்போக்கள் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரங்களை பெற்றுக் கொள்ளவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் சபையின் 12 பிராந்தியங்களின் தரவுகளுக்கு இணங்க மேற்கூறிய பிராந்தியங் களுக்குரிய 111 டிப்போக்கள் மற்றும் வேலைத் தளங்களில் 51 டிப்போக்கள் மற்றும் வேலைத் தளங்கள் சுற்றாடல் பாதுகாப்புப் பத்திரத்தினை பெற்றுக் கொண்டிருக்காததுடன் கழிவுப் பொருட்களை சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் வெளியேற்றுவதும் இடம்பெற்றிருக்கவில்லை. | | | |
| 9 | போக்குவரத்து சபையின் பஸ் தொகுதியில் அதிக எண்ணிக்கையானவை வருமான அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளும் போது சமர்ப்பிக்க வேண்டிய புகை வெளியேற்றல் சான்றிதழினைப் (புகைப் பரிசோதனை சான்றிதழ்) பெற்றுக் கொள்ளாதிருந்துடன் பரீட்சிப்பிற்கு உட்பட்ட கண்டி பிராந்தியத்திலுள்ள 07 டிப்போக்களின் 566 பஸ்களில் 226 பஸ்களுக்காக புகை வெளியேற்றல் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில் லை. உரிய முறைப்படி புகைப் பரிசோதனை சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளாமையின் அடிப்படையில் பஸ்களினால் வெளியிடப் படுகின்ற எரிபொருட்களின் மூலம் வெளியாகின்ற பாதகமான புகை அதாவது Co,S போன்ற ஈயத் தாதுகள் | | பழைய பேருந்துகளில் இருந்து வெளியேறும் புகை காரணமாக இந்தப் பேருந்துகள் புகை சோதனைகளில் தோல்வி அடைவதால், புகை சோதனைகள் செய்யப் படாமல் கிராமப்புற சாலைகளில் அந்தப் பேருந்துகளை ஓட்டத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வாயு வெளியேற்ற நிலையங்களை நிறுவுவதற்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்ட போதிலும், அச்செயற்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. |

சுற்றாடலில் ஒன்று சேர்வதன் மூலம் புகை வெளியேறுவதன் மூலம் சுற்றாடல் மாசடைதல் இடம்பெறலாம் என்பது அவதானிக்கப்பட்டது.

## 2.23 ஏற்றுமதி விவசாயப் பயிர்களின் உற்பத்தி மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் அரச நிறுவனங்களின் பணிப்பொறுப்பினை மதிப்பீடு செய்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ஏற்றுமதி விவசாயம் பற்றிய தேசிய கொள்கையொன்றின் தேவை ஏற்றுமதி விவசாய பயிர்கள் பல்லாண்டு பயிர்களாக இருந்ததுடன் மற்றும் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்புக்கான நீண்ட கால வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயிர்செய்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்துவது அவசியமாகும். | 2023 | ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிப்பதற்கு ஏற்றுமதி விவசாயம் தொடர்பான கொள்கையினை உள்ளடக்கி விவசாயக் கொள்கை ஒன்று தயாரித்துதல். | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் வெவ்வேறு அமைச்சுக்களின் கீழ் வருவதால், அந்தந்த வரிசை அமைச்சுக்களின் விடயப் எல்லைக்கு ஏற்றவாறு நிகழ்ச்சிகளையும் செயல் நடவடிக்கைத் திட்டத்தையும் அவ்வப்போது மாற்றங்களுக்கு உட்படுத்தி திணைக்களம் உரித்தாக இருந்த விவசாய அமைச்சின் வெவ்வேறு அமைச்சுக்களின் விடயப் பரப்பிற்கு இணங்கும் வகையில் 2025-2030 ஆம் ஆண்டுக்கான தயாரிக்கப்பட்ட வரைவு விவசாயம் மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2023 ஆம் ஆண்டு முதல் கருவா அபிவிருத்தி திணைக்களத்தின | அமைச்சின் விடயப் பரப்பு மாறுபடக் கூடிய சந்தர்ப்பத்தில் ஏற்றுமதி விவசாயம் பற்றிய தேசிய கொள்கை யொன்றின் தேவை ஏற்றுமதி ஏற்றுமதி விவசாய பயிர்கள் பல்லாண்டு பயிர்களாக இருந்ததுடன் மற்றும் உற்பத்தி மற்றும் ஊக்குவிப்புக்கான நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு பயிர்செய்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்படுத்துவது அவசியமக உள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ால் கருவா அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | |
| 2 | 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு சட்டத்தினை திருத்தம் செய்தல்.<br><br>ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான விளக்கம் தெரிவித்தல் நடைமுறையில் சாத்தியப்படாமை, பணிப்பாளர் என்ற பதவி குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பணிப்பாளர் நாயகம் பதவி நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமை, விதை மற்றும் நாற்றுப் பொருட்களைக் கையாளுதல் தொடர்பில் விதைகள் சட்டத்தின் கீழ் ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகம் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தராக பெயரிடப்பட்டு இருக்காமை. செயற்பாடுகள் மிகவும் விரிவாக தெளிவாக தெரிவிக்கப்பட்டு இருக்காமை போன்ற குறைபாடுகள் உள்ளிட்ட பிரிவுகளில் திருத்தங்கள் உள்ளிட்ட ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்பு (திருத்தம்) சட்டத்தை தயாரிக்கப்பட்டு இருந்த போதிலும் சட்ட ரீதியாக சட்டம் திருத்தம் செய்வதற்கு உரிய மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | 2023 | 1992 இன் 46 ஆம் இலக்க ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டமானது ஏற்றுமதி விவசாயப் பயிர்களை ஊக்குவிக்கும் நோக்கில் மிகவும் உற்பத்தி திறனாக நடைமுறைப்படுத்தும் போது நேர்மறை திருத்த சட்டத்தில் உள்ளடக்கப்பட்டு உடனடியாக அமுல்படுத்துதல் | ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்தின் திருத்தமானது 2 கட்டங்களின் கீழ் திருத்தம் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள துடன், முதலாம் கட்டத்தின் கீழ், ஏற்றுமதி விவசாய பயிர்களின் பெயர்கள் மற்றும் வரையறை தொடர்பான திருத்தங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. இதன் படி, உரிய திருத்தங்களனி . வரைவு சட்ட வரையுனர் பெறுகை திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள துடன், அனுமதி கிடைத்த பின்னர் அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | ஏற்றுமதி விவசாய ஊக்குவிப்புச் சட்டத்தில் காணப்படும் பலவீனங்களை நீக்க சட்டம் திருத்தம் செய்யப்படவில்லை. |
| 3 | ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பாக நியமங்களைத் | 2023 | 1.ஏற்றுமதி விவசாயப் பயிர் களுக்குரிய விதை மற்றும் நாற்றுப் பொருட்களை சான்று | ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் | விதைச் சட்டம் பயன்பாட்டிற்கு வந்து 20 ஆண்டுகளுக்கு அண்மித்த |

| | | | |
|---|---|---|---|
| தயாரித்து, விதைச் சான்றுறுதிப்படுத்தும் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளன. 2003 இன் 22 ஆம் இலக்க விதைச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அது பயன்பாட்டிற்கு வந்து 20 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமொன்று கடந்து இருந்த போதும் அந்த நியமங்களை வெளியிடுவது தொடர்பக நடவடிக்கை எடுக்க்பபட்டிருக்கவில்லை | உறுப்படுத்துவதற்குத் தேவையான தொழில்நுட்ப அறிவு மற்றும் திறன் ஏற்றுமதி விவசாயத திணைக்களத்திடம் உள்ளதால் அதற்குத் தேவையான சட்ட ரீதியான அதிகாரத்தை ஏற்றுமதி விவசாயப் பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளும் வகையில் குறித்த சட்டரீதியான திருத்தங்களை உருவாக்குதல். | தொடர்பாக நியமங்களைத் தயாரித்து, விதைகளைச் அத்தாட்சிப்படுத்தும் சேவைக்கு வழங்கப்பட்டுள்ளன. . | காலமொன்று கடந்து இருந்த போதும் ஏற்றுமதி விவசாயப் பயிர்கள் தொடர்பான நியமங்களை வெளியிடுவது தொடர்பக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.24 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தல்- இலங்கையில் வலுவான மற்றும் மீளத்தக்க தேசிய பொது சுகாதார முறைமை (நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை 3.ஈ தொடர்பான) தகவல் கோருதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்தரை | கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுக்கும் நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரையின் அமுல்படுத்தல் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | “அனைத்து வயது அமைப்புக்களிலும் உள்ள அனைவருக்கும் நல்வாழ்வை ஊக்குவிக்கும் அதே வேளையில், நல்ல ஆரோக்கியமும் நீண்ட ஆயுளையும் உறுதிப்படுத்தல் என்பது நிலைபேறான அபிவிருத்தி வரைவு தேசியக் கொள்கை மற்றும் தந்திரோபத்தின் பிரகாரம், கொள்கையின் 03 வது நோக்கமாக இனங் காணப்பட்டிருந்தது, அதே நேரத்தில் 2030 இற்குள் ‘‘சர்வதேச சுகாதார பிரமாணங்களின் (IHR) முக்கிய திறன் குறிகாட்டி மற்றும் சுகாதார அவசர கால தயார் நிலையை 70 சதவீதம் வரை அதிகரிப்பது.’’ இலக்கு 3(ஈ) ஆக இனங் காணப்பட்டது. இந்தக் கொள்கை 2020 ஆம் ஆண்டின் போது அரச நிறுவனங்கள், அறிஞர்கள் மற்றும் | | நிலைபேறான அபிவிருத்தி தேசிய கொள்கை மற்றும் தந்திரோபாயத்தை தயாரிக்கும் செயற் பாட்டை துரிதப்படுத்த வேண்டும் என | அமைச்சரவை தீர்மானம் இலக்கம் அமப/20/2064/ 310/017 மற்றும் 2021.01.04 திகதிய தீர்மானத்தின்படி நிறுவப்பட்ட தேசிய வழிகாட்டுதல் குழு, 2021.02.17 ஆந் திகதி கூடி இந்த விடயத்தைப் பற்றி விவாதித்து, இதை மேலும் வரைவினை ஆய்வு செய்வதற்கான ஒரு தந்திரோபாய வழிமுறையின் அவசியத்தை சுட்டிக் காட்டியது. இந்த தேசிய கொள்கை மற்றும் மூலோபாய வரைவைத் திருத்துவதற்கு | நிலைபேறான அபிவிருத்தி கேொள்கையின் தேவைப்பாட்ென் இறுதி நிலைமைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. . |

| | | | | |
|---|---|---|---|---|
| | சிவில் சமூகத்தை உள்ளடக்கிய தரப்பினர்களுடன் கலந்துரையாடி வரைவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம் ஆண்டு வரை அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு வரைவு கொள்கை மற்றும் தந்திரோபாயங்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. ஆனால் தற்போதைய தேசிய சூழல் மற்றும் முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையில் நிலைபேறான அபிவிருத்திக்கான தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத்தை திருத்து வதற்கான தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டு உள்ளதாக நிலைபேறான அபிவிருத்தி சபை கணக்காய்விற்கு அறிவிக்கப் பட்டிருந்தது | | ஒரு தொழில்நுட்பக் குழுவை நியமிக்க முன்மொழியப்பட்ட போதிலும், இன்றுவரை பொருத்தமான எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | |
| 2 | **ජාතික සෞඛ්‍ය සභාව**<br><br>"2000 වසර වන විට සැමට සෞඛ්‍යය"යන ඉලක්කය සපුරා ගැනීමේ අරමුණු ඇතිව 1980 පෙබරවාරි 07 වැනි දින ලෝක සෞඛ්‍ය සංවිධානය සමඟ අග්‍රාමාත්‍යවරයා සහ සෞඛ්‍ය අමාත්‍යවරයා විසින් සෞඛ්‍ය සංවර්ධනය සඳහා වූ ප්‍රඥප්ති අත්සන් තබා තිබුණද එකී කාර්යයේ ප්‍රධාන | தேசிய சுகாதார சபை உடனடியாக மீண்டும் நிறுவப்பட்டு, மற்றும் சர்வதேச சுகாதார வழிகாட்டல் (HR) செயற்குழுடன் சுகாதார சபையின் தொடர்ச்சியான 3ஈ இலக்கு தொடர்பாக முக்கிய பங்குதாரர்களால் மேற்கொள்ளப்படும் | 2023 மே 19 ஆந் திகதி பிரதமரின் செயலாளர் தலைமையில், நடைபெற்ற நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கான தேசிய வழிகாட்டுதல் குழுவின் கூட்டம், அனைத்து | தேசிய சுகாதார சபையை ஸ்டதாபித்தல் இதுவரை இடம்பெற்றிருக்கவில்லை |

අරමුණයේ ඉලක්කය සාක්ෂාත් කර ගැනීම සඳහා ප්‍රධාන ප්‍රවේශය ලෙස ප්‍රාථමික සෞඛ්‍ය සේවාව විධිමත්ව පවත්වා ගනීම සඳහා ජාතික සෞඛ්‍ය සංවර්ධන ජාලයේ ප්‍රමුඛතම ආයතනය වන ජාතික සෞඛ්‍ය සභාව 1980 නොවැම්බර් මාසයේදී අග්‍රාමාත්‍යවරයාගේ සභාපතිත්වය යටතේ ස්ථාපනය කර තිබූ නමුදු ජාතික මෙන්ම උප ජාතික මට්ටම්වලදී අන්තර් ආංශික සහයෝගීතාව සඳහා දේශපාලන කැපවීම සහතික කිරීම සඳහා වූ පළමු විධිමත් යාන්ත්‍රණය එකි සභාව වුවද එම සභාව මඟින් අරමුණු හා ඉලක්ක සපුරා ගැනීම සඳහා අපේක්ෂිත කැපවීම ලැබී නොතිබුණි..

(i) ජාතික සෞඛ්‍ය සභාව සෞඛ්‍ය ගැටලු ඉහළම මට්ටමින් සාකච්ඡා කිරීම සඳහා වැදගත් වේදිකාවක් වුවද, එය 2004 සිට රැස් වී නොමැති අතර ජාතික මට්ටමින් මෙන්මඋප ජාතික මට්ටමින් අන්තර් අංශ සහයෝගීතාව සඳහා දේශපාලන කැපවීම සහතිකකිරීම සඳහා විධිමත් යාන්ත්‍රණයක් නොමැති වීමට එය හේතු වී ඇත.

(ii) ජාතික සෞඛ්‍ය සභාව වැනි ඉහළ මට්ටමේ සෞඛ්‍ය සංවර්ධන ආයතනයක් නොමැති වීම හේතුවෙන් විවිධ ජාතික මෙහෙයුම් කමිටු සහ ජාතික කාර්ය සාධක

ஒவ்வொரு நடவடிக்கைக்கும் சசுஒ வழிகாட்டல் குழுவுடனான சுகாதார சபையின . தொடர்ச்சியான சந்திப்பின மூலம் ஒத்துழைக்க வேண்டும் என.

தொடர்புடைய பங்குதாரர்களின் (16 அமைச்சுக்கள் மற்றும் நிலைபேறான வளர்ச்சி கவுன்சில்) பங்கேற்புடன், நடைபெற்றது. அந்த நேரத்தில், புதுப்பிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில், தாய்மார்கள் இறப்பு விகிதம், குழந்தை இறப்பு விகிதம், காசநோய், டெங்கு காய்ச்சல் மற்றும் மலேரியா ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்பட்டது, மேலும் இந்த அம்சங்கள் அங்கு எட்டப்பட்ட ஒப்பந்தத்தின் பிரகாரம் . .ஒவ்வொன்றின் விரிவான அறிக்கையும் நிலையான வளர்ச்சி கவுன்சிலிடம் சமர்ப்பிக்கப்பட்டது.
தேசிய சுகாதார சபை

| | | | | |
|---|---|---|---|---|
| | බලකාය කලින් කලට පිහිටුවා තිබුණි.<br><br>උදා: Covid-19 ය සාධක බලකාය, එන්නත් කාර්ය සාධක බලකාය. | | உடனடியாக மீண | |
| 3 | அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தகவல்களின் பிரகாரம் 2022 மார்ச் 31 ஆம் திகதி வரையிலான நாட்களில் இலங்கை 42,829,630 அளவிலான பல்வேறு தடுப்பூசிகளை விலைக்கு வாங்கியிருந்தது | 1.தடுப்பூசி உள்ளிட்ட அனைத்து பொருட்கள் வாங்குவதற்கும், பிரசுரித்த வழிகாட்டுதல்கள் பின்பற்றப்பட வேண்டும் அதற்கான திறமையான இருப்பு நிர்வாகக் முறைமை ஒன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரைகளின் படி, தடுப்பூசிகள் உட்பட ஏனைய ஒவ்வொரு கொள்வனவிற்கும் செயற்திறனான சரக்கு கட்டுப்பாட்டு முறையைப் பின்பற்றுவதற்கும் ,நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பெறுகையை நிர்ணத்து மேற்கொள்வதற்கும்.மேலதிக செயலாளர் (பெறுகை), உதவிப் பணிப்பாளர் நாயகம் (மருத்துவப் பொருட்கள்) மற்றும் தலைவர் (அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம்) ஆகியோர் ஒவ்வொரு கொள்முதலுக்கும் பெறுகை வழிகாட்டுதல்களைப் பின்பற்றி | கணக்காய்வினால் கோரப்பட்டுள்ள கோவிட்-19 தடுப்பூசி வாங்குவது தொடர்பான .மேலதிக வாங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை, பெறுகை அறிவிப்பு வெளியிடப்பட்ட விதம், ஏலதாரர்களின் எண்ணிக்கை, ஏலதாரர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான அடிப்படை, போன்ற தகவல்களை விரைவில் வழங்குமாறு செயலாளர் (நிர்வாகம்) II மற்றும் மேலதிக செயலாளர் (பெறுகை) ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. |

பெறுகை விவரம்

| தடுப்பூசியின் வகை | கொள்வனவு செய்யப்பட்ட அளவு | அலக்கிரயம் (ஐ. அ. டொலர்) | தடுப்பூசியின் கிரயம் (ரூபா. மில்லியன்) |
|---|---|---|---|
| சினோபா | 23,00 | 15 | 39,17 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ார்ம | 0,000 | | 9 | | 3 | பெறுகை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| அஸ்ட்ராஷெனிகா (கொவிஷீல்ட்) | 500,000 | 7 | 533 | 1 | 534 | |
| பைசர் | 18,999,630 | 5 | 26,034 | - | 26,034 | |
| ஸ்புட்னிக் வி மொடொனா | 330,000 | 7 | 667 | 35 | 702 | |
| மொத்தம் | 42,829630 | 10 | விபரம் இல்லை. | | 667,773 | |

சனாதிபதி செயலகத்தின் தடுப்பூசி கட்டுப்பாட்டு திரையின் பிரகாரம், 2022 செப்தெம்பர் 20 இல் உள்ளவாறு 17,655,390 (12 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மொத்த தகுதியுடைய சனத்தொகையில் வழங்கப்பட்ட கொவிட்-19 தடுப்பூசிகளின் மொத்த எண்ணிக்கை

பின் வருமாறு இருந்தன

| தடுப்பூசி டோஸ் | எண்ணிக்கை | சதவீதம் (நூற்றுக் |
|---|---|---|
| முதலாவது டோஸ் | 17,128,086 | 97 (12 6 மேற்பட்ட சனத்தெ ) |
| இரண்டாவது டோஸ் | 14,675,454 | 83 (12 6 மேற்பட்ட சனத்தெ ) |
| பூஸ்டர் | 8,172,153 | 56 (12 வயதுக்கு மேற்பட்ட சனத்தெ ) |

கொவிட் 19 தடுப்பூசியை கொள்வனவு செய்தல் தொடர்பாக கொள்வனவு செய்யப்பட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை, பெறுகை அறிவிப்பு வழங்கப்பட்ட விதம், கேள்விதாரர்களின எண்ணிக்கை, கேள்விதாரர்களை தெரிவு செய்த அடிப்படை போன்ற தகவல்களை நாங்கள் கோரியிருந்த போதிலும், கணக்காய்விற்காக அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் (SPC) உரிய தகவல்கள் வழங்கப்பட்டிருக்க வில்லை.,